பீர் முஹம்மது அப்பா-வின்

பிஸ்மில் குறமாகிய ஞான இரட்சை

மெஞ்ஞான சாகரமாகிய மேன்மைமிகு தக்கலை பீர் முஹம்மது அப்பா ஒலியுல்லாஹ் அவர்கள் அருளிய மூலமும் மஸானியாரின் விளக்கவுரையும் அடங்கியுள்ளன.

மசானி ஃபைஸியின் அகமிய விளக்க உரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

பீர் முஹம்மது அப்பா-வின் பிஸ்மில் குறமாகிய ஞான இரட்சை

பதினான்காம் ஆண்டு
இஸ்லாமிய தமிழ் இலக்கிய பெருவிழா வெளியீடு

நாள் ; ஏப்ரல் 2,3, 2010 அதிராமபட்டிணம், தஞ்சாவூர்

யா காதிர்
முராது ஹாசில்

வெளியிடு :

முச்சுடர் முத்து முஹையத்தீன்

ஆண்டகை ஞானத்திருச்சபை அரக்கட்டளை

வாலை பக்கீர் மஸ்த்தான் வலியுல்லா தர்கா சரீப்
கமுதி ரோடு, அபிராமம்.

பேராசிரியர் டாக்டர்
அட்டைப்படம் விளக்கம் - பக்கம்122
சே.மு.மு. முகமதலி
27/53, நரசிம்மபுரம், மயிலாப்பூர்,
சென்னை-600004.
9444165153

நூல் விபரப்பட்டியல்

நூலின் பெயர்	: பிஸ்மில்குரமாகிய ஞானஇரட்சை
ஆசிரியர்	: பீர்முகம்மது அப்பா ஒலியுல்லா
விளக்கஉரை	: மஸானியார்
மொழி	: தமிழ்
பதிப்பு ஆண்டு	: முதற்பதிப்பு 2010
பதிப்புரிமை	: மஸானியார்க்கே
தாள்	: வெள்ளை
நூல் வெளியீடு	: டாக்டர். ஜலாலுத்தீன் கலீப்பத்துல் காதரிய்யா முச்சுடர் முத்து முஹையத்தீன் ஆண்டகை ஞானத்திருச்சபை அறக்கட்டளை வாலை பக்கீர் மஸ்த்தான் வலியுல்லா தர்கா சரீப் கமுதி ரோடு. அபிராமம். போன் : 04576 - 265213
நூல் அளவு	: டெம்மி 1/8
புள்ளி	: 12
பக்கம்	:
பைண்டிங்	: சாதாரணக்கட்டு
விலை	: ரூ.60.00
அச்சிட்டோர்	: கிளாசிக் ஆப்செட், கடையநல்லூர்.

நூல் கிடைக்கும் இடம் :

நாகூர் ஆண்டவர் பள்ளிவாசல்
காதிரிய்யா மெஞ்ஞானசபை அறக்கட்டளை செல் : 9842861541
12/2, பண்பொழி ரோடு. பகுதாத் நகர், கடையநல்லூர். - 627 751.

டாக்டர். ஜலாலுத்தீன் கலீப்பத்துல் காதரிய்யா செல் : 94427 22539
முச்சுடர் முத்து முஹையத்தீன் ஆண்டகை ஞானத்திருச்சபை அரக்கட்டளை
வாலை பக்கீர் மஸ்த்தான் வலியுல்லா தர்கா சரீப்,
கமுதி ரோடு, அபிராமம்.

காதிரிய்யா மெஞ்ஞானதிருச்சபை அறக்கட்டளை
எண். 2, 15வது அவென்யூ பானு நகர்,
அம்பத்தூர், சென்னை - 600 053.செல் : 9444174666

மதிப்புரை

பிஸ்மில்லாஹ் வல்ஹம்துலில்லாஹ் வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ் வஅலா ஆலிஹி ஹிஸ்பில்லாஹ் இந்நூலானது மனித நேயர்களுக்கு, தூய கலிமாவினுள் அடங்கியுள்ள தத்துவ ஞானங்களை அதினுள் வாரி வழங்குவதை காணமுடிகிறது. மாணவர் மஸானி அவர்கள், மெஞ்ஞான மாமேதை பீர்முஹம்மத் அப்பா வலியுல்லாஹ் அவர்களின் "பிஸ்மில் குறம்" நூலின் மொழியாக்கத்துடன் இணைந்த பிஸ்மில் குறமாகிய ஞான இரட்சை என்ற இந்நூலுக்கு மதிப்புரை வழங்க வேண்டுமென வேண்டிக் கொண்டார்கள்.

ஞான இரட்சை என்ற நாமமே இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினால் புண்ணியம் சேர்க்கும் என்ற நம்பிக்கையை வளர்த்து விட்டது. மதிப்புரை வழங்குகிறேன்.

உண்மையில் இந்நூல் ஆன்மீக அறிவு ஞானங்களை, மெஞ்ஞான தத்துவார்த்தங்களை, கல்பு உளத்தூய்மைகளை, உலகெல்லாம் வலம் வரும் வகைகளை வகைவகையாக விளக்கியிருக்கும் பாணியே பாராட்டிற்குரியது.

பொதுவாக ஆன்மீகப் பயணமென்பது சூபியாக்கள், ஞான வானத்தை நோக்கி ஏகாந்த இறைவனை அடைய உறுதியுடன் செல்லும் உன்னத பயணமாகும். அப்புண்ணியப் பயணத்தில் அவர்களடைந்த பாக்கிய பீடங்களுக்கு ராஜ பவனி தருபவர்களாக திகழ்கிறார்கள்.

அருள்மறை வழிகண்டு குரு வழி தெரிந்தாகால்
ஆங்காப்புலி வெல்லுமோ ஷெய்ஹூனா
அப்பா

என்ற பாடலைப் போலவே அருள்மறை குர்ஆனின் நெறிமுறை தவறா நற்குருவின் துணை கிடைக்குமானால் ரப்பானியத்தின் முன் நப்ஸானியத்து தோற்றுப் போகும். ஷைதானியத்தும் சரிந்து சாய்ந்து போகும்.

இத்தகைய அற்புத ஆற்றல்களை தம் சீடர்களில் உண்டாக்க வேண்டிய கட்டாயமிருப்பதால், அந்த குருமகான் எத்தகையவராக எத்தகைய தகுதி தகமை உடையவராக இருக்க வேண்டுமென்பதையும் இந்நூலில் தெளிவுபடுத்தியிருப்பது மிகப் பொருத்தமாகும்.

ஞான மாமேதை பீர் அப்பா அவர்களின் திருவாயினால் வார்த்தை தொடுத்து பிஸ்மில் குறம் என்பதில்

அடங்கியிருக்கும் அகமிய ஞான தத்துவங்களும் கருத்தோவியங்களும் கடல் போன்றவைகளாகும் என்பது பீரப்பா அவர்களின் திருவாக்காகும்.

பிஸ்மில்லாஹ் என்பதின் உள்ளார்ந்த ஆழ்ந்த உண்மைகளையும், அதன் அட்சரங்களையும், வேத வெளிச்சத்தில் விளக்கிக் காட்டியிருப்பது தனி அலாதியான பாணியாகும்.

ஸய்யிதுனா அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள், அருள்மறை குர்ஆன் அனைத்தும் ஸூரா பாதிஹாவினுள் அடங்கியதாகும். ஸூராபாதிஹா அனைத்தும் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்ரஹீம் என்பதில் அடங்கியதாகும். பிஸ்மில்லாஹ் என்பது பே எழுத்தின் நுக்தாவிற்குள் அடங்கியதாகும் என்பது முன்கருத்திற்கு சான்றாக அமைந்திருக்கிறது.

அகர வரிசையில் அமைந்துள்ள அல்லாஹ் என்ற திருநாமத்தில் முதல்வனை குறிக்கும் முதல் எழுத்தான அலிபை கொண்டு ஆரம்பித்திருக்கும் அதே முதல்வனின் நாமத்தை குறிக்கும் பிஸ்மில்லாஹ் என்ற துவக்கத்தில் பே என்ற இரண்டாம் எழுத்தை கொண்டு துவக்கியதன் நோக்கமென்ன? என்ற வினாவிற்கு தக்க விளக்கமளித்திருப்பதும், பிஸ்மில்லாஹ் என்ற உச்சரிப்பை நாம் வணங்கும் வழிபாடுகளில் கியாம், ருகூஃ, ஸூஜூத், குஊத் போன்ற செயல்களில் எத்தனை கோணங்களில் முன்னவனான மன்னவனை உணர வேண்டும், அவனுடன் உரையாட வேண்டும் என்ற சிந்தனைச் சிறகை சுற்றி விட்டிருப்பதும் இந்நூலுக்கு இன்னும் சுவையூட்டுவதாயிருக்கிறது.

மாநபி (ஸல்) அவர்களின் மார்க்க அனுஷ்டானங்களை பேணி செயல்பட்டு வாழாதவன் தன்னை புறச்சுத்தம் செய்ய முடியாதவனாயிருப்பான். இதனால் தன்னை அகச்சுத்தம் செய்து கொள்ளவோ முற்றிலும் முடியாதவனாயிருப்பான். இத்தகையவன் உலக அலங்காரங்களில் சிக்கி அலங்கோலமாக அலைக்கழிக்கப்பட்டு கொண்டிருப்பானே தவிர தன்னை பக்குவப்படுத்தும் எண்ணத்திற்கே இடமற்றவனாகி விடுகிறான்.

மனிதன் படைக்கப்பட்டதன் லட்சியமே, படைத்தாளும் அல்லாஹ்வை அறிந்து, புரிந்து, மகிழ்ந்து, நன்றி பாராட்டி அவனை புகழ்பாடி பாவமன்னிப்பிற்காக மன்றாடி வணங்கி வர வேண்டுமென்பதற்காகத்தான் இந்த உன்னதக் குறிக்கோளை அடைய வேண்டுமானால் புறச்சுத்தமான அங்க சுத்திகளும் அகச்சுத்தியான கலக்கமற்ற உள்ளத் தெளிவும், உளத் தூய்மையும் பெற்றிருந்தாலே அந்த உன்னதக் குறிக்கோளை அடைய சாத்தியமாகும்.

இந்த அடிப்படை விதியிலிருந்து சற்றும் விதிவிலக்களிக்க முடியாததாக இருப்பதால் அந்தப் புறச்சுத்தம், அகச்சுத்தம் இவ்விரு நுணுக்கமான கண்ணும், கருத்துமான அமல்களையும் எவ்வாறு செயல்படுத்த வேண்டும். தான் எந்த நிலையில் வாழ்ந்தால் இவ்விரு புனித அமல்களையும், புண்ணியம் சேர்க்கும் வகையில் செயல்படுத்த முடியும் என்பவைகளை இந்நூலில் அதன் ஆசிரியர் அவர்கள் விளக்கி இருப்பது இந்நூலின் தனித்தன்மையை பறைசாட்டுகிறது.

குறிப்பாக மார்க்க அனுஷ்டானங்களில் எதுவும் விடுபடாமலும் மார்க்க தடையானவைகளில் எதையும் தொட்டிடாமலும் வாழும் உண்மை முஃமினானவனும் கூட தனது இந்தப் பரிசுத்த வாழ்வு சுவனத்தின் பேராசைக்காகவோ, நரகத்தின் அச்சம்பயத்திற்காகவோ இல்லாமல் அல்லாஹுத ஆலாவின் திருப்பொருத்தத்திற்காகவே அவனது அந்த பரிசுத்த அமல்கள் பிரகாசிக்க வேண்டும் என்ற உயர் தத்துவத்தை மஸானி அவர்கள் திறம்பட விளக்கியிருப்பதும் இந்த உயர்கருத்திற்கு சான்று சாற்றுவது போன்றது. வேத வேதாந்தம் எல்லாம் விட்டேறியே கடந்து

காதலித்து நின்றேனே கண்ணே

ரஹ்மானே !

குணங்குடியப்பா

கலிமாவின் பொருளின் கடாட்சு சுபீட்சத்தை கண்டறிந்து கொள்ளும் பாக்கியத்தையும், கலி என்றால் என்ன ? மா என்றால் என்ன ? என்பதையும் மாமெஞ்ஞானி பீரப்பா அவர்கள் பிரித்து விடுத்துக் காட்டியிருப்பதை ஆசிரியர்

மஸானி அவர்கள் அனைவரும் விளங்கும் வகையில் விபரித்துள்ளார்கள்.

அல்லாஹ், பிஸ்மில்லாஹ், ரஸுல் என்ற இம்மூன்ற திருநாமங்களில் அமைந்துள்ள அட்சரங்களின் வடிவில் மனித உறுப்புக்களின் படைகோலம் கோர்க்கப்பட்டிருப்பதாக சித்தரித்திருப்பதை எண்ணும் போது மிக்க வியப்பூட்டுகிறது.

அல்லாஹ் என்பதில் அலிபும், லாமும், முஹம்மது ரஸுல் என்பதின் ரேயும் லாமும் இந்த அட்சரங்களின் வடிவில் மனிதனின் உடல் கூறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இம்மூன்று திருவாசகங்களையும் முஃமினானவன் உச்சரிக்கும் போது இவன் எத்தகைய உயர் உணர்வுகளைப் பெறுகிறான். எத்தகைய உணர்ச்சிகளுக்கு உள்ளாகிறான் என்ற தத்துவக் கருத்துக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஆத்ம ஞானிகளின் வாழ்வின் லட்சியம் பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். எனது இந்த உடலே இறைவன் குடியிருக்கும் இல்லமாக இருப்பதால் அவனுக்காகவே இந்த உடல் வளர்க்கிறேன் என் தேவைகளுக்காகவோ, எனது ஆசைகள் இச்சைகளுக்காகவோ என்னுடலை நான் வளர்க்கவில்லை என்ற உண்மையை உன் உள்ளத்தில் ஏற்றி ஊடுருவ வைத்து விட்டால் உனது நப்ஸுவை அடக்கி கட்டுப்படுத்தியவனாய் இறை நெருக்கத்தையும் பெற்றவனாவாய்.

மனிதன் தன்னில் தன் அகப்பார்வையால் அல்லாஹ்வை கண்டு கொள்ள பேராசை கொள்வானானால் தனது எதார்த்த நிலையிலேயே ஐந்து திக்ருகளை கொண்டும், எட்டு மகாம்களை கொண்டும், பத்தொன்பது தத்துவங்களைக் கொண்டும், சுவாச ஓட்டத்தின் மூலம் எட்டிப்பிடிக்கும் வித்தையை மிக தெளிவாக்கியிருப்பதை படித்தறிந்து செயல்பட்டால் அவனது பேராசைப்படி கண்டுகொள்வான்.

மூலங்கட்கெல்லாம் முதல் மூலனாய் விளங்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வல்லமையைக் கூறும் மந்திரச் சொல்தான் "லாயிலாஹா இல்லல்லாஹ்" யெனதும் திருக்கலிமாவாகும். இந்தக் கலிமா யென்ற ஜோதி மனிதனின் நேந்திரத்தின் நடுவே ஒளி வட்டமாய்த் திகழ்கின்றது.

கலிமா யெனும் சொல், ஒரு கலிமா, பால், தேன், பழச்சாறு, மந்திரக்கோல் போன்றது. தமிழில் "நிரோட்டம்" யென்று கூறப்படும் இதழொட்டா ஒலி வடிவம் ஆகும். "லாயிலாஹா இல்லல்லாஹ்" மேலும் அது இடரில்லா வரிவடிவமாகும். இந்தக் கலிமாவின் மேன்மையைக் கூறவந்த, மகான் பீர் முகம்மதப்பா அவர்கள் பூசை புனஸ்காரம் செய்யும் சிலைத் தொழும்பரைப் பார்த்து.

கோவிலாவ தேதடா குளங்களாவ தேதடா
பாவியான மூடனே பாழிலே செபிக்கிறாய்
லாயிலாஹா இல்லல்லாஹ் முகம்மதுர் ரசூலுல்லாவென்
றோய்வில்லாமல் ஓதடா உயர்ந்தசொர்க்க மதுவடா

- என்று கூறுகிறார்கள். கலிமா தான் சொர்க்கத்தின் திறவுகோலாகும்.

மாதிஹுர் ரசூல், தவஞான மகா மேதை, மகான் சதக்கத்துல்லா அப்பா அவர்களாலேயே, நம்பீர் முஹம்மதப்பா அவர்கள் புகழப்பட்டார்கள். இன்னும்,

இறையருட்கவிமணி பேராசிரியர் அப்துல் கபூர் சாகிப் அவர்கள், பீர் முகம்மப்பா அவர்களை,

ஞானியுமாய் புலவருமாய் நாயகனின் நேயருமாய்
ஞானக்கண் திறக்கின்ற நல்லரிய ஷெய்குநாவாய்
காமிலுமாய் முகம்மிலுமாய் கனிவுடைய ஆஷிகுமாய்

காவலனின் ஆரிபுமாய் கௌதாகி குதுபாகி
மறைஞானத் தேனொழுகும் மாண்புடைய பீரப்பா"
- என்று புகழ்ந்துரைக்கின்றார்கள்.

அடுத்து, அப்பா அவர்களின் பாடல்கள் பற்றிப் பேராசிரியர் அவர்கள் கூறுவதாவது,

" அப்பாவின் அவைக்களத்தில் அருள்மறையே மணிவிளக்காம்
தப்பாத நபிவழியே தளராத செங்கோலாம்
ஆசிரியம் அகவிவரும் வெண்பாக்கள் விளையாடும்
கலிப்பாவோ கலகலக்கும் வஞ்சிப்பா கொஞ்சிவரும்
தொங்கல்கள் மினுமினுக்க தொடர்விருத்தத் தோடிவரும்
கண்ணிகளோ கமகமக்கும் தாழிசைகள் யாழிசைக்கும்
சந்தங்கள் முழவாக குறவஞ்சி ஆடிடுவாள்
அகஞானப் பால்சுரக்க ஆனந்தம் களித்துவரும்"
- யென்றெல்லாம் புகழ்ந்துரைத்துள்ளார்கள்.

ஆம் உண்மைதான், பல்லாயிரக்கணக்கான கவிதைகளைப் பாடி, நமக்களித்த பீரப்பா அவர்கள், ஞானத்தின் மாமேதை, தமிழகத்தின் ரூமி, தக்கோர் புகழும் தவத்துறை வேந்தர், மெய்ஞான சொரூபமாகிய காமில் ஒலி, ஆரிபு பில்லா; தென்காசியில் பிறந்து தக்கலையில் வாழும் ஷேக் பீர் முகம்மதப்பா அவர்கள் காடு, மலை, வனாந்தரம் யெனத் திரிந்த காலத்தில் பிஸ்மில் குறம், ஞான மலைவளம் முதலான நூல்களைப் பாடி ஏடுகளில் பதிப்பித்துள்ளார்கள்.

யாரும் அறிய முடியாத, சொல்ல முடியாத இஸ்முல் அஃலம் யெனும் பெரும் ரகசியம் பிஸ்மியில் அடங்கியுள்ளது. ஷரீயத்; தரீகத்; ஹகீகத்; மஹரிபத்; ஆகிய வழிகள் விளக்கப்பட்டுள்ளன. பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் - என்ற அரபு உச்சரிப்பு பத்தொன்பது எழுத்துக்களைக் கொண்டதாகும். இந்தப் பத்தொன்பது எழுத்துக்களும் வித்தியாசமான தவநிலைகளுக்குப் பாதுகாப்பை உண்டாக்கும் வல்லமை உடையன. இந்த ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் ஒவ்வொரு தாக்கமும் ஒவ்வொரு சக்தியும் உண்டு. பத்தொன்பது என்ற எண், பிற எந்த ஒரு எண்ணாலும் வகுபட முடியாத எண்ணாகும். மேலும் நரகத்தின் காவலர்களாக பத்தொன்பது மலக்குகளையே இவைன் நியமித்துள்ளான். (அல்குர்ஆன் : 74:24 முதல் 30) என்பதும் அறி'பக்கிடக்கின்றது.

பிஸ்மில் குறம், தேடக்கிடைக்காத ரத்தினத் திரவியம். அது ரசூலுல்லாஹ் அவர்கள் உலகமாந்தர் கட்குக் கூறிய மேன்மை மிகுந்த நல்வழிகளாகும்; நுண்மாண் நுழைபுலம் நிறைந்தவையாகும். அக்கருத்துக்களையே இன்பத்தமிழ் இஸ்லாம் இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப்படும் மகான் பீர முஹம்மதப்பா அவர்கள் நமக்கு, தமிழில், செய்யுள் வடிவில், அள்ளித் தந்துள்ளார்கள்.

பதினெண் சித்தர்களுள் ஒருவராகத் திகழும் மகான் பீர் முஹம்மதப்பா அவர்களின் பிஸ்மில் குறம் பகுதிக்கு, நமதூர் சித்தராகவே திகழும் மௌலவி ஹாஜா மஸானியார் அவர்கள் விளக்கவுரை தந்துள்ளார்க்ள.

கற்றாரைக் கற்றாரே காமுறுவரன்றோ!

சேவரையன்அப்துல் ஹுசைன் (தமிழாசிரியர் பணி நிறைவு)
25/23, கலந்தர் பள்ளி வாசல் தெரு, கடையநல்லூர்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன், இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி என்பதற்கேற்ப. இஸ்லாமிய மக்களிடையே இன்று வளர்ந்து வரும் புத்துணர்வினைக் கவனிக்க எவரும் தவற மாட்டார்கள்.

தமிழில் பல உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் இஸ்லாமிய அறிஞர்கள் பலர் இயற்றியிருக்கிறார்கள், அவ்வறிஞர்களில் ஒருவரான, மெய்ஞான சாகரமகிய, மேன்மைமிகு தக்லை பீர் முகம்மது அப்பா ஒலியுல்லாஹ் அவர்கள் அருளிய பிஸ்மில்குறம் என்னும் மூல நூலுக்கு மதிப்பிற்குறிய மஸானியார் அவர்கள் ஞான இரட்சை என்ற விளக்கவுரை எழதிருக்கிறார்கள் மூல நூலில் கவணிக்கவும் அறியாத அறியமுடியாத கருத்தை விளக்கவுரை மூலம் அறியச் செய்கிறார் மஸானியார் அவர்கள்

மதிப்புக்குறிய (மௌலவி காஜா முஹ்யீத்தீன் ஆலிம் மஹ்ளரி) அவர்கள் வெளியிடும் ஞானஇரட்சை என்ற நூலுக்கு மதிப்புரை சாற்றும் படி என்னைக் கட்டளையிட்டார்கள். அவர் கட்டளைப்டி ஞான இரட்சை என்ற விளக்கவுரை நூலைக் கண்ணுற்ற போது அதில் அடங்கிய மெஞ்ஞானத் தத்துவங்களை

ஊனுக்குள் மறைந்திருக்கும் உள்ளொளியாம் பரமனொளி

உள்ளொளியை உள்நோக்கி உய்த்திடவே மெய்த்தவமாம்

– என

நம் மஸானியார் (காஜா முஹ்யீத்தீன்) அவார்கள் இஸ்லாம் போற்றிய இல்லறவாழ்விலே துறவறம் கானுபர் இவர் நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் ஜனாப். சேயன் கலந்தர்மஸ்தான் சாகிப்,முகையத்தீன் பாத்திமா அவர்களின் மகனாக 08.07.1957ஆம் ஆண்டில் பிறந்தார். மஸானியார் அவர்களின்

இயற்பெயர் காஜா முஹ்யித்தீன் என்பதாகும். மஸானியார் ஞான மாமேதை தக்கலை பீர் முகம்மது அப்பாவின் "பிஸ்மில் குறம்" என்னும் நூலில் உள்ள பாடல்களில் ஈடுபாடு கொண்டு அவற்றை விளக்கும் வகையில் ''ஞான இரட்சை'' என்ற நூலை வெளியிடுகிறார்.

கலிமாவின் சிறப்பு = இந்நூலில் எல்லா வல்ல இறைவன் அல்லாஹ் என்றும் அவன் வல்லமையைக் கூறும் மந்திரச் சொல். "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலில்லாஹ் - வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முகம்மதுர் ரசூலுல்லாஹ் - முகம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராவார்''. என்னும் திருக்கலிமாவாகும். இக் கலிமா என்னும் ஜோதி மனிதனின் நேந்திரத்தில் நடுவே ஒளி வட்டமாய்த் திகழ்கின்றது.

தவநிலை: மெய்ஞானத்தின் ஏழாவது நிலை தவநிலை. இத்தவநிலையைக் கொண்டோமேயானால் இதயக் கமலத்தில் 'அல்லாஹு' என்ற ஐந்து எழுத்தும் திவ்விய பிரகாசமாய் தோன்றும்.

தத்துவநிலை : தத்துவநிலைப் பற்றி மனிதன் தத்துவத்தின் மூலம் கற்க வேண்டிய கலைகள் எல்லாம் இந்த 'பிஸ்மில் குறத்தில்' விரவிக் கிடக்கின்றன.

மெய்ஞானநிலை : குருவும் சிஷ்யனும் குடியிருக்கும் இடம்தான் அல்லாஹ்வின் இடம். ஆற்றல் எல்லாம் அறிந்த குருவும், அல்லாஹ்வின் ஆற்றல்கள் எல்லாம் அறியப்போகும் சிஷ்யனும், அல்லாஹ்வின் நேசர்களே விபரமில்லா குருவின் பிடியில் சிக்கித் தன்னை இழக்காமல் காலத்தை வீணே போக்காமல், காமிலான குருவிடம் எல்லாவற்றையும் இழந்து, அவர் கொடுக்கும் யாசகத்தை பெற்றால் அதுதான் மெய்ஞான நிலை. இந்நிலை பெற்றவன் நினைவு பெற்றவன், கலை பெற்றவன் கலையாத கலை பெற்றவன், வலையற்ற

வல்லவன், மலை பெற்றவன் மலையாதவம் பெற்றவன் என்கிறார். பாபா மஸானியார்.

இப்பாடலில் நல்ல தவத்தினால் ஜெயம் (வெற்றி) பெற முடியும் என்றும், நல்ல குரு கிடைத்தால் நம் பாக்கியம் என்றும் உவமைச் சிறப்போடு விளக்கம் கூறுகிறார் மஸானியார் அவர்கள்.

மொழிச் சிறப்பு : மொழி என்பது பேச்சு வழக்கையும், எழுத்து வழக்கையும் உள்ளடக்கியது. மொழி உண்டாவதற்குக் காரணமான ஒலிக்கூட்டமே எழுத்து. எழுத்து ஒலி வடிவம், வரி வடிவம் என இரு வகைப்படும். ஒலி வடிவம் என்பது எழுத்தை உச்சரிக்கும் போது எழும் ஒலியையும், வரி வடிவம் என்பது எழுதப்படும் வடிவத்தைக் குறிக்கும். தமிழ் எழுத்துக்களோ - இருநுற்றி நாற்பத்தி ஏழாகும். பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற அரபு எழுத்தோ பத்தொன்பது என்று எழுத்தின் சிறப்பை விளக்குகிறார் மஸானியார். 'லாஇலாஹா இல்லல்லாஹ்' என்பது இடரில்லா வரிவடிவமாகும் என்றும் கூறுகிறார்.

தமிழில் நிரோட்டம் என்று கூறப்படும் இதழொட்டா ஒலி வடிவம் என்று ஒலி வடிவச் சிறப்பையும் விளக்குகிறார் மஸானியார்.

ஞானச் சிறப்பு : அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் இந்நான்கு உறுதிப் பொருள்களுள் நான்காவது இருக்கும் வீடு பேற்றை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் தேவையாகின்றது என சைவ, வைணவ இலக்கியங்கள் சான்று பகருகின்றன. அதுபோல மஸானியாரும் ஞான இரட்சையில் “ஷரீயத், தரீகத், ஹகீகத், மஹரிபத்” ஆகியவை சூஃபிகளுக்குத் தேவையாகின்றது. இதன் மூலம் சூஃபிகள் மெய்ஞானத்தைப் பெறலாம் என்று மொழிகின்றார் மஸானியார்.

ஷரீயத் : என்பது குர்ஆன் வெளிச்சத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் ஏவல்களை ஏற்றும், விலக்கல்களை

விட்டு விலகியும் இஸ்லாமிய சன்மார்க்க விதிகளை ஏற்க்கும் வாழ்வியல் சட்டம் ஆகும்.

தரீகத்தாகிய ஞானவழி: இப்பிரபஞ்ச இயக்கங்களின் ஆக்கங்களை எல்லாம் பேராற்றலான அல்லாஹ்வைக் கொண்டுமட்டும். இயங்குகிறது என்பதை அல்லாஹ்வின் அடிமைகளான மானுடவர்க்கம் உணர்வது மற்றும் இப்பிரபஞ்சத்தின் இயக்க ஆக்கங்கள் எல்லாம் அல்லாஹ்வின் ஆற்றலின்றி இயங்காது என்பதை அடியார்கள் உணர்வது.

ஹகீகத்தாகிய ஞானம்: மனிதன் இரவலாக பெற்ற ஆக்கப்பூர்வமான இறைக்குணங்களாகிய ஜிவிதம், அறிய, நாட்டம், ஆற்றல், கேட்டல், காணல், மொழிதல், இந்த இறைப்பண்புகளை இறைவனிடமிருந்து இரவலாகப் பெற்றோம் என்பதை உணர்வது. இறை மஹோண்ணதத்தை வெளிப்படுத்தும் பீடமாக நம்மை இன்னும் நம்போன்ற பிரமாண்டமான படைப்புக்களை ஆக்கியுள்ளான் என்ற உன்மையை உணர்வது.

மஹரிபத்தாகிய முக்தி : இந்த உலகத்தில் காணப்படும் பொருள்களில் எல்லாம் அல்லாஹ்வின் உள்ளமையை அறிவுகண் கொண்டு காண்பதும் இறைவனின் இதார்த்த குணத்தை தன்னுள் உணர்ந்து லயிப்பது.

இஸ்முல் அஃஹ்லமாகிய இரகசியம் : இறைவனைப் பற்றி சூஃபிகள் அறிந்து கொள்ள கூடிய மாபெரும் இரகசியப் பொருள் " இஸ்முல் அஃஹ்லம் இந்த இஸ்முல் அஃஹ்லமானது தியான பீஷ ஒலிகளின் வழியாகத்தான் ஒலிகளை உண்டாகின்றன. இது நான்கு ஒலிகளாக பிரிந்து பல ஒலி கீற்றுக்களாக பிரிந்தன. அந்த ஒலிகளின் வழிகளாக வந்தவைதான் அர்ரஹ்மான் என்ற ஒலியாகும். பின் அந்த ஒலிகளின் தொடர்ச்சியாக அர்ரஹீம் என்ற ஒலியும் உண்டாயிற்று. இந்த இரண்டும் அல்லாஹ்வின் சிறப்பு குணங்களைக் கொண்ட ஒலி வடிவங்கள் பிஸ்மியோடு கலந்து பிஸ்மில்லாஹிர்

ரஹ்மானிர் ரஹீம் என்று தொடங்கும் இந்த மூல மந்திரத்திரத்தை அறிந்து, உணர்ந்து மெய்த்தவம் மேற்கொண்டால் அதுவே உயர்ந்த தவமாகும். இந்த பிஸ்மியின் உயிர் எழுத்துக்கள் மூன்று. அந்த மூன்றுக்குள், வேதங்களின் பொருள்கள் எல்லாம் அடங்கியுள்ளது. பிஸ்மியில் மறைந்திருக்கும் மகா இரகசியமான எழுத்தை யாரும் அறியார், அறிந்தோரும் சொல்லார். இதை அறிந்ததாக சொல்பவர் எல்லாம் அற்பரே இதுதான் இஸ்முல் அஃஹ்றலம் என்ற பெரிய இரகசியம் என்று விளக்கி வினவுகின்றார் மஸானியார்.

ஞான இரட்சை என்ற விளக்கவுரை நூலில் பல அரபுச் சொற்களை வழங்கியுள்ளார். அவற்றின் பொருளை எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் விளக்கமும் கொடுத்துள்ளார். பாக்களைப் படிக்கும் போது எளிதில் விளங்காத பொருளைப் பின்னுள்ள விளக்க உரையினைப் படித்து அறிந்து கொள்ளும் போது மனம் களிப்படைகிறது. மேன்மைமிகு தக்கலை பீர் முகம்மது அப்பா ஒலியுல்லாஹ் அவர்களிடம், மஸானியாருக்குள்ள ஈருபாடு இந்நூலில் புலனாகிறது.

இறை பக்தியை ஏற்படுத்தக் கூடிய பாடல்களுக்குப் பெயர் பெற்ற மொழி தமிழ். அத் துறையிலே தமிழ் மிகப் பண்பட்டு வந்துள்ளது. படிப்போருக்கு இறைபக்தியினை ஏற்படுத்த வல்ல, நல்ல இறை ஞானத்தை உணர்த்த வல்ல இந்த ஞான இரட்சை என்ற விளக்கவுரை நூலை இஸ்லாமியர் மட்டுமன்றித் தமிழறிஞர்களும் ஞானவான்களும் கற்று மகிழ்வராக !

மெய்ஞானக் கவிஞர் மஸானியார் அவர்களின் இப்பெரு முயற்சி சீரிய பயனை அளிக்க எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக ! ஆமீன்.

மஸானியார் அவர்கள் இதுபோன்று மெய்ஞானப் பொக்கிஷங்களை, இஸ்லாமிய இலக்கியங்களை (பாடல்களாகவோ) பண்களாகவோ, உரைகளாகவோ வெளிக்கொணர வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் பொழிவானாக ! ஆமின்.

ஒ.மு.சே. **அமீர்அம்சா பீவி** (பேராசிரியர்) தமிழ்த்துறை
நீதிபதி பஷீர் அகமது சையது பெண்கள் கல்லூரி, சென்னை - 18.

வந்தவை எல்லாம் இல்லாமையிலிருந்து வந்தவை. இருப்பவை ஒன்றே. ஏகப்பரவெளியில் அர்ஷின் மேல் அல்லாஹ் நூன்கலமாக நுண்ணியவான் வெளியானான். சப்தமற்ற அந்த சஞ்சார வேளையிலே குன்னென்ற ஒலியால்

பரவெளியில் அர்ஷ், அர்ஷின் மேல் குர்ஷ் குர்ஷின் மேல் அவன். இவை தண்ணீரின் மேல் தரங்கம் பாடின. அலையாய், அலையலையாய், கலையாய் மதுமித குணத்தோடு மாண்புடனே மனதிற்குள் மறைந்தான். பின் நினைப்பு என்ற பரவெளியில் அவனே நிதர்சனமானான். நினைப்பே எல்லாமது அர்ஷ் குர்ஷு அண்ட கோளமாக அவனே அவனான்.

பல கோலங்களால் அவனே காலத்தில் கனிந்தான். மனுவென்ற தோற்றத்தில் மானுட பூக்களில் நல்ல மணமானான். தன் நல்ல குணங்களை வெளியாக்க நபிமார்களாய், நல்லதொரு வலிமார்களாய் தன் ரகசியக் குணங்களாகத்தானே நிறைந்தான். அப்படியாக நிறைந்து நின்றவர்களில் ஒருவர்தான் மாமேதை தக்கலையின் பீர்முகம்மதப்பா என்ற மகாஞானி.

அன்னவரின் நேத்திரத்தின் நடுவே அவன் நின்ற போது கனிந்தவைகள்தான் பீர் அப்பாவின் பாடற்கோவைகள். கனிகளாய் கனிந்ததததுதான் - ஞானப் பாலாய், ஞான நடனமாய் ஞானப் பூட்டாய், ஞானமணி மாலையாய், ஞானப் புகழ்ச்சியாய், ஞான சரநூலாய், ஞான முச்சுடராய், ஞானக் குறவஞ்சியாய், ஞான ரோஸ் மீஸாக்காய், ஞான குரமாய், ஞான பிஸ்மில் குறமாய் அவன் பீர் அப்பாவின் லாமகாமில் நின்று நடனமான போது வெளியான அமுத தேன் பீர் அப்பா என்றாலே அப்பப்பா தமிழ்த்தேன். இரண்டு உதடுகள் ஒட்டிக் கொள்ளும். இந்த அர்ப்பனுக்கு அப்பாவின் பாடல்களைப் படிக்கும் வாய்ப்பவை என் அகத்துக்கும், புறத்துக்கும் ஆரணம், காரணக் குருவுமான என் எஜமான் நாகூர் ஆண்டவர் அந்த வாய்ப்பை அளித்தார். என் எஜமானின் பூரண நினைவோடு பீர் அப்பாவின் பாடல்களோடு நடந்தேன். வேத விசாலங்களோடு தமிழ் மொழியின் பீர் அப்பா அவர்களின்

படைப்புகள் இஸ்லாமிய ஞானவான்களுக்கு மன நிறைவை உண்டாக்குகின்றது என்றால் ஞானப் பாடல்களின் பரீட்சயமுடையவர்களுக்கு மட்டும் புரியும். ஒரு சமயம் பிஸ்மில் குறத்தில் என் சிந்தனை லயித்திருந்த போது என் ஆத்மாவில் தீர்க்க முடியாத ஒரு தினவு ஏற்பட்டது.

பிஸ்மில் குறம் மெத்தக் கடல் அறிவு என்பது அப்பா அவர்களின் திருவாக்கு. அந்த அமுதக் கடலில் என் சிந்தை இறங்க ஏதோ சொல்ல முடியாத ஒரு அழுத்தம் மனதை நெருக்க நெருக்க உடல் சோர்ந்து, கண் மூடி இருந்த போது ஏதோ திறந்து விட்டது போல் சில பாடல்களுக்குப் பொருள் மனதில் உதயமாயிற்று. பட்டென்று கண் விழித்து நம் சிந்தனைக்குத் தக்கவாறு தமிழில் விளக்கம் எழுதினால் என்ன ? என்ற எண்ணம் வளர வளர பிஸ்மில் குறம் விரிந்து கொண்டே சென்றது. தேடும் ஞானம் கிடைப்பதற்கு பிஸ்மில் குறம் ஒன்றே போதுமானதென்று என் மனதில் முட்டித் தெரித்தன. பிஸ்மில் குறம் என்ற இன்ப சாகரத்திற்குள் இறங்கியபோது என் உணர்வுக்குள்ளும், உடலுக்குள்ளும் ஏற்பட்ட இமாலய மாற்றத்தை நான் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். இஸ்லாமிய சித்தர்கள் எனப்படும் பகீர் என்ற தமிழ்ஞானவான்கள் பாடல்களாகத் தந்த இறைஞானங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. நமக்குத் தெரிந்த வகையில் பெருங்காப்பியங்களை 18 சிறு காப்பியங்கள் 9ம் சிற்றின்ப இலக்கிய நூல்கள் 700ம் ஆகும்.

பிற சமுதாய சித்தர்கள், ஞானிகள் என்று சொல்லப்படும் மேதைகள் தமிழ் மொழிக்குத் தந்தது பெருங்காப்பியங்கள் 5. சிறு காப்பியங்கள் 5. சிற்றின்ப இலக்கியங்கள் 96. இவை மட்டுமே நமக்குத் தெரிந்த கணக்கு. இஸ்லாமிய சூபிகள் பாடல்கள் என்ற அணிகலன்களால் தமிழ் மொழியை அலங்கரித்தவர்கள் என்று சொன்னால் தகும்.

எக்கலையைக் கற்றவனும் தக்கலையைக் கற்கவில்லையானால் நற்குணத்தின் ஞானத்தைப் பெற்றான் என்று சொல்ல முடியாது. பீரப்பா என்ற ஞானவானின் பாதம் பணிந்த இச்சிறுவன் உரை சொன்ன விதத்தில் பொருள் பிழை இருக்குமாயின் என் பீர்முகம்மது மன்னிக்க வேண்டுமென்ற பிரார்த்தனைப் பணிவோடு இந்த யாசகனின் பயணம்.

பிஸ்மில் குறம் என்ற பேரமுது தமிழ் தாய்ப்பாலாய் சுரந்து வடிந்த போது என் சிந்தனையில் ஒரு பிரளய மாற்றமே ஏற்பட்டது. நான் நின்று திரும்பும் இடமெல்லாம் பிஸ்மில் குறம் என்ற வேத முரசு என்னுள் தட்டிக் கொண்டே இருந்தது. இடி முழக்கமாய், மின்னலாய் என் மனதில் மாறி மாறி சஞ்சாரம் செய்தன.

அல்லாஹ் அமர்ந்திருக்கும் வீடான மனித இதயம் பரிசுத்தமானது இருந்தால்தான் அல்லாஹ்வின் அர்ஷ் அதில் சமமாகும். அப்போது அதில் அல்லாஹ் நிலை கொள்வான். அந்த வீட்டில் பாவம் என்ற குணம் நிரம்பி விட்டாலோ இறைவனின் இயல்பான குணம் போய் ஷைத்தானின் இடமாக மாறிவிடும். இவ்வாறான துர்குணம் கொண்டவர்களின் நாவில் தொடர்ந்து வேதம் ஓதினாலும் இரவு பகல் என்று வணக்கம் நிகழ்ந்தாலும் அவை ஷைத்தானின் செயல்களாகவே ஆகிவிடும்.

நம் ஆதிபிதாவான ஆதம் நபி அவர்களின் பாதம் பணிந்து வணங்க மறுத்த ஷைத்தானை அல்லாஹ் கோபத்தோடு தூக்கி வீசினான். அவ்வாறு வீசப்பட்ட ஷைத்தான் விசனத்தோடு வெளியானான்.

இறைவனும் ஷைத்தானும் போட்டி போட்டுக் கொண்டால் தேபாற்றுப் போபவன் ஷைத்தான் என்று விளங்கிக் கொள்ள முடியும். அப்பேற்பட்ட ஆற்றல் ஞானம் கொடுக்கப்பட்டவன்தான் ஷைத்தான் என்ற மாயன்.

மாற்று ரூபமெடுக்கும் குணம் கொண்ட ஷைத்தான் மனிதனின் உணர்வுகளிலும், ரத்த நாளங்களிலும் ஊடுருவிச் சென்று தன் பக்கம் ஈர்ப்பான். இந்த துர்குணத்தானிடமிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் சதா அவனோடு போரிட்டு அல்லாவின் உதவியால் அவனை வெற்றி கொண்ட வலிமார்களின் துணை கொண்டு தான் அவனை நாம் வென்றாக வேண்டும். ஷைத்தான் மிகப்பெரிய சூழ்ச்சிக்காரன். வேத விளக்கங்களின் மூலம் மனிதர்களைக் கெடுக்க முயன்றான். அதில் வெற்றியும் கண்டான்.

பள்ளிகள் நிரம்பின. தொழுகையாளர்கள் பள்ளிகளில் நிரம்பினார்கள் என்றாலும் அவர்களின் ஆன்மாவில் அல்லாஹ்வின் நற்குணங்கள் இல்லாமல் போயின. நபிகளாரின் கருணையும் அற்றுப் போயின.

ஈமானை இதயத்தில் சுமப்பதற்குப் பதிலாக தலைகளில் தலைப்பாகைகளை சுமந்தார்கள். ஈமான் கனத்துப் போனதால் பாவங்கள் இலேசாய் போயின. மானுடம் மலிந்து மிருகத்தனம் மூர்க்கமாயின. ஆன்மீகத்தைத் தொலைத்து விட்ட மனிதர்கள் அம்மனமானார்கள் ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் மனம் எல்லாம் ஆபாசமாய் போயின. விரக வெளிச்சத்தில் பாவங்கள் துலங்கின. புண்ணியங்கள் புதைந்து போயின.

வார்த்தைகளில் மட்டுமே அல்லாஹ் என்றும் முகம்மதென்றும் வாயாடிக் கொள்ளும் இக் கொடியவர்களைப் பார்த்து புழுங்கி கொதித்து ஒதுங்கியவர்கள்தான் வலிமார்கள். பாவம் சூழந்த மனித மிருகங்களை விட்டும் வணங்களுக்கு சென்று வாசம் செய்தார்கள். பீரப்பா அவர்களும் காடுமலையென்று பாவமற்றுப் போன இதயத்தில் அல்லாஹ் வாசஞ் செய்தான். அப்போது அல்லாஹ் அவர்களோடு பேசினான். அவன் பேசியவைதான் ஞானப் பாடல்களாக வெளிப்பட்டன. அதில் ஒன்றுதான் பிஸ்மில் குறம்.

எத்தனை முறைதான் குர்ஆனை ஓதினாலும் எத்தனை ஆண்டுகள்தான் நின்று வணங்கினாலும், எத்தனை லட்சங்கள் திக்ருகள் சொல்லி தவமேற்கொண்டாலும் நபிகளாரின் மன்னிக்கும் இயல்பும் நபிகளாரின் நிறைந்த அன்பும் அல்லாஹ்வின் நற்குணங்களும் நம்மில் வரவில்லையென்றால் அல்லாஹ்வின் ஞானத்தைப் பெற முடியாது என்பது திண்ணம்.

நம்மில் மலமாக சூழந்து நிற்கும் துர்குணங்கள் மேலெண்ணங்களாக, பேராசைகளாக, புறம் பேசுதலாக, பொறாமை கொள்ளுதலாக, இட்டுக் கட்டுதலாக, கோபங் கொள்ளுதலாக பழிவாங்குதலாக, பெருமையடித்தலாக, அகந்தை கொள்ளுதலாக, முகஸ்துதி கொள்ளுதலாக, பிறர் பாராட்டை விரும்புதலாக தன் நலம் கருதுதலாக என்பவையான 12 இயல்புகளைக் கொண்டோமேயானால் நம் மலத்தோடு வாழ்கிறோம் என்று பொருள். இந்த பண்ணிரண்டு துர்குணங்களும் நம்மை விட்டுத் தொலைந்தால்தான் குர்ஆன் வெளிச்சத்தில் ஆன்மா

பிரகாசத்துடன் சஞ்சரிக்கும்.

முதன் முதலில் அல்லாஹ்வுக்கும், ஷைத்தானுக்கும் நடந்த யுத்தம்தான் பக்ரு யுத்தம். ஷைத்தான் தோற்றுப் போனதால் கன்னாஸ் என்ற அவன் இயல்பான குணங்களோடு அல்லாஹ் என்று முழங்கும் அல்லாஹ்வின் அடியார்களோடு கொரிலா யுத்தம் தொடங்கத் திட்டமிட்டான். முகம்மதுவின் பிறப்பை அவன் அடியோடு வெறுத்தான். முகம்மதுவின் உம்மத்தவர்களுக்கு நடுவில் அவனும் முகம்மதுவின் உம்மத்தாக வெளியாகி பல தந்திரங்கள் செய்தான். அவன் தந்திரத்தில் முதலில் பலியானவர்கள் கற்றவர்களே. கற்றவர்களிடம் அவன் மிக எளிமையான முறையில் அவன் ஊடுருவிச் சென்றான். வேதத்திற்கு வேதாந்தம் நபி மொழிக்கு விளக்கம் என்ற முறையில் அவரவர்களின் யூகங்களாக அவனே விளக்கமளித்தான். கற்றவர்களின் விளக்கம் நல்லடியார்களுக்குக் கசந்தன. ஷைத்தானுக்கு ரசித்தன.

இன்னும் நபிமொழியில் குழப்பம் செய்ய இஸ்லாமிய மார்க்கச் சட்டத்தில் அவன் உமிழ்ந்த எச்சிலை பேர் தாங்கிய இஸ்லாமியர்கள் சுவைத்தார்கள். உண்மை இஸ்லாமியர்கள் வெறுத்து ஒதுங்கினார்கள்.

ஷைத்தானின் இஷ்டப்படியெல்லாம் பிரபஞ்சம் இயங்கின. குர்ஆன் மட்டுமே ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்டது ஏனென்றால் குர்ஆனை அல்லாஹ் பாதுகாக்கின்றான். இந்த குழப்பங்களிலிருந்து நாம் நம்மை பாதுகாக்க வேண்டுமென்றால் தன் நப்ஸோடும், ஷைத்தானோடும் சாதா போராடி வெற்றி கொண்ட இன்சான்காமில் என்ற பூரணத்தோடு வாழ்ந்த வலிமார்களின் பாதையை நாம் நமக்குத் தேர்வு செய்தால்தான் இறை ஈடேற்றம் என்ற மகா பெரிய ஞானத்தைப் பெற முடியும்.

பிஸ்மில் குறம் மனிதர்கள் படிக்க வேண்டி வேத நாயகனின் ரகசியங்கள் அடங்கிய ஞானப் பொக்கிசம். அந்த ஞானப் பொக்கிஷங்களை இஸ்லாமியர்கள் மயக்கத்தை நீக்கி ஞானத்தை கொடுக்க இந்த விரிவாக்கம்.

நன்கு பயன் தரும் என்று நம்புகிறேன். ஞான மகான் நயினா முகம்மது பாவலர் அவர்கள் ஞானவிளக்க உரையை தந்துள்ளார்கள். அந்த விளக்க உரையை மூலமாகக் கொண்டுதான் இந்தச் சிறியோன் சிந்தனையில் லயித்தவைகளைச் சொல்லியுள்ளேன்.

மூமின்களே : தொழுகை மூமின்களின் மிஃராஜ் என்பது நபிவாக்கு. நபிவாக்கு என்பதால் ஒவ்வொரு முஃமின்களும் மிஃரானை அடைந்தாக வேண்டும். அந்த மெஃராஜை எப்படி அடைய முடியும் என்பதை இந்த பிஸ்மில் குறம் வெளிச்சமாக்கிக் காட்டுகின்றது. கல்பில்முஃமின், அர்ஷுல்லாஹ். அர்ஷ் என்றால் என்ன ? அந்த அர்ஸில் அல்லாஹ் எப்படி அமர்ந்திருக்கிறான். அர்ஷ் எப்படியிருக்கும் என்பதையும் இந்த பிஸ்மில் குறம் வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.

கலிமா என்றால் என்ன ? கலி என்றால் என்ன ? மா என்றால் என்ன ? கலிமாவைக் காதலிக்கும் போது இதயம் கலப்பற்ற நிலையில் இருக்க வேண்டுமென்பதையும் இந்த பிஸ்மில் குறம் வெளிச்ச்ம் போட்டுக் காட்டுகின்றது. இஸ்லாம், ஈமான், ஆபித், ஆலிம், மெய்குரு, பொய்க்குரு என்ற விபரங்கள் எல்லாம் நல்ல நயத்தோடு சொல்லப்பட்டுள்ளன. ஞானம் தேடுவோருக்கு நல்லதொரு ஆசீர்வாதம்தான் இந்த பிஸ்மில் குறம். கொள்ள மட்டும் சொல்லி விட்டேன் கொய்து கொண்டு போவதற்கு காவலையும் திறந்து விட்டேன்.

ஏகப்பரம்பொருளாய் அல்லாஹ் ஈடேற்றம் என்ற வாயிலைத் திறந்து தரவும், நம் இதயம் கமலமாய்ப் பெருமானார் (ஸல்) நற்பண்புகள் நம்முன் நிறைந்து வரவும் என்பிரான் அல்லாஹ்வின் பாதார விந்தத்தில் பணிந்தவனாக பிரார்த்திக்கின்றேன்.

- மஸானியார்



சாந்தம்

சாந்தமாகவே - நின்
சன்னதியிலிந்து தியானம் செய்வதே பரமானந்தம் - மீரான்..
காந்தம்போல் கவர்ந்திடும் - நின்
ஆனந்த ஜோதியை கருத்திலிருத்தி - எந்த
கவலையும் கொள்ளாமல் சாந்தமாகவே ...

தானென்ற அகங்கார ஆணவம் கிழம்பாமல்
ஆசா பாசாத்தால் - என் மனம்
ஊசலிட்டு உழலாமல்
மோனத்திலேபூத்த ஞானத்தாமரை போல
முற்று முன் சேவடியை பற்றுடனே நினைந்து சாந்தமாகவே ...

சமர்ப்பணம்

என் ஜீவநாத ஒலி
புல்லாங்குலின் புன்னகையாக
என் எஜமான் நாகூர் பாதுஷா நாயகத்தின்
பாதார விந்த்தில் இந்த யாசகனின்
ஞானஇரட்சையை சமர்ப்பணம் செய்கிறேன்.



சதாகனம்

பார்க்குமிடத்திலெல்லாம் நாகூரார் - உந்தன்
பரவசம் மொய்க்குதய்யா குரு மீரான்.

கேட்கும் ஒலியியெல்லாம் நாகூரார் - உந்தன்
கின்னரம் கேட்குதய்யா குருமீரான்.

காற்றுக் கிடையினிலே நாகூரான் - உம்மை
கானுமிடந்தானே குரு மீரான்.

ஆசையெனும் அக்கினியில் நாகூரா - உம்மை
அனைத்திட சுகமாமோ குருமீரான்.

நேருக்கு நேராக நாகூரா - நின்னை
நிஜமாகக் காண்பதெப்போ குருமீரான்.

ஊருக்குள் மறைந்தாயோ நாகூரா - உம்மில்
உறவாடி மகிழ்வதெப்போ குருமீரான்.

யாருக்கும் தெரியாமல் நாகூரா - என்னுள்
எங்குதான் அமர்ந்தீரோ குருமீரான்.

ஒன்னும் நான் கேட்க வில்லை நாகூரா - உம்மில்
ஒன்றிட வேணுமையா குருமீரான்.

ஓர்முகமாவதற்கு நாகூரா - உம்மின்
திருமுகக்காட்சி எப்போ குருமீரான்.

குருவுக்கும் குருவான நாகூரா - சேயன்
குடிலுக்கு வருவாயோ குருமீரான்.

மஸானியாரின் இலாஹி பாடல்

அல் மதத் யாகவ்துல் அஃலம் அல் மதத் யாதஸ்தகீர்
அல் மதத் யாபீரான பீர் அல் மதத் யாமுஹையத்தீன்

லாஇலாஹா இல்லல்லாஹு
லாஇலாஹா இல்லல்லாஹு

லாஇலாஹா இல்லல்லாஹு
லாஇலாஹா இல்லல்லாஹு

அந்தல் அவ்வல் யாஇலாகி
அந்தல் ளாஹிர் யாஇலாகி

அந்தல் ஆகிர் யாஇலாகி
அந்தல் பாத்தின் யாஇலாகி

அந்தல் ஹாலிக் யாஇலாகி
அந்தல் காதிர் யாஇலாகி

அந்தல் பாரீ யாஇலாகி
அந்தல் வாசிஃ யாஇலாகி

அந்தஷ் ஷாபீ யாஇலாகி
அந்தல் காபிள் யாஇலாகி

அந்தல் காபீ யாஇலாகி
அந்தர் ராபிஃ யாஇலாகி

அந்தல் ஹாபிள் யாஇலாகி
அந்தல் பாசித் யாஇலாகி

அந்தர் ராஷித் யாஇலாகி
அந்தல் ஹாபிள் யாஇலாகி

அந்தல் ஹாளிர் யாஇலாகி
அந்தல் மாலிக் யாஇலாகி

அந்தந் நாளிர் யாஇலாகி
அந்தல் வாரிஸ் யாஇலாகி

அரபி உச்சரிப்பை கவனித்து இப்பாடலை பாடிப் பயன்பெறவும்.

குறிப்பு :
திருமெஞ்ஞான குட்குடத்தில் அல்மதத் யா அப்த்துல் காதிர் என்று தொடங்கும் பாடலின் பிழைத்திருத்தம் .
ஸைனுல்லா யா அப்துல் காதிர்
முஹையத்தீனே கல்பில் ஹாளிர்
மௌலானா லில்லாஹி பாஃதிர்
அல்மதத் யா அப்த்துல் காதிர்

بيت الهو

المـــدد ياغوث الاعـــظم	المـــدد يادســـتـــكير
المـــدد يابيران بير	المـــدد يامحى الدين
لاألـــــه الاالـلــــــه	لاألـــــه الاالـلــــــه
لاألـــــه الاالـلــــــه	لاألـــــه الاالـلــــــه
انت الاول ياالهي	انت الاخر ياالهي
انت الظاهر ياالهي	انت الباطن ياالهي
انت الخالق ياالهي	انت الباري ياالهي
انت القادر ياالهي	انت الواسع ياالهي
انت الشافي ياالهي	انت الكافي ياالهي
انت الرافع ياالهي	انت الخافض ياالهي
انت الحافظ ياالهي	انت الراشد ياالهي
انت الباسط ياالهي	انت القابض ياالهي
انت الحاضر ياالهي	انت الناظر ياالهي
انت المالك ياالهي	انت الوارث ياالهي
انت النافع ياالهي	انت الضار ياالهي
انت الماجد ياالهي	انت الواجد ياالهي

மஸ்ரானியார்ன் இலாஹி பாடல்

அல் மதத் யாகவ்துல் அஃலம் அல் மதத் யாதஸ்தகீர்
அல் மதத் யாபீரான பீர் அல் மதத் யாமுஹைஹுயத்தீன்

லாஇலாஹா இல்லல்லாஹு லாஇலாஹா இல்லல்லாஹு
லாஇலாஹா இல்லல்லாஹு லாஇலாஹா இல்லல்லாஹு

அந்தந் நாபிஃ யாஇலாகி அந்தல் ள்ளார் யாஇலாகி
அந்தல் வாஜித் யாஇலாகி அந்தல் மாஜித் யாஇலாகி

அந்தல் வாஹித் யாஇலாகி அந்தல் ஜாமிஃ யாஇலாகி
அந்தல் வாலீ யாஇலாகி அந்தல் ஹாக்கிம் யாஇலாகி

அந்தல் பானீ யாஇலாகி அந்தஸ் சானிஃ யாஇலாகி
அந்தல் ஹாதீ யாஇலாகி அந்தல் பாதீ யாஇலாகி

அந்தஷ் ஷாஹித்.யாஇலாகி அந்தல் பாயிஸ் யாஇலாகி
அந்தஸ் ஸாலிம் யாஇலாகி அந்தல் ஆகிப் யாஇலாகி

அந்தர் ராசிக் யாஇலாகி அந்தல் மானிஃ யாஇலாகி
அந்தத் தாயிம் யாஇலாகி அந்தல் பாகீ யாஇலாகி

அந்தஸ் ஸாகிப் யாஇலாகி அந்தல் வாஹிப் யாஇலாகி
அந்தல் ஹாமீ யாஇலாகி அந்தல் ஜாலீ யாஇலாகி

அந்த முஹம்மது நூறுல்லாகி வஆலி ஹில்கிராமி யாஇலாகி
அந்த ஸல்லி அலாமுகம்மது வசல்லிம் அலைஹி யாஇலாகி

அரபி உச்சரிப்பை கவனித்து இப்பாடலை பாடிப் பயன்பெறவும்.

بيت الهي

المدد ياغوث الاعظم المدد يادستكير
المدد يابيران بير المدد يامحى الدين

لاأله الاالله لاأله الاالله
لاأله الاالله لاأله الاالله

انت الواحد ياالهي انت الجامع ياالهي

انت الوالي ياالهي انت الحاكم ياالهي

انت الباني ياالهي انت الصانع ياالهي

انت الهادي ياالهي انت البادي ياالهي

انت الشاهد ياالهي انت الباعث ياالهي

انت السالم ياالهي انت العاقب ياالهي

انت الرازق ياالهي انت المانع ياالهي

انت الداءم ياالهي انت الباقي ياالهي

انت الصاحب ياالهي انت الواهب ياالهي

انت الحامي ياالهي انت الجالي ياالهي

انت محمد نورالله واله الكرام ياالهي

انت صلَّ علي محمد وسلم عليه ياالهي

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

பீர் முஹம்மது அப்பா-வின்

பிஸ்மில் குறமாகிய ஞான இரட்சை

மெஞ்ஞான சாகரமாகிய மேன்மைமிகு தக்கலை பீர் முஹம்மது அப்பா ஒலியுல்லாஹ் அவர்கள் அருளிய மூலமும் மஸானியாரின் விளக்கவுரையும் அடங்கியுள்ளன.



மசானியாரின் அகமிய விளக்க உரை

இரட்சை : காப்பு, காப்பு இடுவது, மந்திராட்சர எந்திரக் காப்பு, காவல், மீட்பு.

اول الدين معرفة الله

كلمة الشهادة

الاسلام الايمان الاحسان التقوي التوحيد

الشهادة الصلاة الصوم الزكوة الحج

اقرار باللسان	تصديق بالقلب	مشاهدة	مراقبة

شريعة طريقة حقيقة معرفة

الاسم الفعل الوصف الذات

↓ ↓ ↓ ↓

معبود مقصود موجود مشهود

↓ ↓ ↓ ↓

جسم قلب روح سر

↓ ↓ ↓ ↓

ناسوت ملكوت جبروت لاهوت

↓ ↓ ↓ ↓

جمهوت باهوت هاهوت دمكوت

பாடல் -1

அவ்வ லமைத்தபுவி யர்காய மேலறுஷு
செவ்விலிருத்தியபின் சீராக - எவ்வுயிர்க்கும்
நல்லறிவை ஈந்தவனே நானுனது பிசுமில்க்குறஞ்
சொல்ல இறையோனே துணை.

பூலோகம் வானம் வானின் மேல் அர்ஷ் செம்மையாக வடிவமைத்து சீராக எல்லா உயிர்களுக்கும் நல்லறிவை தந்தவனே உன்னுடைய பிஸ்மியை குறமாக பாட அருள் செய்ய அல்லாஹ்வே காப்பு

பாடல்-2

நினைவுடன் பொருளு நிறைந்திடும்வகையு நீதியும்
பிசுமிலினோடே
அனந்தமுந்தெரிய அஹமதருரைக்க ஆதிதன்
கிருபையினாலே
கனசயமாரும்மவுலானாருமி கழறினார் அகதியத்திலே
மனமதுமகிழ அறிவையுமறிந்து வழுத்தினார்
சதக் கத்துல்லாவே.

வேதங்கள் ஒன்றாய் சுருக்கி குர்ஆனாய் தந்தது போல் பிஸ்மியை கொண்டு குர்ஆனை சுருக்கி ஞானங்களின் பொக்கிஷமாய் வடிவமைத்து பிஸ்மி என்ற நாம நயத்துடன் நமது நபிகள் நாயகம் அருளினார்கள், அதை ஓர் கோர்வையின் வடிவமாக கோர்த்து அளவிட முடியாத ஞானப் பேழையாக அமைத்து பிஸ்மியதின் உண்மை எதார்தத்தை உலகமாந்தர் உணரும் படி வடிவமைக்க என் அகமியத்தில் மௌலானாருமி இன்னும் சேக் செய்யது சதக்கத்துல்லா அப்பாவும் அகமிய சான்று வழங்கினார்கள்.

பாடல்- 3

ஆதிபெரியோனேறப்பில் ஆலமீனேயாதி
அஹதுநிலைசமதாக ஆலநிறைந்தோனே
அஹதியத்திலுஹதியத்தும் வாகிதத்துமாகி
அருபவுருபத்துள்ளே தானல்லவோதாத்து
தாத்தல்லோ பாத்தினது லாகிறுசிபாத்து
லாகிறுக்குள் பாத்தினான் ரகசியத்தின் பொருளே
பாத்தில்லோ தோத்திரமாய் நேத்திரத்தின் கலிமா
ஆத்துமத்திற்கதுதானே ஐனென்றகலிமா.

மூலங்களுக்கெல்லாம் முதலோன் முற்றும் அறிந்தோனே உலகம் முழுதும் நிறைந்தோனே தானாய் இருந்து பின் தனித்தோனாய் தான் ஹூ வாகிய தன்னில் தான் தரித்து நூரே முஹம்மதியா எல்லா ஜீவன்களிலும் கலந்து தானாய் மலர்ந்த தல்லவோ மண்ணுலகத்தில் நிறைந்தது. அருபத்தின் வெளிப்பாடாய் ரூப ரூபமாய் நடத்தப்படும் போதெல்லாம் சிபாத்தாய் மாறும் அருபமான வெளியில் தாத்து தன்னைதான் தன்னில் நிரம்பியது நிகரற்ற பரம் பொருளேயாம். தாத் என்பது உள்ளமையின் உள்ரகசியம். சிபாத் என்பது குணங்களால் வெளியான வெளித் தோற்றம் என்பது இதை பாத்தின் லாஹிர் என்று விளங்குக. பாத்தின் என்பது உள்ரகசியங்கள் கலந்த வெளித்தோற்றத்தின் ரகசியங்களை பேசப்போகும் பாடம் இது. இந்தப்பாத்தின் ரகசியம்தான் கலிமா என்ற ஜோதி நேத்திரத்தின் நடுவே ஒளிவட்டமாய் இலங்கும்.

பாடல் - 4

ஐனென்றகலிமாவை அறிந்துளத்திற்பொதிந்து
ஆசைநடுவிருபுரமும் காபக்கவ்சைனி
காபக்கவ்சைனியதின் கருவையறியாமல்
காலமெல்லாங்கருத்தறியாப் போகுதே அல்லாஹூ
கருவுக்குள்ளே கருவான கருவையறியாமல்
காலமெல்லாம் வீண்கால மாகுதே அல்லாஹூ
உருவுக்குள்ளே யருவமில்லா துருவையறியாமல்
உலகமெல்லாங்கருத்தறியாப் போகுதே அல்லாஹூ

கலிமாவை அறிய வேண்டி உள்ளத்தில் எழும் ஆசையின் வேகத்தில் நேத்திரத்தின் நடுவை நோக்கும் போது நூரே முஹம்மதிய்யாவின் பிரகாச மெய்மை விளங்கும். காப கௌஸைனி என்பது (புருவமத்தியை சுற்றி காட்டும் ஞானிகளின் பரிபாஷை) காபகௌஸைனியின் உள்ளமை தெரியாமல் மனித குலம் கலங்குதே அல்லாஹ்.

அல்லாஹ் உருவாயிருக்கும் இந்த ஜடத்துள்ளே அருபமான கருத்தை அறியாமல் உலக மக்கள் எல்லாம் அறியாமையில் இருக்கின்றார்களே யா... அல்லாஹு.

5-வது பாடல்

கருவோடுநினைவுமொன்றா யிருப்பதறியாமல்
கனத்தஉள்ளங்கலக்கத்துக்குள்ளாகுதே அல்லாஹு
ஐனுக்குள்ளேபொருளான அகத்தினொளிதுலங்கி
ஆலமெல்லா முன்வாசம் வீசுதே அல்லாஹு
ஆதியாமுஹம்மது தன் தீன்குலந்தழைக்க
ஆண்டவனே யுதவிசெய்வாயாமீனாமீனாமீன்
ஆமீனிலை தவறாத மூமின்குலத்தோரே
ஆமினார் பெற்றெடுத்த ஆலநபி பொருட்டால்

மானுடப்பிறவியில் ரப்பு கலந்திருக்கும் விதத்தை உணராது கலக்கத்துள்ளாகுதே யாஅல்லாஹு தனித்த நிலையவனின் நிகரற்ற பிரகாசம் ஞான கண்களில் ஒளிந்திருந்து நறுமணமாகும். நடக்கும் வாழ்க்கை ஒளிமயமானவை, நாசூத் என்றால் ஜடத்துவ தோற்ற நிலை. இறைவனை இந்த நிலையில் மனிதன் மலக்குகளின் குணாதிசயங்களை தன்னுள் கொண்டு வரும். ஜபரூத்து என்பது முப்பண்புகளின் கூட்டு நிலையாகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முப்பண்புகளை அடையும் நிலையாகும். ஒரு மனிதன் நாசூத் நிலையில் இருந்து ஜபருத் நிலையை அடையும் போது இறைவனின் அருள் பெரும் கருணையால் இப்முப்பண்புகளை அடையும் போது விலாயத் அடைந்த நிலையைப் பெறுகிறார். இது சக்தி நிலை

எனவாகும் லாஹூத் என்பது சத்து பொருளின் இயக்க சித்து நிலை. உயிர், அறிவு, காற்று, நோக்கம், கேட்டல், காணல், பேசல் என்னும் இன்றியமையாத பண்புகளை கொண்ட தெய்வீகநிலைக்கு உட்பட்டு இயங்கும் நிலையாகும். ஜம்ஹூத், பாஹூத் என்பது அல்லாஹ்வின் ஆற்றல் அடங்கிய, குருமார்கள் தன்னுள் உணர்ந்து கொள்ளும் ஆனந்த நிலையாகும். ஹாஹூத், தம்ஹூத் இவையும் மேற்கூறிய பண்புகளை உணர்த்தும். உலகப்படைப்பில் ஆதியாய் உதித்த முஹம்மது (ஸல்) அவர்கள் கூட்டத்தார்கள் மீது யா அல்லாஹ் உதவி செய்வாயாக தூய்மையின் இலக்காம் ஆமினம்மாள் பெற்றெடுத்த ஆலம்நபி பொருட்டால் மூமின்கள் யாவரும் ஈமானுடன் செம்மையாக வாழ வழி அமைய திருவருள் புரிவாய்.

6-வது பாடல்

மூமீன் குலங்களனை வோருமொலியாக
முன்னவன் தன்கிருபையினாற் றன் மனமகிழ்ந்து
கத்தவனன் பாற்கடலிற் கன்ஜுல் மகுபிய்யா
உத்தகுருஸையிதிற சூலுவந்து சொன்னார்
எத்திசைக்கும் பொருள் விளக்கி யாவரும் வணங்கி
இசுலாங்குலத்திலனை வோருமொலியாக
பேர்பெருகும் பிசுமில்க்குறம் பெலனாலனைவோர்க்கும்
பீருமுஹம்மதென்போன் பிரியமன முற்றே

மூமின்களான எல்லோரும் ஞானம் பெற்ற மகான்களாக வேண்டும் என்ற நாம நயத்தோடு முதலோன் அல்லாஹ் கலிமாவை அமைத்தான். அல்லாஹ் தன்னில்தான் மகிழ்ந்துவந்து தன் கிருபையால் மோகத்தால் அவிழ்ந்து, காதல் கொண்ட நிலையில் நூரே முஹம்மதியா வெளியானது மறைவான நிலையிலிருக்கும் அல்லாஹ்வை உலகமக்கள் யாவரும் தெளிவாக விளங்கி வணங்கும் நிலையையும் அவனே வகுத்தான். தவத்தில் தன்னை அறிய சிறந்து தனித்த

தாத்தான, அல்லாஹ் என்ற அருபசக்தியை தன்னுள் உணர்ந்து ஆழ்ந்த விசாலத்தோடு நிறைவறிவோடு இஸ்லாமியர்கள் மகான்களாக விளங்கும் ஆசிர்வாதத்தை நமது நபி சொன்னார்கள் என்பதை உணர்ந்து, வழியில் ஞானம் தேடுவோர்க்கு மாதவமாய் மட்டில் அடங்கா பொருள் கொடுக்கும் இந்த பிஸ்மில் குறத்தை தக்கலையை சேர்ந்த பீர்முகம்மது என்ற ஏழை பிரியமுடன் சொல்லி தரும் பேரின்ப ஞான சாகரமாய் அமைத்து தந்தேன்.

7-வது பாடல்

ஆதியருள் தூதரையும் யார்கள் குத்துபொலியும்
அனைவோரின் அடிபணிந்து அடியேன்
தமிழுரைத்தேன்
வேதஇசுலாத்தின் குலமானவரே விள்வேன்
வெற்றியுள்ள பிசுமில்க்குறமெத்தக்கடலறிவு
அறிவான பொருள்தேடி அலைந்தலைந்துசாவார்
அறிவிருக்கும் தலமறியா ராவிவீணே போவார்
குறையாத பொருளை ரொம்பக் கொள்ளையிட ஆசை
கொள்ளையிட பொருளுமில்லை
கொடுப்பாருமில்லை.

ஆதியாய் அருள் நிறைந்த நபிகள் நாயகம் அவர்தம் வழியில் வந்து சிறந்த குத்புமார்களையும் (மகான்கள்) அடி பணிந்தவகையை அப்படியே தமிழ் மொழியில் தந்தேன். குர்ஆனை நம்பிய இஸ்லாமானவரே, வெற்றியை விளங்கும் பிஸ்மில் குரமானது எல்லாத் தத்துவங்களையும் பொதிந்த ஞானக்கடலானது. ஆலிமானவர்களே சீரான ஞான அறிவை தேடுவோர்க்கு நல்ல கொள்ளை பொருள். இதை அறியாமல் ஆயிரமாயிரம் பேர்கள் அலைந்து செத்ததுண்டு. இதை அறியாதவர்கள் யாவரும் வீணர்களே. ஞானம் என்பது அள்ளிக் குறையாத பொருள். கொள்ளையிட ஆசை கொள்வார் யாருமில்லையே. இந்த ஒவ்வொரு அச்சரத்தின் தாக்கத்தை உணர்ந்த நிலையில் மரணம் வந்தால் !

நரகின் துன்ப வேதனைக்குள்ளாகார் நரகின் நாவு பத்தொன்பது என்பதை அறிக. இந்த பத்தொன்பது அட்சரத்தின் தூய வடிவம்தான் தரீக்கத்து வாழ்வியல் சட்டம்தான் ஞான வழியில் மிக முக்கியமானதாகும் இந்த பத்தொன்பது எழுத்தின் பங்கு என்னவாகுமென்றால், பிரபஞ்சமுழுக்க வியாபித்திருக்கும் அல்லாஹ்வின் உள்ளமையை விளங்கும் மறைவான ஞானங்கள் என்பது அல்லாஹ்வின் தனியாத மோக நிலையில் பேரானந்தம் பெறும் காதலை விளங்கும் ஞானம் என்பது. அல்லாஹ்வின் மீது நாம் காதல் கொள்ளும் பொழுது ஏற்படும் போதையின் பேரானந்தம் ஒவ்வொருவரும் அவனோடு மோகிக்கும் மோகம் அந்த ஞானத்தின் ஞானம் பெற எட்டு வகையான படித்தரங்களை நாம் அறிந்தாக வேண்டும்.

8-வது பாடல்

கொள்ளையிடப் பொருள் தேடிக் குவலயத்திலைந்து
கொள்ளை கிடையாமல் மனக்குறையாலே வாடி
விள்ளாமல் துயரமதி லிறந்துபோக வேண்டாம்
வேண்டுமட்டும் கொள்ளையிட விட்டானந்த வீட்டை
அந்த வீட்டில் ரத்னமாலை அனந்தகோடி குவியல்
ஏந்தமட்டுன் கொள்ளையிட எவர்க்கு மனப்பொருத்தம்
திருடமன முள்ளவர்கள் திருக்கலிமாப் பார்த்து
திருடமட்டுந் திருடிக்கொள்ளத் திருவாக்குங்
கொடுத்தான்

கலிமா ஞானங்களை புதைபொருள்களால் குவித்திருக்கும் பேரானந்த வீடு அங்கு வேண்டுமட்டும் கொள்ளையிட கலிமா என்ற கடவுச்சீட்டு வேண்டும். இந்தக் கடவுச்சீட்டைக் கொண்டு நூரே முஹம்மதிய்யா என்ற ஒளியைக் கொண்ட அந்த ஆனந்த வீட்டின் அற்புத புதையலைக் காணலாம். விலங்கிலிருந்து விடுபட்டு இறை பொருத்தத்தோடு இறையருளுக்கேற்ற ஆனந்தப் புதையலைத் தகுதியுடையோர் பெற்றுக் கொள்ளலாம்.

9-வது பாடல்

திருடவலுவில்லாரும் தெளிந்த ஒலியாகார்
திருக்கலிமாத் தெளிவாகத் தீனவர்க்கே யுரைத்தான்
ஆராய்ந்து நினைவுடைய நிலையை அறிவீரே
அறிவுக்குள்ளே அறிவான யறிவையறிவீரே
பராபரந்தனிலே பஞ்சவண்ணமாகி
வேருதூராய்முளைத்த இதழ்வித்தை யறிவீரே
தீனவரே பிசுமிலதின் செய்தியறிவீரே
திருக்கலிமா அறுநான்கு எழுத்தையறிவீரே

திருக்கலிமாவாகிய ஞானத்தை தெளிவாகச் சொல்லியும், திருடிக் கொள்ள முடியாதவர்கள் மகான்கள் ஆகமுடியாது. நினைவு என்பது என்ன ...... நினைவு எங்கிருந்து உண்டாயின என்பதை அறிந்து பார்த்திடில் அந்த நினைவு அல்லாஹ்வின் மோகத்தால் ஏற்பட்டதை அறிவுக்கண் கொண்டு அறிந்து பார்ப்போருக்கு வேறுவேறாய் வெவ்வேறு தூராய் வேர்கள் விழைந்த வித்து தனித் தனியாய் ஐந்து வர்ணங்களைக் கொண்ட விஷயங்களை அறிவீரோ! நிலையாகிய இஸ்லாமானவரே பிஸ்மில்லாவின் விபரம் அறிவீரோ! கலிமாவின் அட்சரங்கள் இருபத்தினான்கும் தனித் தனியே ஒவ்வொரு தத்துவத்தைப் பொதிந்துள்ளது என்பதை அறிக.

10-வது பாடல்

எழுத்தெழுத்தின் பொருளுமென்ன எழுத்தினிறமென்ன
எழுத்தெல்லாம் உடலுக்குள்ளே எங்கேயெங்கேநிற்கும்
எழுத்துச் செய்யும் குணங்களென்ன எதற்குமுதலெழுத்து
எழுதாத அலிபெழுத்தி னிடத்தை அறிவீரே
தொழுகைமுரீ துஎன்ன தாலிபாவுமென்ன
துய்யவுறுப்புட ஹறுபு உறுக்காபோடேழும்
எழுவகை பொருளறியார் ஜாகிலாகுமென்ன
இதையறிந்தால்சாகிதா முசாகிதாவுமென்ன

நாம் சொல்லும் அந்த இருபத்தி நான்கு அட்சரங்கள் என்னென்ன என்பதையும், எவ்வளவு ஆற்றல் கொண்டவை என்பதையும், அவை நம் உணர்வின்

மூலமாக நம் உடலில் எவ்விதமான மாற்றத்தை உண்டாக்குகின்றது, அது எங்கே எப்படி நிர்ணயிக்கின்றது, அந்த எழுத்துக்களை உச்சரிக்கும் போது அவை என்ன குணங்கள் உண்டாக்குகின்றது, எழுத்துக்களின் மூலமான முதல் எழுத்தாகிய அலிபு என்ற எழுத்தின் பிரகாசத்தை அறிந்தீரோ ! தொழுகை தாலிபான வணக்கம் சிஷியனின் தேடல் என்பது என்ன தாக்கத்தை உண்டாக்கும். இந்த அலிபென்ற அட்சரத்தின் தூய்மை என்பதை விபரமாக தெரியாதோர் மடையன் என்பர். இதை அறிந்த அறிஞர்கள் 'ஷாஹீதா' எனப்படுவர். அறியாதோர் முழுமடையர். அவர் உலக காரியங்களை அறிந்திருந்தாலும் மூடர் என்றே விளங்குவர்.

11- வது பாடல்

முசாகிதா முறாக்கிபா முஜனாவுமென்ன
முக்கமில்லாமுவாசிலா முபாக்கியா வுமென்ன
ஏழுவகைப்பொருளு மற்றவிதத்தையெல்லா
முரைப்பேன்
இறைநாமம்பிசிமிலதின் பெருமைசொல்லக்கேளும்
பிசுமிலுடன்கலிமாவும் அலிபுநிலை மூன்றும்
வேதக்கடலாதியருள் விபரநிலைதன்னை
நீதமுடனறியார்கள் நெடுநாளும்பாரும்
நிசமாகபிசுமில்நிலைகலிமாமுரீ தறிந்தால்.

முஸாஹிதா, முராக்கிபா, முஅய்யினா, முக்கம்மிலா, முவாஸிலா, முபாக்கியா ஆகிய இந்த ஆறுபெயர்களும் தியான நிலையில் தெய்வீக ஆனந்த அரூப வெளிச்சத்தில் புலப்படும் தோற்றங்கள். இந்த தோற்ற நிலைகளை நன்கு விளங்கி ஆன்மா ஒளிரும் பொழுது பிஸ்மி என்ற யதார்த்த மேன்மை நிலை வெளியாகும். பிஸ்மி, கலிமா, அலிபுமாகிய மூன்றும் வேதக்கடலில் மூழ்கி முத்தெடுப்போர் ஞானியெனப்படுவர் அறியாதோர் பாவி எனப்படுபவர்.

12-வது பாடல்

துசுமனெனும் இபுலீசின் தோசமணுகாது
துய்யனவனருள்பெற்று சுகமாகவாழ்வீர்
நிஜமாகஈமானும் நிலைக்கும்பிசகாது
நித்தனருள் பெற்றுசுவர்க்க நெடுநாளும்வாழ்வீர்
உலகுதனிலெவருமவுத் தாகுமந்தநேரம்
உண்மையுடனோதியவர் உலகில்மவுத்தானால்
குலமிழந்துகுவலயத்தில் பாவிகளென்றாலும்
குணமான ஷஹீதுடைய கோத்திரத்திலாவார்.

விரோதியான ஷைத்தானின் துன்பம், ஞானம் தேடும் மாதவத்தோர்க்கு இந்த அட்சரத்தின் மஹா பெரிய உதவியால் எந்த துன்பமும் நிகழாது. பரிசுத்தமான அல்லாஹ்வின் துணையால் வாழ்வாங்கு வாழ்வர். நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தில் பின்வாங்காது ஈமான் (நம்பிக்கைக்கு) இறை நம்பிக்கைக்கு எந்த பங்கமும் வராது. நிரந்தரமனவனின் அருள் கொண்டு, சொர்க்க வாழ்வு வாழ்வர். உலகில் இறக்கும் பொழுது இந்தக்கலிமா என்ற அட்சரத்தை உணர்ந்து ஓதி இருந்தால் ஊரார் பாவிகள் என்று புறக்கணித்தாலும் ஷுஹதாக்கள் போல் வெற்றி கெண்டு இறந்தோரைப் போல் புனிதமாக்கப்படுவர்.

13-வது பாடல்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீ மெனப்பேசி
இயம்புவது இறைநாமம் பத்தொன்பது எழுத்தாம்
உயர்வான தோரெழுத்துக் கோரறிவு முண்டு
நிச்சயமா யறிந்திருந்து நிலத்தில் மௌத்தானால்
துட்டசணமாம் கொடுநரகம்பத்தொன்பது நாவும்
தூர்படவே நீக்கிவைக்கும் துய்யோ னருளாலே
அறிவான பத்தொன்பது விபரமறிவ தென்றல்
அழகான ஷரீஅத்துடன் அன்புதரீக்கத்தும்

நாம் மேல் சொல்லி வந்த ஒலியின் வடிவ பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற அர எழுத்தின் கணக்குபடி பத்தொன்பது எழுத்துக்கள். இ மஹாவல்லமை பொருந்திய இறையோனின் நாம

(இஸ்முல்ஆஃலமாகும்) உயர்வான இந்த ஒவ்வொரு அட்சரத்திற்கும் ஒவ்வொரு தாக்கமும் ஒவ்வொரு அறிவும் உண்டு. அழகான ஷரீஅத் அளவிட முடியாத ஹகீகத்தும், ஆனந்த கூத்தான மஹரிபத்தும் பரமனின் பிரபஞ்ச இயக்கங்களும் கொண்ட இப்பாடலில் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

14-வது பாடல்

அதுமேலே ஹக்கீகத்து மஹரிபத்து மாகும்
ஆதியுடன் முகப்பத்தென்ற முஹத்திதாத்து மாகும்
ஏறுகின்ற பர்லுநிலை யியம்பு மிதுவாகும்
ஏகமாக வணக்கநிலை யெட்டு மக்கா முண்டும்
இலங்குகின்ற நாசூத்து மியம்பு மலக்கூத்தும்
இதுமேலே ஜபறூத்து லாகூத்துமாகும்
துலங்குகின்ற ஜெம்கூத்து பாகூத்து காட்சி
துலையாத ஹாகூத்து தம் கூத்து எட்டு

இன்னும் ஹக்கீகத்து மஹரிபத்து என்ற நிலையில் நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ளும் பொருட்டு முஷாஹதா என்ற பர்ளு நிலையை ரப்பு உகந்து கொள்ளும் வகையில் வணக்கம் நிலை பெருமையானால் எட்டு மக்காம்களை அடைந்து கொள்ளும் பக்குவம் உண்டாகும். அப்போது அல்லாஹு என்ற காதலில் காதல் மோகித்து புணர்ந்து நிற்க வேண்டின் அல்லாஹுவின் ஆசீர்வாதமான அளப்பெரும் நிலைகள் அவனால் வழங்கப்படும். அந்த எட்டு மக்காம்களின் தாத்பரியங்களை நன்று உணர்ந்து காதலில் ஐக்கியப்படுவோ மேயானால் அந்த எட்டு நிலைகளில் நம்மை நாம் ஐக்கியப் படுத்திக் கொள்ளலாம். அந்த எட்டு நிலைகளாவது நாசூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாஹூத்து, ஜெம்கூத்து, பாஹூத்து, ஹாஹூத்து, தம்ஹூத்து என்பதாய் இருக்கும்.

தியானத்தை மேற்கொள்ளும் தவஞானிகள் எட்டு வகையான படித்தரங்களை அடையாள அலங்காரமாக

அணிந்து கொள்கிறார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியவை அந்த எட்டுவகையான நிலைகளையும் நம்முள் உணர்ந்து விளங்கும் போது நம்முன் உணரப்படும் அமானித ஒலிகளை கொண்டு அறிய முடியும் என்பது தெரிய வேண்டிய விஷயம் . நம் முன்னோர்களான ஞான மஹான்கள் உச்சரித்த பீஜஒலிகளை நாம் ஒலிப்பதன் மூலம் நம்முள் ஏற்படும் அல்லாஹ்வின் ஜலாலி ஜமாலி என்ற நிலைகளை நாம் உணர முடியும். சப்தம் எழுப்புவதின் மூலமுமே திக்ரு ஜலியாகும். சப்தமற்ற நிலையில் நம் நினைவை எண்ணத்திற்குள் நிலை நிறுத்தும் பொழுது மனதோடு அந்த பீஜ ஒலிகள் ஒன்றிக்கும் நினைப்பே நாம் நினைக்கும் சப்தமற்ற நிலையில் சர்குருவின் துணையோடு உயிரில் கலப்பது உன்னத நிலையாகும். இது திக்ர றூகியாகும். எண்ணத்தில் எழும்பி மணி மந்திரங்களாய் நம்முன் இலங்கும் போது நாம் மட்டும் கேட்கும் ஒலிப்பிரகாரம் நம்முள் ஏற்படும் இது திக்ர சிர்ரியாகும். நினைப்பு ஒடுக்கத்தின் பிரபஞ்சகூட்டோடு நம்முள் எழும் போது தாக்கத்தின் நினைவு சக்கரமாய் சுழலும் போது நாம் மட்டும் உணரும் பீஜஒலி அந்த ஐந்து விஷயங்களுக்கும் எட்டு நிலைகளில் பத்தொன்பது நிலைகளை கொண்டு உணர வேண்டும். இந்த பத்தொன்பது நிலைகளிலும் உணர்ந்த பின்னால் தனித்த அறிவு கொண்டு அதை சார்ந்த பிற உணர்வுகளை பிரித்து உணர வேண்டும். அப்படி பிரித்து உணரும் போது ஆன்மாக்களின் இரகசியங்கள் விளங்கும். அந்த ஆன்மாக்களின் ரகசியங்களை அறிய முற்பட வேண்டும்.

15-வது பாடல்

அலங்காரம் எட்டு மக்காம் அறியநன்றாய்ச்சொன்ன
ஐந்துவகைத் திக்கீர் முறை யறியும் வகைகேளும்
கலக்காத திக்றுஜல்லி கல்பியுடன் றூகி
காட்சி பெற்ற சிற்றியுடன் கபீயும் திக்கிர் ஐந்தும்
ஐந்துமிது வணக்கநிலை ஆரும்சொன்ன பாதை

அழகுமக்காம் சொன்ன தெட்டும் பத்தொன்பது
அறிவாம்
பத்தொன்பதை அறிந்தாலும் பிரிவறிய வேண்டும்
பாதைமக்கா முடவணக்கம் பங்குவகை கேளும்.

வணக்கத்திற்கு (தவத்திற்கு) அலங்கரிக்கப்பட்ட எட்டு நிலைகளை ஐந்து வகைகளான திக்ர் முறைகளைக் கொண்டு நாம் நம்மை சித்தம் செய்து கொள்ள வேண்டும். ஆன்மாவை சுத்தம் செய்வது திக்ர் என்ற வணக்க நிலையாகும். அவை ஐந்து திக்ரே ஜலி, திக்ரே கபி, திக்ரே கல்பி, திக்ரே றூஹீ, திக்ரே சிற்றீ இந்த ஐந்து திக்றும் பிரம்மத்தின் வாசலை கட்டக் கூடியதாகும். நம்மின் அந்தப்புறம்தான் அல்லாஹ்வின் இருப்பிடம் அவன் இருப்பிடத்தை பத்தொன்பது வணக்க நிலையைக் கொண்டு விளங்குவதே பொருத்தம். அந்த பத்தொன்பது அறிவை பிரித்துச் சொல்லும் பாடம்தான் கேளும்.

16வது பாடல்

பங்குகளு மதினுடைய பாங்கான யாது
பார்வைதனிற் றேணுவது பலன் பெறுநாட்கெடுவும்
சிங்கார மாகவெல்லாஞ் சிறப்பாக விரித்துச்
ஜெகமறிய ஸெய்யிதிற ஸுலியம்பி னாரே.

இந்தப் பங்குகளை வணக்கம், தவம் என்று உணர்ந்து இந்த நிலைகளிலிருந்து உணரும் போது மதி நுட்பமான சிந்தனையின் மௌன தேசிகருடைய திருப்பண்புகளை நோக்கின் நோக்கப்படி கிடைக்கும். காட்சியின் தோற்றம் கலப்பற்ற நிலையில் ஹக்கின் வெளிப்பாடாக அகக்கண் கொண்டு விளங்கிக் கொள்ள வேண்டியது. வணக்கங்களின் படித்தரங்களை அது அதன் பாவனைகளோடு நமது நபிகள் நாயகம் (ஸல்) படித்துச் சொன்னார்கள்.

17வது பாடல்

வித்தில்லா மாமரந்தான் முளைத்த வாறும்
விருட்சத்தில் அறுநான்கு பணறின் வாறும்
கொத்தோடே பணர்துறு கொண்ட வாறும்
குவலயத்தில் தீன்குலமாதான வாறும்
எத்தனையோ கோடியிலை யிதழின் வாறும்
எண்ணாமலே யெழுதும் பொருளின் வாறும்
பத்தோடே இரண்டுபணர் நிலைத்த வாறும்
பழமொன்று திண்ணாமல் தின்ற வாறும்
உற்றபணர் பனிரண்டி லேறு வாறும்
ஒத்தமலர் பூத்ததுவே நத்து வாறும்
சத்தமாம் நத்தினதை நத்து வாறும்
சாகாமற் சாவுமுன் சாவும் வாறும்
எத்திசையு மில்லாத ஊரின் வாறும்
எடுத்தாடும் பாம்பின் மேலேறு வாறும்
இத்தனையுங் குறையாம லறிந்தபேரை
இசுலாத்தின் குலமென்று இயம்பாலாமே.

இது படைப்பின் விதம். தொடக்கம் மூலமற்ற மூலத்திலிருந்து ஆகாயத்தை படைத்து ஆதத்தையும் படைத்தான். ஆதம், இந்த விதம் தன்னையறியவும் தன்தலைவனையறியவும் இறைவன் இருபத்துநான்கு அட்சரங்களைக் கற்றுக் கொடுத்தான். இந்த ஆதத்தின் தோற்றத்தை தூராக வேறு வேறாக, பல நூறு கூறாக அமைத்தான். அந்தக் கூறுகளில் தன்னை உவந்து தான் உவக்கும் கூறுகளை இஸ்லாமாகப் பிரித்தான் இந்த இஸ்லாமில் பலகோடி சிந்தனைகளை விரித்தான் இந்தக் கோடான கோடி நினைப்பு உதிப்புகளில் பனிரெண்டு நினைவுகளை மட்டும் நிலைக்கச்செய்தான். அந்தப் பனிரெண்டு உயிரெழுத்துக்கள் தான் நாம் திண்ணமாய் தினமும் பழகி நாவால் வாயாய் சுவைக்க முடியாத உணர்வாய் ஆன்மாவால் மட்டும் சுவைக்க முடியும் என்றமைத்தான் அந்த பனிரெண்டு நிலைகளை அடைவதின் மூலமாகத்தான் ஞானமென்ற மகா பெரிய ஞானமலர்கள் தன்னுள் பூக்கும். அந்த மலரின் வாசனையை மணமோடு நுகர முடியும் என்பது

உண்மை. அந்த தெய்வீக மலரின் மணத்தை அனுபவித்தவன் உலகில் செத்தவன் போல் ஆவான் அதாவது இறப்புக்கும் அப்பாலுள்ள மெய்ம்மையை தரிசித்தவன் என்பது இதன் பொருள். இந்த நிலைகளை அடைந்தவன் திசைகளைக் கடந்த பரவெளியில் வெளிப்படுவான் (சர்ப்பத்தின் ஓட்டத்தை) குண்டலினி சக்தியின் ஓட்டம் போன்று வியாபித்து முக்தி நிலை அடையும் போதுதான் அல்லாஹ்வின் மேற்கூறிய நிலைகள் உண்டாகும். இந்த நிலைகளை நன்கறிந்து சொன்னவரே உண்மை இஸ்லாமியர் எனப் பீர் அப்பா கூறுகிறார்கள்.

18வது பாடல்

முன்தின சரீஅத்தின் மொழிவிபரமென்றால்
முதல் கலிமாச் சொல்லி ஈமான் கொண்டி சுலாமாகி
ஆறிரண்டு பொருளறிந்து அதின் படியே நடந்து
அல்லா ஒருவன் அழியாதவனே யென்று
நிண்ணமாய் வணக்கமென்று நினைவு கொண்டு நாடி
நீதி நாகூத்தென்ற மக்காம் இடது மார்பை நோக்கி
வாயாலே யோதுலகி திக்றுமேல் நினைவாய்
வணக்கமுட னோதுவதும் வழமை யுள்ளதெல்லாம்.

கலிமா என்ற மஹா ஒலியை சொல்லி மனதால் ஏற்று இறைவன் சொல்லும் இஸ்லாம் என்ற வாழ்வியலுக்கு கட்டுப்பட்டு மேற்சொன்ன இருபத்து நான்கில் பன்னிரெண்டு மஹா ஒலியின் அட்சரத்தின் எதார்த்த அறிவையும் அறிந்து கொண்டு அல்லாஹ் என்பவன் அழிவில்லாதவன் நிரந்தரமானவன் என்பதை உணர்ந்து நாம் வணங்கும் நிலைகளில் கலிமாவை நிலைநிறுத்தி இடது மார்பில் நோக்கமாக நோக்கி வாயால் உச்சரிக்கும் மந்திர ஒலியில் நினைவை நிறுத்தி வழக்கமாக ஓதிவர வேண்டும்.

19வது பாடல்

மாயுமுன்னே மாய்கிறது மகிழ்ச்சி குரலோசை
மறைகளெல்லாம் ஓதுகிறதும் மார்க்கம் வழியாகும்
நார்புகழும் நபியிறஸுல் நடந்தசரி அத்து
நாசூத்து மக்காம் திக்கர்ஜல்லி நமக்கடையாளம்
அடையாளமுதல் வழமையாகும் சரீ அத்து
அதைசேர்ந்த ஐந்துதிக்கிற் ஐந்துயாது முண்டும்
இடது மார்பை நோக்கி வலமாகத் தலை சுழற்றி
யேற்றயிலே யிருவிழியும் புருவத்திடை நோக்கி.

அப்படி நாம் ஓதும் ஒலியானது நாம் சாதிக்க நினைக்கும் முன்னமே சாதிக்கும் வலிமை பெற்றவை நமக்கு அளிக்கப்படும் திருமறைகளும் இவ்வாறுதான் சொல்கின்றன நம் நபியவர்கள் சொல்லித் தந்த (ஷரியத்து) வழியில் தெளிவாக உள்ளது இதைத்தான் நாசூத்து ஜடத்துவநிலை என்கிறோம் இந்த ஜடத்துவ மந்திர ஒலியின் திக்ரே ஜலி என்பது தான் உண்மை அதை சார்ந்த தியான முறையில் ஐந்து முறைகள் உண்டு (இடது மார்பை நோக்கி வலமாக தலை சுற்றி இடதுமார்பின் மேல் பார்வையை நிறுத்தி வலது புறமாக மேல் நோக்கி பார்வை இரண்டும் புருவமத்தியில் நிறுத்த வேண்டும்).

20வது பாடல்

திடமாக இருநூறு யாதுமுடி வானால்
திருக்கியே தாழ்வாயிடது திமிர் நிலையிலேத்தி
மடக்கி யிருபார்வைகுறை யாமலிட மார்பில்
மகிழ்ந்தூணிப் பார்க்க அதில் மலருமொன்று தோன்றும்
தொடுக்குத் திக்றிதுநாமம் பிருக்காத்தி யாகும்
தொனியாக உன்னியே புவிநோக்கிச் செய்தால்
ஒடுக்குமுறை யிதுதானே ஓதுகிறதாகும்
உன்னியுன்னி யெழும்புவது உயர்பாச மென்பார்

அப்படி நிறுத்திக் கொண்டு நிதானமாக இருநூறு முறை ஓதும் பட்சத்தில் சுவாசத்தை நாம் இடது மார்பில் அழுத்தி நிறுத்திப்பிடித்து அந்த மந்திர ஒலியைகாதலோடு மோகித்து பார்க்கும் பட்சத்தில் மலர்

போன்று தோற்றம் ஒன்று தோன்றும் அந்த நாமம் உயிர் உள்ளதாகும் சன்னமான தொனியோடு கீழ்நோக்கிச் செய்தால் ஒழுக்கமான நிலையில் இருந்து தியானிக்கும் நிலையில் நாவு அசையும் படி உன்னி, உன்னிய நிலை நிறுத்துவது உயிர் நிலையாகும் அப்போது உலகின் ஆசாபாசங்கள் நம்மை தொந்தரவு செய்யும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

21வது பாடல்

மடக்காம லிருத்திச் செய்தால் மஃஜூபி யிதுதான்
மறுதோளிலடித்திச்சிரம் முயர்த்துவது தமரீ
முடுக்காக ஐந்து வகை யாதரியச் சொன்ன
முன்னெழுத்து மூச்சில் முடிவெழுத்தை இழுத்து யுயர்த்த

உன்னியுன்னி ஓயாமல் ஓதும்யாது ஐந்து
ஓதுவது லாயிலாஹ இல்லல்லாஹு ஒன்று
அல்லாஹு என்பதொன்று ஆதமென்பதுதொன்று
அப்புறமும் இல்லும் அஹமது முஹம்மதைந்தாம்

அசையாமல் (கல்குத்தி) சிலை போல் அமர்ந்த வண்ணம் தியானிப்பது (மஃரூபி) யான நிலை அப்போது இரு தோள் களையும் அசைப்பதன் மூலம் சிரசை மேல் நோக்கிச் செய்தல் தமரீ என்ற நிலை ஏற்றப்படும், அப்போது இந்த ஒலியின் இறுதியெழுத்தை உயர்த்தி ஓதும் விதம் ஐந்து. லாயிலாஹா இல்லல்லாஹு என்பதும், அல்லாஹும் ஆதம் என்பதும், அஹமது என்பதும், முஹம்மது என்பதும் ஐந்து வகைகளாகும்.

22வது பாடல்

அஹுமது முஹம்மதெனடறால் ஐந்து சரீஅத்தாம்
ஆறிரண்டு மாதம் தவஞ் செய்யமலர்காணும்
வகையான மலர்தெரியாத திருந்தாலுஞ் சரியே
வளமான யாதிலொன்றை வருந்தி லச்சமோதில்
ஓயாமலோ தினவர் உம்மத்தவர் நிஜமாம்
ஒழுங்காக இந்தமுறை தெளித்து வளமானால்
மாயாமல்மாயுமான துள்ளமதியோர்க்கு
மகத்தான தரீக்கத்தின் மகிமை சொல்லக்கேளும்

அஹமது முஹம்மது என்ற நாம மந்திரத்தை

காதலுடன் கலந்து மோகித்தும் உணர்வது தான் ஷரியத்தாகும் இதை சுமார் ஓர் ஆண்டு விடாமல் நிலை நிறுத்தி தவம் செய்தால் மலர் போன்று ஒன்று நம் முன் தோன்றும் ஓர்அகண்ட மலர் யென்ற தோற்றம் தெரியாமல் இருந்தால் பரவாயில்லை தியானத்தை தொடரவேண்டும் இப்படி லட்சார்ச்சனை செய்து கொண்டிருந்த ஞானவான்கள் அமானிஷயமான முறையில் நம்முடன் நட்புக் கொள்வார்கள். இப்படி இந்த முறையில் நாம் தரிப்பட்டால் ஜீவித வாழ்க்கை யெனும் குணம் பொருந்திய (தாத்தின்) ஞான வழிகளைத் தெறிந்து கொள்ளலாம்.

23வது பாடல்

அறுநான்கு பணருள் ளமரத்தின் வாறும்
அந்த மரம் வைத்தவனே உண்ட வாறும்
ஒருபத்து ரண்டுபணர் பிரிந்த வாறும்
உள்ள இதழ் துகையறிந்து ஒது வாறும்
அறுபத்துநாலுகலை யோடும் வாறும்
அட்டதிசை பொருந்தியே நிற்கும் வாறும்
மறுவாக அட்டதிசை யாடும் வாறும்
வட்டத்தில் உருவைத்து பிரிந்த வாறும்
இருவாலும் தலையொன்று இருக்கும் வாறும்
இருசுழியும் ஒருசுழியா யிலங்கம் வாறும்
உருவில்லா துருவையுறுவறிந்த வாறும்
ஓசையென்றோயாம லோது வாறும்
வாறாக வாசிவட்டமிட்ட வாறும்
வான்புவியும் காணாமல் மறைந்தவாறும்
ஆராய்ந்து இப்பொருளை சொன்ன பேரை
ஆலிமென் றுலகத்தி லறியலாமே

இருபத்தி நான்கு எழுத்துக் கொண்ட கலிமா என்ற மஹா விருட்சம். அது இருபத்து நான்கு தத்துவங்கள் என்று விளங்கும்போது மட்டுமே இறைவனை நெருங்க முடியும். அந்த இருபத்து நான்கு அட்சர ஒலிகளை மனிதர்களால் ஓதப்படும் போதும், உன்னத நிலையை உணரும் போதும் அவனைப் படைத்த அல்லாஹ்

மகிழ்ந்து நிற்கிறான். அந்த இருபத்து நான்கும் இரண்டாகப் பிரியும் போது நூரே முஹம்மதியாக அவனே மலர்கின்றான் அதை இரண்டாகப் படித்து ஓதும் போது அந்த இரண்டும் ஒன்றையொன்றில் உணருதல் மெய்த்தவம் ஆகும். மனிதன் அறுபத்து நாலு கலைகளிலும் கலந்து அவன் நிறைகின்றான் என்பதாகும். எட்டுதிக்கினும் அவன் கடந்து நிற்க்கின்றான் என்பதாகும். அந்த தியானவான் எட்டு திசைகளும் பதினாறு கோணமாக விரிந்தும் அவன் சிறக்கின்றான் என்றும், உலகம் உருண்டையிலான வடிவம் கொண்டிருப்பதால் அதில் அவனே உருளுகிறான் என்றும், உலகம் அவனாகி அதன் மத்தியில் புள்ளியென்ற நூத்தா ஒரு தலையாகவும் அதன் இருபுறமும் அதனின் வால்கள் என்பது எல்லாம் அவனே நூரே முஹம்மதியா என்ற சுழியும் அல்லாஹ் என்ற மறுசுழியும் அல்லாஹ் என்பதாகும். இப்படி தோற்றங்கள் கொண்டிருந்த போது அல்லாஹ் என்று தியானம் செய்து உள்ளத்துக்குள்ளே உறைந்து ஓட்டுவது என்பதாகும். வாசி என்ற அல்லாஹ்வின் காற்று பிரகாசமான கவசங்களால் உலகை நடத்துகின்றது என்பதாகும் அவன் முன்னால் வான்மண்டலங்களும் பூலோகம் பாதாளம் எல்லாம் ஓர்புள்ளி போன்று தோன்றி மறைகின்றது என்றும் தெளிவாக ஆராய்ந்து சொன்ன மனிதர்கள் தான் ஞானத்தை அடைந்த அறிஞர்கள் என்று அறியலாம்.

24வது பாடல்

திரமான தரீகத்தி விபரமென்ன வென்றால்
தீனான கலிமாவில் அறுநான்கு எழுத்து
பரவுடலிற் றரிக்கும்நின பறுலு பனிரண்டும்
பாங்குடைய விபரமுற்ற பான்மறையின் பொருளும்
தன்னுக்குள்ளே தனையறித் தாய்தகப்பன் பங்கும்
தவமறிய இவையறியத் தலைமைநிலை யறிய
மன்னரான நபியின்பங்கும் மலக்குகளின் பங்கும்
மற்றுமுள்ள பொருளை யெல்லாம்பிரித்து
நன்றாய்யறிந்து.

பரிசுத்த நிலை பொருந்திய அந்த கலிமாவென்ற

இருபத்து நான்கு எழுத்தும் ஞான வழியின் விபரமான விஷயங்களாகும் அந்த கலிமா என்ற தத்துவப் பொருள் உடலில் பனிரெண்டு எழுத்துக்கள் அங்கங்களாக அமைந்துள்ளன. இது முழுமறையில் சொல்லப்பட்ட மறைபொருளான விபரங்களாகும். தன்னிலையில் தரிப்பதற்கு தகப்பனின் பங்கு என்ன என்பதும், இந்த கலிமா யென்ற அட்சரம்தான் ஆதாரம்.

இருபத்து நான்கு என்ற கலிமாவின் அட்சரத்தில் நாம் தரிபட்டிருந்த தகப்பனின் பங்கும் நமக்கெல்லாம் தந்தையான நபியின் பங்கும் இன்னும் நம்மை யாட்கொண்டிருக்கும் மலக்குகளின் பங்கும் எப்படி மறைபொருளாய் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து வணங்கும் போதுதான் தரீகத் என்ற ஞானத்தை உணர முடியும்.

25வது பாடல்

கர்த்தாவே வணக்கமென்று கருத்து கொண்டுநாடி
கபீதிக்கீர் வாயினுள்ளே காதுமட்டுங் கேட்க
அல்லும்பக லோயாமல் வாயினுள்ளே திக்கீர்
அதற்கிரண் டாமான் மக்காம் மலக்கூத்திருநாசி
இருநாசி நடுநிலையி லிருபார் வையிருத்தி
யேத்தகு தறுத்துமல ரிருதயத்தி லேற்றி
பார்த்தல்லவோ வணங்கின்றது கபிதிக்கி றாகும்
பயமான தம்முநிலை பாதைவெளி காண

நாம் ஞானத்தின் மூலம் தேடிப்பெறுபவன் அல்லாஹ்தான் என்பதை நினைவில் நிறுத்தி கல்பில் தரித்த நிலையில் நிறுத்தி கபி என்ற திக்ரை நாம் காது மட்டும் கேட்கும் வண்ணம் பகல் இரவு என்று பாராமல் வாயினுள்ளே முணுமுணுத்த வண்ணம் நிலைபெற்று மலக்கூத்து நிலையில் நின்று இருநாசி முனையில் இருபார்வையை கூர்மையாய் நிறுத்தினால் மலக்கூத்தின் தியான நிலை விளங்கும் அப்போதுதான் சுவாச ஓட்டத்தின் பயமெல்லாம் நீங்கி நேரானபாதை துலக்கமாகத் தோன்றும்.

26-வது பாடல்

ஐயங்கொண் டங்கேறுகின்ற ஏணிப்படி யொன்று
ஏத்தமுள்ள தரீக்கத்தென்றே இதுவுமறி வீரே
இதுதானே தரீக்கத்தின் வண்மை நிலையாகும்
இவ்வணக்கம் செய்யுமுறை யாது வகை ஐந்தும்
இதமாக இல்லும் அல்லும் அல்லாவென்ப தொன்று
இன்னமிதே அல்லாஹு ஹக்கல்லாகு மாகும்
ஏதாகிலும் ஒருபாதை இருதயத்தில் பிடித்து
எப்போது மிகைத்தானே யெடுத்தாடும் விபரம்.

சலனமற்ற நிலையில் அல்லாஹ் வை அடைய போடப்பட்டுஇருக்கும் ஏணிப்படி போன்றுதான் படித்தரங்களை கொண்ட இந்த கலிமா படிகள் இதுதான் மிகவும் ஏற்றமான தரீகத் என்ற வழியாகும் இந்த வழியில் நிலைத்து இருக்கும் வண்ணமாக ஐந்து வகை மந்திர ஒலிகள் (திக்ரை)நாம் விளங்கிக் கொள்வது அவசியமாகும் அவைகள் இல்லும், அல்லும், அல்லாஹ்வும், அல்லாஹுவும், ஹக்கல்லாஹ்வும் இந்த ஐந்தில் ஏதேனும் ஒன்றை மனதிற்குள் நிலைப்படுத்தி தவம் செய்யவேண்டும்.

27-வது பாடல்

விபரமென்ன வாயினுள்ளே விள்ளாம லோதும்
விளம்புவதில் லவர்நினைவை விட்டுப் பிசகாமல்
இருபார்வை யிருமூக்கு நுனியிலதைப் பொருத்து
எதிராக நடுமார்பின் குழியில்விழும் விதமாம்
தளம்பாம லிருபார்வைத் தலமும்ரண்டும் பொருந்தத்
தலைமடக்கிப் பிசகாமற் றவநிலையைப் பொருத்தி
இருந்துவழி பிசகாமற் பொருந்திப்பார்த்து வருகில்
இருபார்வை நிலைதனிலே யிலங்கி மலராடும்.

நாம் தவத்தை மேற்கொள்ளும் போது நாம் உச்சரிக்கும் ஒலியும் நம் நினைவும் மாறாத விதமாகபொருத்தி இருநாசித் துவாரங்கள் நடுவில் இருபார்வையும் நாட்டி நம் மார்பின் நடுக்குழியில் நாம் ஓதும் போது மந்திரம் ஒலிக்க நினைவு கொண்டு நாம் நோக்கும் நோக்கில் நாசி நுனியை விட்டும் சற்றம்

பிசகாமல் தலைகீழாக நிறுத்தி தவறவிடா வண்ணம் அந்த இருபார்வைக் கூர்மையான நாசி நுனியில் பார்க்கில் மலர் போன்று பிரகாசிக்கும்.

28-வது பாடல்

இருநூற்றி யிருபதுமே லேறச்செய்யும் யாது
இப்படியே யிருமூன்று மாதமிதின் கெடுவாம்
உருவான தோத்திரங்கள் தெரியாத பேர்கள்
ஓதினவை ஒருநூறாயிரமு மதை ஓத
குருவா முஹம்மதின்றங் குலத்திலிசுலாமாம்
குதாஇறையே சொன்னபடி யுயர்ந்தகுல மாகும்
இதுதான் தரீக்கத்தென்றே யெடுத்து நன்றாய்ச்
சொன்னேன்
இதமாக ஹக்கீகத்தை யெடுத்துரைக்கக் கேளும்.

இருநூற்று இருபது என்ற கணக்கில் நம் சுவாசத்தின் அளவை வைத்துக் கொண்டு இரண்டு மூன்று மாதங்கள் தொடர்ந்தால் ஓர் நல்ல பிரகாசமான ஒளி தெரியும். தெரியாதோர் ஒரு லட்சம் தடவை திக்ர் செய்து கொள்ள வேண்டும் இதுதான் நமக்கெல்லாம் இஸ்லாத்தின் மூல குருவான முஹம்மது (ஸல்) அவர்கள் சொன்னபடி உயர்ந்த குலமாயிருக்கும். இதுதான் தரீகத்து என்ற ஞான பாதை என்பதை விளங்கிக் கொள்க இனி ஹக்கீகத் என்ற ஞான வழியை பார்ப்போம்.

29-வது பாடல்

குடியில்லா வீட்டில் குடிகொண்ட வாறும்
கொடிய இருளகல வொளியிலங்கும் வாறும்
அடியோடே கலையெல்லா மகன்ற வாறும்
ஐந்தெழுத்து மூன்றெழுத்தா யமைந்த வாறும்,
குடியான பேர் நிலைமையற்ற வாறும்
கொற்றவனும் குடியொன்று தனித்த வாறும்,
வடிவொன்று நிறமூன்று கிளையின் வாறும்,
வருந்தியொன்றை யொன்றுதான் வணங்கும் வாறும்
முடியாத கலையோதத் தொடர்ந்த வாறும்
முனை தப்பித் தாழ்ந்தகுலமான வாறும்,

அடியோட சாய்ந்த மரமெழுந்த வாறும்
அத்தனையும் கனியாகச் சொரிந்த வாறும்
படியாத வேதகலை பாடு வாறும்
பார்க்காமல் பார்த்ததொரு கூற்றின் வாறும்,
அடியோடே விப்பொருளைச் சொன்ன பேரை
ஆபிதென்றே யுலகத்தி லறிய லாமே.

முற்றும் துறவறம் மேற்கொண்ட மாகாஞானி குடி இருக்கும் வீட்டைக் கடந்து தான் குடிஇருக்கும் ஓர்பரவெளியை அடைந்து கொள்கிறான் அந்த மகானில் இல்லாத இருளெல்லாம் விலகி ஞானம் என்ற பிரகாசம் விரவி நிற்கின்றன. பஞ்ச பூதங்களில் இரண்டை விட்டு விலகிய நிலை தரிக்கும் போது கலைகள் எல்லாம் அவனை விட்டு விலகி தனித்தன்மை பெறுகின்றான் என்பதும் அங்கு குடித்தனம் என்ற நிலைகள் எல்லாம் நீங்கி அல்லாஹ் என்ற அரூபம் பெற்றவனோடு கூடி இருக்கின்றன என்றும் அல்லாஹ் என்ற வடிவமானது பிரபஞ்ச குணங்களாக பிரசன்னமானது என்ற கோலத்தோடு அந்தக் கோலங்கள் அவனை வணங்குகின்றன. என்ற விதமும் எல்லோரும் பார்த்து தெரிந்து கொள்ள முடியாத லவ்ஹு,கலம் என்ற மறை ஞானத்தை அறிகிறார்கள். மாகான்கள் இறப்பது போல் இருக்கும் அவர்கள் இறப்பதில்லை என்ற விதமாகும். மகான் என்ற மகா விருட்சம் மறைந்து போனாலும் பலன் கொடுக்கும் என்ற பாவங்களில் சொல்லப்பட்ட விதமாகும். பள்ளிக் கூடம் சென்று படிக்காதவர்கள் ஞானத்தைப் பெற்று அவர்கள் ஞானம் பாடுவார்கள் என்ற விதமும், கண்கள் மூடிக்கொண்டு ஞானிகள் ஞான வெளிச்சத்தை பார்த்து மகிழ்ந்து கொள்ளுபவர்கள் என்ற விதமும், சற்றும் பிசகாமல் இப்பாடலுக்கு பொருள் சொல்வோர் ஆபித் என்ற இறை வணக்கம் உள்ளவர்கள் என்று தெரிந்து கொள்.

30-வது பாடல்

வாகுடனே ஹக்கீக்கத் தென்றெவருஞ் சொல்வாரறியர்
வகைவிபரந் தெரிய நன்றாய் வகுத்து சொல்லக்கேளும்
துகையான உடலுயிரு முழுது முள்ளதெல்லாம்
துய்யவன்றன் பங்குஅல்லா தோழர் நபிபங்காம்
நகையாத நாயன்பங்கு நமக்குப் பறுலதாகும்
நாயன்றன் வணக்கமெல்லாம் நபிக்கு ஸுன்னத்தாகும்
பகையாத நபியிறஸுல் பங்கு ஸுன்னத்தாகும்
படைதத்தவனை வணங்குமது பறலுநிலை யாகும்.

ஹக்கீகத் யென்ற ஞான வழியை யாரேனும் தெளிவாக சொல்லாத அளவிற்கு தெளிவாக நான் சொல்வதை தெரிந்து கொள். நாம் படைக்கப்பட்ட இந்த தேகமென்னும் அமைப்பானது அல்லாஹ் என்ற ஒலியைக் கொண்டு, நூரே முகமதிய்யாயென்ற குணங்கள் கொண்டு, இரு பங்குகளாகப் படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் நமக்கு சொன்னது கட்டாயக் கடமை நபி நமக்கு சொன்னது அன்பான கடமை என்று விளங்குக.

31-வது பாடல்

வகையான கலிமாவில் வரிசை ரண்டு எழுத்து
வல்லவனு நபியுமென்றாய் வரைந்த உயிரெழுத்தே
ஜெகத்திலுள்ள நன்மை தின்மை சேரத்துகை யெழுத்தும்
சிங்கார மலக்குகளும் செய்தியறியா மல்
சுகமாக அவரவர்கள் செவியிலும் கேளாமல்
சொல்லாதே வாய்திரந்து சுழன்று வரு மூச்சில்
எள்ளளவும் பிசகாமல் இருதயத்தில் நினைவில்
ஏத்துவது இறைபறுலாம் இறக்க ஸுன்னத் திரஸுல்

அஷ்ஹது அன்லாயிலாக இல்லா அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் இந்த கலிமாவில் இரண்டு எழுத்துக்களில் மட்டும் உயிர் இருக்கும் அல்லாஹு என்ற சொல்லில் அலிப் என்று பொருள் கொள்க. முகம்மது என்று வரும் கலிமாவில் மீம் என்று பொருள் கொள்க. இந்த இரண்டு எழுத்துகளின் தாத்பரியத்தை மலக்குகள் கூட அறியமாட்டார்கள்

இந்த இரண்டு எழுத்துக்களின் ஓசை ரீங்காரம் மலக்குகள் கூட கேட்க முடியாது. இந்த சூட்சம எழுத்தை தன் சுவாச ஓட்டத்தில் ஏற்றி இறக்கும் போது உணரப்படும் உண்மைகளை உணர்வார்கள் நம் சுவாச ஓட்டத்தில் ஏற்றுவது அல்லா-இறக்குவது நபி முஹமதென்றும் உணர்க.

32-வது பாடல்

ஆத்துமத்தில் ஒரு மூச்சுங் கசதியுடன் போனால்
அந்தமூச்சு அச்சணமே யழிந்து மவுத்தாகும்
பாத்திரமா யொருமூச்சு யாதுதப்பிப் போனால்
படைத்தவன்றன் கிருபையுட பரமது கிட்டாதே
பாத்திரமா மூச்சியது தப்பாம லிருந்தால்
பத்தியுடன் புத்தியுள்ள பாங்குதிக்கீர் றூகு
முத்தொளிவு ஜபறூத்து மூன்றாமக்கா மாகும்
முகத்துநடுப் புருவத்திடை முறுக்கிவிழி நோக்கி.

நாம் விடுகின்ற சுவாசம் அல்லாஹ்யென்று உச்சரிக்காமல் சுவாசம் போனால் அது மரணமாய் போய் ஒன்றும் இல்லாமல் போய்விடும் நம் சுவாசம் அல்லாஹ் யென்று சொல்லி உண்மை சுவாசமாய் இருந்தால் அல்லாஹ்வை அடைய முடியும். நான் சொல்லும் தவ நிலைகளை உணர்ந்து எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வை உணர்ந்தால் பாக்கியம் பெற்ற சுவாச நிலையாகும். இந்த தியான நிலை திக்ர்றூஹீ என்று நிலை பெற்றதாகும் அதனுடைய நிலை மூன்று. இந்த நிலை பிரகாசமான நம் மூச்சின் தன்மை யை உணரும் பொருட்டு நம் பார்வை கூர்மையானதாக புருவமத்தியை நோக்கி நிலைத்திருக்க வேண்டும்.

33-வது பாடல்

ஒத்த நிலையாம் அலிபை யுவந்து மூச்சுடரை
ஓதுங்காமல் நினைவுக்குள்ளே யோர்மை நிலைநிறுத்தி
எத்தேயகாலமுமே யுறக்கமில்லா நினைவில்
இலங்குதுபார் மூச்சுடரும் இறைநபியும் ஆதம்
கத்தவனையறியும் ஹக்கிக் கத்துஜப றூத்து

காட்சிதிக்கிர் றூஹியுட கணக்கு இதுதானே
இதைச்சேர்ந்த யாதுவகை ஐந்துவித முண்டும்
எத்திறக்கம் யாக்கரீமு யாரஹ்மானு மாகும்.

எல்லா நேரமும் ஊண் உறக்கமற்ற தன்மையை நாம் பழகிக் கொண்டு பாழாய் போகாமல் நம் நினைவுகள் சிதறாமல் ஒருமைப் படுத்தி நினைவுக்குள் நம்மை நிலை நிறுத்தி அலிஃப்உடைய முச்சுடரை நோக்வோமோயானால் அல்லாஹ் நபி முஹம்மது ஆதாம் என்ற முச்சுடர் ஐபருத்து நிலையில் நம்முள் பிரகாசமாய் தோன்றும் இந்த நிலையைத்தான் திக்ரேறூஹி என்பார்கள். இந்த றூஹியில் திக்ரு ஐந்து வகைகள் உண்டு இந்த மந்திர பீஜஒலிகள் யாகரீம் யாரஹ்மானு மாயிருக்கும்.

34வது - பாடல்

மாற்றுந் தவநிற் றஹீமும் மகுப்புமாகும்
மனமகிழ்ந்து ஹக்கில் மவுஜூதோடே ஐந்தே
இதுயாது ஐந்திலொன்றே வெளியிலும் விள்ளாமல்
விடுமூச்சில் விசையா விசையேத் திறக்கம் செய்ய
இதமாக முக்கோண மாயிருந்து கொண்டு
இருமுழங்கால் மீதிலவர் இருமுழங் கையிருத்தி
விதமென்ன விற்போல வளைந்து தலைகுனிந்து
விழித்துஇரு பார்வைநடு புருவத்திடை நிறுத்தி.

இன்னும் யாரஹ்மானியாவும், மகுபூப்யாவும், மவுஜூதியாவுமாய் இருக்கும். இந்த ஐந்தின் ஒன்றை பற்றி கொண்டு யாரிடமும் இதை பற்றி எதுவும் பேசாமல் நம் சுவாச நிலையை ஒன்றுபடுத்தி நம் சுவாசத்தோடு வந்த ஒலியை ஏற்றம் இறக்கம் செய்ய வேண்டும். சுவாசத்தின் நடுவே இந்த திக்ரைபொருத்தி ஏற்ற இறக்கம் செய்தும், கும்பகம் செய்வது, மூச்சு தியானம் ஆகும். அப்போது நாம் முக்கோண வடிவில் அமர்ந்திருக்க வேண்டும். நாம் கரண்டை காலின் மேல் இரண்டு கைகளையும் கட்டி பிடித்து கொண்டு தலை

குனிந்து வில்லின் வடிவம் போல் தவத்தில் அமர்ந்து கொண்டு பார்வையை புருவ இடை நடுவே உற்று நோக்க வேண்டும்.

35வது பாடல்

இது நிலையில் அலிபான மூச்சுடரை நினைத்து
ஆடிவரும் மூச்சிலவர் யாதுநிலை தொடுத்து
இதமாக இருநூற்றி ஐம்பது யாதாகும்
இப்படியே மாதமொன்று ஏத்திறக்கஞ் செய்தால்
அதியமுள்ள முச்சுடரால் அலிபுமப்பேர் தோணும்
அந்தநிலை தெரியாம லிருந்தாலுஞ் சரியே
இந்தவீத மாயிருந்து எடுத்தோதும் யாதை
இருபத்தை யாயிரந்தா னோதிமுடி வானால்

அப்படி நாம் பார்வையைக் கூர்ந்து பார்க்கும் பொழுது, நமது சுவாச ஓட்டத்தில் அல்லாஹ், முஹம்மது, ஆதம் என்ற மூன்று மூத்த குண பரிணாமங்களை பிரபஞ்ச இயல்போடு நினைவில் பொருத்திய நிலையில் நோக்க வேண்டும். அப்பேர்பட்ட மூச்சை சற்றும் பிசகாமல் ஒருமாத காலம் பூரணமாக இறுநூற்றிஐம்பது முறை சொல்லி தவம் செய்தால் மூச்சுடரின் ஒரு தோற்றமான நிலையில் அலிஃப் என்ற வடிவில் சோதிமயமாக தோன்றும் அப்படி அலிஃப் என்ற சோதி வடிவம் தோன்றாவிடிலும் இந்த திக்ரை இருபத்து ஓராயிரம் முறை ஓதினால் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரின்ப காதல்நம்மீது ஏற்படும்.

36-வது பாடல்

முத்த முஹம்மதுதம் ஸுன்னத்து ஜமாவாம்
முஹம்மதர் தங்குலமாகு மோசமில்லை யென்று
இதுதானே ஹக்கீகத்தென்றே யெடுத்துநன்றாய்ச்
சொன்னேன்
இதமுடனே மஹரிபத்தை யினியுரைப்பதாமே.

முஹம்மது (ஸல்) அவர்களுடனும்

அண்ணலாரின் தோழர்கள் உடனும் நீ இருப்பாய் உன் தியானத்தின் முக்கியத்துவ நிலையின் அடையாளமும் இதுதான் தியானத்தின் ஹக்கித்து நிலை இதுவேயாகும். இனி மஹரீபத்து என்ற தியான நிலையை பார்க்கலாம்.

37 வது பாடல்

ஆறு நூறுயிர மொன்றான வாறும்
ஆறுகலை நூறு முன்னாடும் வாறும்
நேரெதிரே நின்றவர்கள் ஒளித்த வாறும்
நின்றவர்கள் புவிநோக்கிப் படுத்த வாறும்
பாராமற் பார்த்தபூ மலர்ந்த வாறும்
பத்துநூ றெட்டுமலர் மலர்ந்த வாறும்
வீறான இதழைந்து விரித்த வாறும்
வெண்டரளக் கோட்டைக்குடி கொண்ட வாறும்
பூரணத்தைக் காணாமல் கண்ட வாறும்
புதுமையென்ற பேர்கூடப் புகன்ற வாறும்
மாறாத மதுவெறியை குடித்த வாறும்
மந்தர்கலை யெந்திரத்தை மறந்த வாறும்
ஏறாத கொலுமீதி லேறும் வாறும்
இருபேரும் ஒரு குதிரை யேறும் வாறும்
காரணமா யிப்பொருளைச் சொன்ன பேரைக்
காமிலென் றெதிர்கொண்டு காண லாமே.

அறுநூறு (நூறு) ஆயிரம் என்பது எண்ணப்பட முடியாத ஜீவ கோடிகள் ஆகும். இவை அல்லாவின் பார்வையில் ஒன்றாகி ஆறு கலைகளும் ஒளிமயத்தோடு நின்றாடும் நேர் எதிரே நிற்பவரை பார்க்கும் நிலை உண்டாகாது. அப்போது நிற்பவர் எல்லாம் சாஸ்டாகம் என்ற நிலையில் காணப்படுவார்கள். அப்பொழுது நம் முன்னால் மஹா பிரகாசமான ஜோதிஒன்று தோன்றும். அந்த ஜோதிமயத்தை நோக்கும் போது திடீரென்று மலர்கள் மலர்ந்தது போல் செழிப்பான இதழ்களை கொண்ட மலர் வனம் போல் தோன்றும். அந்த தோற்றத்தை உற்றுநோக்கினால் ஆயிரத்து எட்டு இதழ் விரித்தவாறு ஒளியின் ஜோதி செம்மையான தோற்றமாகும். இந்த நிலையில் கண்மூடி நாம் தியானம்

செய்யும் பொழுது பூரணம் நம்முன்னே தோன்றும். அப்பொழுது முத்துக்கள் கொண்ட கோட்டையில் நாம் இருப்பது போல் உணர்த்தப்படுவோம் இது முக்தி நிலையாகும். தீர்ந்தே போகாத சோமபானம் 'இஸ்க் மஸ்த்' என்ற மதுவை உண்டவர் போல்தான் கற்ற மந்திர கலை எல்லாம் மறந்து போய் சுழிமுனை என்ற பொது மண்டபத்தில் சந்திரகலை, சூரியகலை என்ற இரு அறிவு மதிக்குதிரையில் பயணிக்கும். அப்பொழுது சிங்காசனம் கொள்ளும் ஆத்மா சிறந்து மகிழும் தெளிவான இப்பொருளை சொன்னவரே முழுமைபெற்ற குரு வென்று சொல்லலாம்.

38- வது பாடல்

எத்தமுள்ள மஹரிபத்து எந்த விதங் கேளும்.
இலங்குதுபார் லாகூத்து இருபார்வை மூடி
பார்த்தாலோ விழிசுழற்றிப் பாதாள நிலையில்
பயஹம்பர் நுபுவத்திலே பதினாலி லொன்றும்
தோற்றுதுபார் காட்சியெல்லாம் தொகைகளெல்லா மறிந்து
துலங்கும் இஸ்லாத்தி நடுத்தெளி ஒளிவையறிந்து
கலங்காத நினைவு அல்லாஹ் காட்சிநபி யிறஸூல்
ஹக்கும் அது நபியும் அது கருத்துட் பிசகாமல்

இதுவரை சொன்ன சரியான நிலைகள் எல்லாம் மேலான தவமுறையாகும். லாகூத்து என்ற தவநிலையானது இருபார்வையை ஒன்றாக மூடிக்கொண்டு சிந்தனையை பார்வைக்குள் அடைத்து உற்றுநோக்க இலங்கும் மெய்யான இறை வெளிச்சத்தில் நபிகள் நாயகத்தின் நுஃபுவத் என்ற ஜோதியில் பதினான்கு பங்கில் ஒரு-பங்கான மஹா பெரிய அமுத சோதி அப்பொழுது தோன்றும். அந்த தருணம் நாம் எப்போதும் உறவாடுகின்றோம் என்ற நேசத்தில் நினைவை கலந்து இஸ்லாத்தின் ஜோதியான நூரே முகம்மதியாவின் ஜோதியில் தரிக்கின்றோம் என்று பிசகாது நினைவை நிறுத்தி கொள்ள வேண்டும். அப்பொழுது அல்லாஹ், முஹம்மது என்பது ஒரே ஒளி

வட்டம் தான் என்பதை பூரணமாய் விசுவாசிக்க வேண்டும்.

39 வது -பாடல்

மலங்காமல் மறக்காமல் மறுபேச் சில்லாமல்
மாநிலத்தில் ஊணுறக்க மானதொக்க மறந்து
இலங்கும்நிலை லாகூத்து மஹரிபத்து வெளியில்
ஏகமெல்லாம் மறக்கும் திக்கீர் சிர்றியிது தானே
இதுதானே மஹரிபத்து இதற்கு ஐந்துயாது
இருத்தியேஹு அல்லாஹு ம் இன்னம்கூறும் ஹக்கும்
அந்தகூவை மாற்றுவது அழுத்திக்குன் ஹு வதுவும்
அனுதினமும் குன்னென்பதை அனுப்பிசகா திதுவும்.

அப்படி உறுதி கொண்ட நிலையில் உண்பது, உறங்குவது, பேசுவது, பார்ப்பது, கேட்பது போன்ற நிலையில் இருந்து விடுபட்டவனாக தன்னை தானே தனித்த நிலையில் மகரிப்பத்து என்ற ஞானத்தின் தத்துவத்தை உணர்ந்தவனாக இருப்பது 'லாகூத்து' என்ற மெய்தவமாகும். அந்த 'சிர்ரீ' என்ற நிலைக்கு ஐந்து திக்ரு முறை உண்டு ஹுஅல்லாஹ் என்பதும், ஹுஹக் என்பதும், அல்லாஹு, ஹு, குன், இந்த ஐந்தில் ஒன்றை தன் இருதயத்தில் நிறுத்தி நிலைப்பாடாக பிசகாமல் நிதானித்து ஒரே எண்ணத்தால் நிறுத்தி தியானம் செய்யும் போது நாம் அல்லாஹ் என்ற சோதியோடு மஃரிப்பத்தான தவத்தில் ஏகமாய் பரவெளியில் எங்கும் எப்பொழுது மில்லாத அலாதியான சோதி பரிணாமத்தில் செளிப்போம்.

40 - வது பாடல்

இந்தயாது ஐந்திலொன்றை யிருதயத்திற் பிடித்து
இருபார்வை நுனிமூக்கு மார்குழியில் தரித்து
பந்துபலர் விழிசுழற்றிப் பார்வையுள்ள இடத்திற்
பார்த்துவிழி முழிப்பதிலும் மூடுவது இதமாம்
இந்தவகை யிருநூற்றி யிருபத்தைந்து யாது
இடைபிசகா தொருமாதம் இத்தவமே செய்தால்
இந்து கதிரொளிபோலே யிலங்கி வட்டந்துலங்க

ஈரேழு புவனத்தில் லொன்றெதிராகத் தோன்றும்.

இந்த ஐந்தில் ஒன்று உன்னை இழுத்து செல்லும். உன் இருபார்வைகளை ஒரு முகப்படுத்தி சுழிமுனையில் தரித்து உன் நினைவை மார்புக் குழியில் நாட்டு தன் சுழிமுனை கொம்பை நன்று கூர்ந்து நோட்டமிட வேண்டும். அப்போது கண்கள் விழித்திருந்தாலோ, கண்கள் மூடியிருந்தாலோ பாதகமில்லை. இப்படியே இருநூற்று இருபத்து ஐந்து முறை இடை பிசகாது ஒருமாதம் நினைத்தால் சூரியன் வடிவில் ஒரு சோதி ஒன்று தோன்றும். அது போன்று எந்த லோகத்திலும் பார்க்க முடியாது. இதுவும் தியானத்தின் முக்தி நிலையாகும்.

41 -வது பாடல்

இந்தவகை தெரியாம லிருந்தாலுஞ் சரியே
இந்தவகை ஈரேழும் ஆயிரமிப் படியே
பிந்தாமற் ஜெயப் படுத்தும் பேர்கள் மதிமறப்பார்
ஜெகமறிய ஸெய்யிதிற ஸூலுரைத்ததாலே
இந்தவகை மஹரிபத்தென றிதையறியச் சொன்னேன்
இதற் கதிகம் முஹப்பத்தின் விதமுமறிவீரே.

இந்த வகை தெரியாமல் இருந்தாலும் சரியே சுமார் பதினான்கு ஆயிரம் தடவை சற்றும் பிசகாமல் சமாதிநிலையில் ஓதுவார்களேயானால், தன்னை மறப்பார்கள் தன்னை மறக்கும் நிலை வந்தால்தான் மெய்த்தவமான சாந்த சொருப நிலை கிடைக்கும். இதனை இந்த உலகத்தார் அறியவேண்டுமென்று நமது தூதுவர்கள் உறுதியாகச் சொன்னார்கள் ஒன்று கூட மறைக்காமல் சொல்லிவிட்டேன். இதுவே மஃரிபத்தென்ற உயர் நிலையாகும்.

42-வது பாடல்

நாட்ட மிரண்டு மொன்றான வாறும்,
நடுவிலொரு கலைமானைத் தேடு வாறும்,
ஓட்டமா யிரு வேடன் வந்த வாறும்,
ஒருமானும் ஒரு கிணத்தி லொளித்த வாறும்,
தேட்டமா யோடினவர் திகைத்த வாறும்,
திருமானைத் தீண்டாமற் பிடித்த வாறும்,
ஆட்டமா யறுக்காம லறுத்த வாறும்,
ஆறாக வைத்தொன்றைச் சமைத்த வாறும்,
கூட்டமாய்க் கூடியபே ருண்ட வாறும்,
கூட்டமொன் றில்லாமற் றனித்த வாறும்,
போட்ட பங்காறு மொன்றான வாறும்,
பெண்மானைக் கலைசேர்ந்து புணர்ந்த வாறும்,
காட்டினிடம் புலியை மான் றேடும் வாறும்,
கானகத்து புலியை மானுண்ட வாறும்,
நாட்டிலே இப்புதுமை தன்னைச் சொன்னால்
நாமவரைக் குருவென்று நாடலாமே.

நாம் என்ற எண்ணமும், நம் ரப்பு என்ற எண்ணமும், இரண்டற்ற நிலையில் ஒன்றாகும். அப்பொழுது நம்முள் மறைந்திருக்கும் (ஈ) மானை தேடிப்பார்ப்போம். அப்பொழுது அதை ஓட்ட முடியாமல் போன ஷைய்த்தான் என்ற வேடன் தோற்றுப்போய் இறுகூறாகப் பிரிவான். அப்பொழுது அந்த (ஈ)மான் ரப்பை நிரப்பிக் கொண்ட நிலையில் ஆன்மாவில் ஒளிந்து கொள்ளும். அப்பொழுது விஸ்வாசிகளின் (ஈ)மானின் நிலை பொறுந்தி ரசிப்பான். அப்பொழுது எந்த சஞ்சாரமும்மில்லாமல் அரூபமான ரப்போடு அடியான் தனித்து இருப்பான். அந்த நிலையில் அல்லாஹ்வின் பால் மோகித்து, தன்மயம் கொள்வான். அப்பொழுது மனக்காட்டில் மேய்ந்த புலி (ஈ)மான் என்ற ஜோதியில் மாளும். புலியை (ஈ)மான் தின்று தன்னுள் அடக்கும். இப்பாடலுக்கு நன்கு புரியும் படி அர்த்தம் சொன்னால் நல்ல குருவென்று இயம்பலாமே.

அலங்காரப் பொருள் தெரியு மறிவுநிலை தெரியும்
ஆதியின் முஹப்பத்தென்ற ஐந்தாம் மக்காம் விபரம்
இலங்குதுபார் ஐனுல்எக்கீன் ஏகநிலை சுழற்றி
இடை மூடி ஜெம்கூத்து ஹக்குல்எகீன் நிலையில்
வலமிடமும் நடுநிலையில் வைத்துபிசகாமல்
வருமூச்சை அடக்கியே உள்ளிருத்தி பார்க்க
துலங்குதுபார் ஸஹறத்து ஆயிரத் தெண்மலராய்
சுல்தான் நஸிறாவென்ற துய்யநுகத் தொளிவே

ஜம்கூத்து ; காதல் காதலால் ஏற்பட்ட விழிப்பு, உறக்கமற்ற விழிப்பு நிலை, இது ரப்பின் குணம். காதலில் தரித்து போன எந்த ஆத்மாவும் உறக்கம் கொள்வதில்லை. அப்படி உறக்கம் கொண்டால் அதற்குபெயர் காதலில்லை. மனிதன் ரப்புவை காதலித்தவுடன் ரப்பு மனிதனை காதலிக்கின்றான் இதுதான் உண்மை. காதலில் மையல் கொண்டு இரு முகங்கள் இருக்கும் பொழுது விழிப்பும் உரக்கமுமற்ற வித்தியாசமான நிலை உண்டாகும். சப்த சஞ்சார வேளையில் சந்தித்த முகங்களின் சாந்தம் ரப்பு மனிதனை காதலித்தால் ரப்புவின் கண்களில் இருக்கும் பிரகாச வலையில் மனிதன் அடைபட்டுப் போகிறான். வயப்பட்ட மனிதன் அந்தபிரகாச வலையின் பேரின்ப மயக்கத்தில் தன்னை இழக்கிறான். இழந்து இழந்து தன்னை இல்லாமையாக்கி தன்னையே இழக்கிறான். இது ஐனுல்யகீன், இந்த யக்கீன் ஏற்படும் போது இரண்டற்ற நிலையில் ஒன்றாக பிரகாசிக்கும். அப்பொழுது மனிதன் நினைவென்ற ஆகாய சிரசென்ற அர்ஷின் மேல் அல்லாஹ் அமர்ந்திருக்கின்றான். அல்லாஹ் அமர்ந்திருக்கும் அந்த அர்ஷில் பாவ, புண்ணிய சுகதுக்கமற்ற நேற்று, இன்று, நாளை என்ற நிலையெல்லாம் கடந்து நிலையாக இருக்க வேண்டும். நினைவு இப்படி இருக்க, நெடிய தவத்தால் நிரந்தர அப்பியாசம் செய்தால் ஜம்கூத்து என்ற தவநிலையில் சுவாச ஓட்டம் நின்று சங்கமிக்கின்றது. காதல் கொள்ளும் மனிதனில் சுவாச ஓட்டத்தில் கலப்பு

இல்லாமல் ஆகும் போதுதான் அது ரப்பின் சுவாச ஓட்டமாக மாறும். இயல்பாக இந்த சுவாச ஓட்டம் மாறிமாறி நிகழும். வலது இடமாக நடக்கும் சுவாசமாற்றத்தின் நடுவே அல்லாஹ் அமர்ந்திருக்கும் பீடம் தான் சுழிமுனை. அந்த சுழிமுனையில் நினைவு நிறுத்தப்படும் பொழுதுதான் அல்லாஹ் உடைய தரிசனத்தை பார்க்கமுடியும். அப்பொழுது நம்முன்னே ஆயிரத்தெட்டு இதழ் கொண்ட மகாஜோதி தோன்றி மறையும். இதைத்தான் சுல்தான் நஸீரா என்பார்கள்.

44 வது பாடல்

நிலையாக அலிபதுவே நீண்டு நடுநிலையில்
நிற்குதுபார் நூன் வட்டம் நுக்கத்துக் கருநாதம்
தலைமேலே கூவுமது தரித்ததின் கீழ்மீமாம்
தவநிலையிற் பெரியதான முஃஜிஸாத்துமாகும்
கமலமென் றமீம் தலையிற் காணும் விண்ணுலகில்
காணும் ஐந்து றாகில் நடுக்குத் தூசிகுத்பு தையம்
இதுதானே மதிவிருத்தம் முச்சுடரைந் தெழுத்தும்
இன்னங் கலிமாவுயிரும் ஹாவும் ஹுவும் ஹீயும்.

இந்த நுக்தாவின் பிரகாசம் நேர் அறிவு போன்று பிரகாசிக்கும் இதை நீடொளி என்பார்கள். நேத்திரம் இரண்டினும் நேரே இலக்கிய நீடொளி யென்பது அல்லாஹ்வை கண்டோம் என்ற நிறைவுடன் மனிதன் அந்த அலிபின் தரிசனத்தில் நிதானம் அடைகின்றான். ஏக வடிவம் கொண்ட அந்த நீண்ட பிரகாசம் காதலின் இஷ்க் நிறைவு. அவன் பார்வையில் நூறுடைய ஒளி வட்டம் போல் சுருங்கி கண்ணின் கருமணி அளவு கருநாகத் தோற்றம் கொள்ளும் மனிதன் அல்லாஹ்வின் பிரகாசத்தை இந்த வடிவில் தான் அறிகின்றான். அந்த அலிபுடைய தலைத் தோற்றத்து ஹியென்று அச்சத்தின் வடிவையும் ஒலிகள் கேட்கும். அதன் கீழ்ப்பாகம் மீமின் தோற்றத்தால் அமைந்திருக்கும். தவத்தின் உச்சமாக மனிதன் பெற்றுக் கொள்வது ஓர் அபூர்வ பிரகாசத் தோற்றமாகும். அந்த மீம் மனிதனின் இதயத்தை போன்று அதனுடைய தலை ஆகாய மண்டலம் போன்று

காட்சியளிக்கும். அது குத்துபுகளின் இதயம் அது பல வண்ணங்கள் கொண்ட பிரகாசமாய் ஜொலிக்கும் பரிசுத்தமான ஐந்து ஆத்மாக்களில் அது மிக பரிசுத்தமான ஆன்மாவாகும். அதன் தோற்றம் பூரண சந்திரன் போன்ற தோற்றமாகும். இதுதான் முச்சுடர் என்ற கலிமாவின் பொக்கிசமாகும். அது சப்தமும் நிசப்தமும் அற்ற நிலையில் தன்னுள் ஹா ஹீ ஹூ என்று ஒலிக்கும்.

45 வது பாடல்

அதுதான் அல்லாஹூவென்று அழகான கூட்டில்
அங்கமுறுத்தெரியுதுகண் ணாடிக்கலி மாவில்
அதுதானே யவனொளிவி லன்றுபிரி வான
அதுதான் குத் தூசிமுன்னே நாமிருந்த ரூபம்
அதுதானே பால்கொடுக்க ஆச்சரியமாகும்
அதுதானே யறிவு சொல்லும் அறுதியினாள் சொல்லும்
அதையறிந்தால் ஆகிறத்தில் ஆதிதீதா றுண்டும்
அறியார்க்குத் தீதாறங் கணுவிம் கிடையாது.

அல்லாஹ்யென்ற காதலனின் அரூபமான தோற்ற வெளிப் பாடு கலிமாவாகும் அது அல்லாஹ் என்று ஒலிக்கும் கண்ணாடி. அதுவொரு பளிங்கியால் கட்டப்படும் கலிமாக் கூடு. அல்லாஹ் என்ற காதலின் வெளிப்பாடு பிரிந்து காணப்படுவதும் அதுதான். பரிசுத்த ஆத்மாவாக இருந்ததன் தோற்றமும், அதுதான் அந்த தோற்றத்தின் வழியாக நாமிருந்த தோற்றத்தை காணமுடியும். நம் தோற்றத்தின் முன்மாதிரியாக நம் அம்மையப்பனும் அதுதான். நம்மில் அறிவின் அபூர்வமான சிந்தனையான ஓட்டமும் அதுதான். உலகில் அப்படியொரு தோற்றத்தை காணாத எந்த மனிதனும் மறுஉலகத்தில் அல்லாஹ்வை காணமுடியாது.

46 வது பாடல்

இதைத்தான் குத்தூசியென்று இருதயமாச் சொன்னேன்
இன்னம்வகை சொல்லுவதை யெல்லோருங்கேளும்.
எல்லோருக்குமுபகார மாகச் சொல்லும்விசளம்
இதிலும் ஐந்துயாதுண்டதில் இதற்குமுன் யாது
சொல்லாமல் ஹாஹியொன்று சுழித்து ஹாஹுவொன்று
சுழித்தமூச்சையாஹு அல்லாஹ் வென்று சொல்வதொன்று
இந்தயாதைக்குகுருவுரைக்தே தம்மாகத் தொடுத்து
இருசுடருமேத்தியுள்ளே நடுச் சுடரைத்தோற்றி

மனித கோடிகள் நன்கு விளங்க வேண்டிய பயன்பெறும் நன் நோக்குடன் பரிசுத்த ஆத்மாக்களின் நிலைகள், மனிதன் நன்கு விளங்கும் படி தவத்தை மேற்கொள்ளும் குருமார்களின் நிலைமை இதுவாகும். தவத்தின் பரிசுத்தமான தன்மையின் பக்குவத்தை விளங்கும் படியான சுவாச நிலையிலிருந்து, சுவாசத்தை நாம் உற்று நோக்கியவனாக ஹா ஹீ யென்று சுவாச நிலையை சுழித்து இருந்து ஹா யென்ற மூச்சை அழுத்தி, மூச்சை மேல்வாங்கி யாஹு அல்லாஹு என்று சொல்வது இந்த தவத்தால் நிலை பெற்ற குருமார்க்கள் இந்த மூன்று நிலைகளிலிருந்து நின்று அப்பியாசம் மேற்கொள்வார்கள். இதுதூய ஆன்மாவின் அருளால் இரு வகையான பிரகாசத்தை நிறுத்திட வல்லது. இதால் வெளியாகும் இரண்டு பிரகாசத்தின் நடுவே சுழிமுனையென்ற பிரகாசத்தை வெளியே கொண்டு வர வேண்டும். இது குருமார்கள் மேற்கொள்ளும் உள் விளையாட்டாகும். காதலன் காதலியோடு குலவி கொஞ்சிக் கொள்வதற்கு இந்த பரிபாசைச் சொற்கள் ரகசிய பொருளாய் காதலியும் காதலனும் சந்திக்கும் பொழுது காதலி பிரகாசத்தின் சஞ்சாரத்தில் உதடுகள் சப்தமில்லாமல் முத்தமிடும் அல்லாஹ் என்ற அரூப காதலியோடு நினைப்பென்ற ஆகாசவீட்டில் கொஞ்சிக் கொள்வதற்கு இந்த இதழ் தேவை படத்தான் செய்யும். மறைக்கு அப்பாற்பட்ட திரைத்தாண்டி செல்லும் ஏகபெரு வெளியில் ஏக்க பெருமூச்சுடன் அல்லாஹ் என்ற ஜீவ ஒலியை நிதர்சனமாய் இப்பூஉலகில் கண்டு

கொண்டோர் ஏக பெருவெளியில் நிறைந்த மைதானில் மறுமையான அந்தபுரத்தில் ரப்புவை கண்டார்கள் என்பதாகும்.

47 வது பாடல்

ஒத்துவரும்வாசியுடன் ஒள்ளெழுத்தைப்பூட்டி
உறுதிநிலைவளையாமல் உள்நிலையில் மாட்டி
பத்திபத்திடார்வைவளம் பலதுமொன்றாய்த் தொடுத்து
பத்துப்பத்தாப்பத்துஉரு பத்துத்திரமானால்
மெத்தப்பெரிதானவகை மேலவன்றானடுவான்
மேலானபாதையிது மேலதிகம்மெத்த
ஆலமதிலுள்ளகுலம் ஆர்குலமென்றாலும்
அச்சணமேதீன்குலத்தி லான வொலியாகும்.

மனிதன் சுவாசம் நம் கட்டுபாட்டில் நடக்கின்றதா? என்றால் இல்லை. அந்த சுவாச ஓட்டம் நம் கட்டுப்பாட்டில் நடக்க சர்குருவின் துணையோடு நம் அன்றாட வாழ்வில் இடைவிடாது நடக்கும் அப்பியாசத்தினால் நம் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும். நம் முன்னான சிரசின் சம்பந்தத்தோடு அந்தசுவாசத்தை கண்டம் விட்டு கண்டம் கடக்கச்செய்ய வேண்டும். நம் தொப்புளில் தொடங்கி நாசி வழியாகச் செல்லும் அந்த சுவாசமானதை வெளியே உலவவிடுவதை சற்று குறைத்து உள்ளுக்குள்ளே சூழலச் செய்ய வேண்டும். அல்லாஹ் கலந்திருக்கும் இந்த சுவாச ஓட்டம் பூதங்கள் தாங்கிய சடத்தில் மனம் லயித்து சுழலும் போது மனம் என்ற மஹா பெரிய ஓட்டம் எந்தப்பக்கமும் செல்லாமல், அல்லாஹ் என்று பெரும் சாகரத்தில் இசையவிட்டோமேயானால், ஒரு இனம் புரியாத ஆனந்தம் நம்மை ஆட்கொள்ளும். அப்பொழுது ஒரு நிறுத்தலுக்குப் பத்து என்ற கணக்கில் ஒலியை சேர்த்து உருப்படுத்தினால் சுவாசம் கண்டம் கடக்கும். அப்படி அல்லாஹ் என்ற அச்சர ஓசையோடு, கண்டம் கடக்குமேயானால் பிரபஞ்சத்தில் எந்த மூலத்தில் பிறந்தவனும் தீன்குலத்தவனே.

48 வது பாடல்

நால்மறையிலிறையுரைத்த உட்பொருளுமிதுதான்
நாயன்றன்னை வணங்கச்சொன்ன நடப்புமிதுவாகும்
உத்தசெய்தியாக இதை ஒளியாமற்சொன்னேன்
உலகவரேயிதைச்சேர்ந்த பாகூத்தைக்கேளீர்

இதுதான் நான்கு மறைகளின் ரகசிய பொருள். இதைத் தான் வலிமார்களும், குத்துபுமார்களும் மற்றும் சித்தயோக முக்தி பெற்றவர்களும் தெளிவாக விளக்கிச் சொன்ன விதம். நாம் அல்லாஹ்வை பார்க்காவிடிலும் அவன் நம்மை பார்க்கின்றான் என்ற பாவனையோடு பார்த்தல் வேண்டும். பாவனை என்ற நினைவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது ரப்புவின் நோக்கமாகும். அதை தெளிவாக சொல்லிவிட்டேன் தெரிந்து கொள்ளுங்கள் இஸ்லாமியர்களே! ஞானவீட்டில் வாழ நல்லதொரு கலிமா சுவையை சுவைக்கச் சொன்னேன். நுகருதல், உணருதல் இந்த ஞானமே மேலான ஞானம். அல்லாஹ் என்ற பிரகாசத்தில் நாம் கலந்தால் அல்லாஹ்வை வணங்க முடியும் (இனி பாஹூத்தின் நிலையை பார்ப்போம்).

49 வது பாடல்

வீட்டிலே யொருவன் குடியிருக்கும்வாறும்
வெளியிலிருபேர்காவ லாயிருக்கும்வாறும்,
கூட்டியேமூவரையும் சேர்க்கும்வாறும்
கூடாமல்மூவரையும் பிரிக்கும்வாறும்,
ஆட்டியேயிருவரையும் அமர்த்துவாறும்
ஆறிரண்டுபேரொருவ ரானவாறும்,
ஏட்டிலே எழுதாத கலையின்வாறும்
ஏழிரண்டுரேகையொன்றானவாறும்,
நாட்டாமனாட்டுமொரு வாசல்வாறும்
நான்குபத்துமூன்றுவீடானவாறும்,
வெட்டாதகுளத்தில் மான் குடிக்கும்வாறும்
வீதியைந்து கோட்டையைமான் சுமக்கும்வாறும்,
கட்டாதகொலுமேடை காணும்வாறும்
கன்னிகொலுவிருந்து கதைபாடும்வாறும்,
பாட்டிலுள்ளபொரு ளறிந்துசொன்னபேரைப்
பாருலகிற்குருவென்று பணியலாமே.

ஸ்தூல வீடான நம் ஜீவனுக்கு அல்லாஹ் என்பவன்

குடி கொண்டுள்ளான் உடல் முழுக்க பாவம் என்ற ஷைத்தானின் ஆற்றல் இழந்தபின்னால் இரண்டுபரிசுத்த மலக்குகளைக் கொண்டு காவல் புரிகின்றான் மும்மலக்காடான மலம் சூழ்ந்த வாழ்வின் இருளை அகற்றி மாயத்திரையை விலக்கி மகத்துவமான பரிசுத்த முக்குணங்களை கொண்டு நமக்கு அரணாக அமைக்கின்றான் மாயத்திரை விலகி சோம அமிர்தம் என்ற மதிப்பால் சுரக்கும் போது ஏட்டில் இல்லாத ஞானத் தாத்பரியம் எல்லாம் நம்முள் தானாய் விளங்கும் ஒன்பது துவாரங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அதன் செயல்பாடுகளில் நின்று ஒருவாயில் நிகழ்வைக் கொண்டு போதுமாக்கின்றான். இவை எல்லா வற்றிற்கும் அபூர்வமான ஆன்மாவை விசாலமாக்கின்றான். தவநிலைக்கு உகந்த இந்த எட்டு மகாம்களைக் கொண்டு முச்சுடரை ஏந்தி நிற்கின்றான். ஞான முக்தி பெற்று விட்டால் பால் அருந்தும் குழந்தையாய் பார்க்கலாம். அந்தப் பால் அமிர்தமாக கொட்டும் அட்சயப் பாத்திரம். பஞ்ச பூதங்கள் ஐந்தும் முடங்கிப் போகும் போது அந்தப் பூதங்களை (ஈ) மான் சுமக்கும் என்பது உண்மைதானே. மெஞ்ஞானிகள் தவம், மௌனம், யாகம், யோகம், ஞானம் என்ற ஐந்து நிலைகளைக் கடந்து முக்தி நிலை கண்டால் அவர்களின் கொலுமண்டபம் சிரம் என்ற ஆகாயத்தில் அமைக்கப்படும். அந்த மண்டபத்தின் பருவமாகாத கன்னியின் தோற்றத்தில் வாலைக்குரு என்ற வசந்தத்தோடு ஞானப் பரிமாற்றம் நடைபெறும். அதை கேட்டதும் ஞான நிலை நம்மில் தோன்றும் இப்பாடலுக்கு பொருள் சொன்னவரை உலகிற்று மெய்குரு என்று சொல்லலாம்.

50 வது பாடல்

இதைச்சேர்ந்ததிண்ணம் ஒன்று யாஹூத்துநிலைமை
இதுவும் திக்கீர்கபியாகும் முஹப்பத்துவெளியில்
மதிபோலேஜனுல்எக்கீன் நிலைநிறுத்திமூடி
மனதுக்குள்ளே நினைவுதன்னை மகிழ்ச்சிகொண்டுபார்க்க
விதமாகப்பதினான்கு நுபுவ்வத்தப்போ தெரியும்

வெற்றியுள்ள கல்புக் கடல் புத்தி ஈமான் வட்டம்
அதுதானே வெள்ளைவட்டம் ஒங்காரஈமான்
ஆதமல்லோபச்சைவட்டம் அதிற்பவளம் நபியும்

காதலால் ஏற்பட்ட இஷ்க் தீர்ந்தே போகாத மஸ்த் போதையாய் சாகரம் என்ற மட்குடத்தில் வடியவடிய பருகும் அமுத ஊற்று. அந்த அமுத ஊற்றை அருந்த வேண்டுமானால் யாஹூ என்ற ஓசை மந்திரத்தில் உள்வாங்கி நிறுத்தி, பற்றி, பின் கலப்பற்ற ஆசையால் கல்புக்குள் யாஹூ பொருத்தி மதிமயங்கி எல்லாவற்றையும் மறந்து அன்பு என்ற தவத்தில் ஆட்பட்டோமேயானால் ஐனுல் எகீன் என்ற கலிமாவின் உள்ரகசியம் பொன்பிரகாசமாக சந்திரன் போன்ற ஒளி வட்டம் நம்முள் தோன்றும். ஐனுல் எகீனின் நினைவை ஆடவிடாமல் நிலைப்படுத்தி இதய கமலக் கடலில் எண்ண அலைகள் சற்று நிசப்தமற்ற நிலைவில் அல்லாஹ் என்ற இஷ்கில் ஆழ்ந்து போகுமேயானால், நபிகளின் நுபுவத்தின் பதினான்கு ஒளி பிரகாசத்தின் ஒளி நம்முள் விளங்கி கொள்ள முடியும். விளங்கும் நிலையில் மனக்கடலில் அறிவு யென்ற பெருக்கினால் ஈமான் என்ற மஹா பிரகாசம் நம்மை சுற்றி நிகழும். அந்த ஈமான் என்ற பிரகாசம் பல வகையான நிறமாக நம்முள் தோன்றும். அதில் மூன்று நிறங்கள் வெவ்வேறான குணாதிசயங்களை கொண்டவை. அதில் ஏக பரம்பொருள் நிறமாக வெள்ளை நிறமாய் இருக்கும். மனித கோடிகளின் தந்தையான ஆதத்தின் நிறம் பச்சை வடிவாக இருக்கும். அல்லாஹ்வில் ஒளிக்கீற்றில் வெளியான நூரே முகம்மதிய்யா என்ற முஹம்மது (ஸல்) அவர்கள் நிறம் பவள நிறமாய் இருக்கும். இதே முச்சுடர் வட்டம் என்பார்கள்.

51 வது பாடல்

மதிபோலேமுச்சுடரு மானநிரம்மூன்றில்
மக்காமின் மஹ்மூதா நடுநிலையின் நீலம்
பதியெல்லாம் புகழுமஹ் மூதுதிருவடியிற்
பளிங்கியிலுந் தெளிவான பரன்பொருளினொளிவே
இதுதானே றூஹு நிலை இயா துநினைவாகும்
இரவுபகலாகுமிது இருநாசிவாய்வு
நினைவுமது நினைவுதன்னை நினைவுகொண்டுபார்க்க
நினைவுக்குள்ளே நிலவுபோலே நிற்குமேகண்ணாடி

இந்த முச்சுடரின் முழுமை குணங்கள் கூடும் இடத்தில் தான் மகாம மஹ்மூதாவின் இடம் என நாம் விளங்கி கொள்ள வேண்டும். மகாம மஹ்மூதா என்பது அல்லாஹ்வும் அப்துவும் சந்திக்கும் இடமாகும். நாயகமும் நாயனை சந்தித்த இடமும் இதுதான். நாம் அடையப் போகும் பாக்கியமான நற்குணநிலை என்பதை உணரும் போதுதான் காலங்கள் காட்சிகளற்ற சமய சடங்குகளற்ற பொல்லாங்கு பேதமற்ற நிலையற்ற பரவெளிதனில், மற்றவை எல்லாம் அற்று மஹ்ஃமுதாவின் மஹ்த்துவத்தில் தரிக்கலாம். அப்பொழுது தான் பிரபஞ்ச சிருஷ்டின் முழுத்தோற்றத்தை பார்க்க முடியும். நம்சுவாச மென்ற அல்லாஹ்வின் சந்திரகலை சூரிய கலை என்று மாறிக் கொண்டிப்பதும் உயிரின் பரிணாம ஜீவ அணுக்களில் பரவி விரவி இருப்பதும் இதுதான். இடைவிடாது இயங்கும் இரவும் பகலும் இதுதான் மரபு என்ற அணு என்று அறியும் பரம்பொருள் இதுதான் மரபு அணு வின் உள்ளார்ந்த ரகசிய பொருளும் இதுதான், ஆதம் நபிநினைவில் நாம் நினைவாக நின்றதையும் அப்பனின் நினைவிலே நினைவாக நின்றதையும் தவத்தில் தரிக்கும் பொழுது நம் நினைவு தரித்ததையும் அறிவு என்ற நினைவு கொண்டு உணர்ந்தோமே யானால் அந்த நினைவுக்குள்ளே கண்ணாடி போல் தோன்றும்.

52 வது பாடல்

கண்ணாடிக்குள்வொளிவு காணுமவன் ரூபம்
முன்னாலேநாமிருந்த மவுனமவன் ரூபம்
அறியும்வகையாகூத்து அதற்கிரண்டுயாது

அலங்காமல்யாகூவென்று அழுத்திஉயிரேற்ற
குலுங்காமல் யாகூவுடன் கோர்த்து ஒருமீமைக்
குலுக்கியாவென்றிருந்தி அந்தஹூம் நிலையேத்த
சேர்மான மூன்றெழுத்தின் சேதிசொல்லக்கேளும்
செப்பிய துமூன் றெழுத்தும் முப்பொருளுமி துவாம்

பரம ரகசியத்தை சொல்லும் இந்த பாடலின் உள்ளார்ந்த ரகசியபொருளை விளங்கினோர் வாய்மூடி அமைதியாக இருத்தல் அவசியம் நாயனும் நபியாதமும் நாமும் எப்படி இணைந்தோம் என்பதை வெளிச்சமாய் விளக்கும் நிலையாகும். காலக் கண்ணாடி நம்முள் காட்டப்படும் பொழுது பண்டு ரோஸ்மீசாக்கில் நாம் எப்படி இருந்தோம் என்பதைப் படம் பிடித்து காட்டும் இந்த கண்ணாடி யாஹூ என்ற சூச்சும அச்சரத்தோடு மீம்மை ஹூவுக்கு அடுத்து இணைக்க வேண்டும். அப்போது ஹிம் என்ற மந்திர ஒலி நம்முள் ஒலிக்கும் உயிர் மையப் புள்ளியான அல்லாஹ் என்ற நுக்தாவின் அர்ஷை உணர்வில் உணர்ந்து கொண்டு சுவாசத்தை வழி நடத்திச் செல்லும் போது யா என்று உள்வாங்கி ஹூ என்று முட்ட வேண்டும் அப்பொது அண்ணாக்கு பிரதேசமான ஜோதிமண்டலம் அக்னி கொழுந்தால் உருகி அமுது கொட்டும், தேனும் பாலும் போன்ற சுவை கொண்டவை. அந்த ஊற்று ஒரு ரோம அளவை விட பத்து மடங்கு சிறியவை ஆகும். மஹா ஞானிகள் முப்பு, முப்பால், முப்பொருள் என்று சொல்வார்கள்.

53 வது பாடல்

முப்பொருளுமி துவானால் முறையாகச் சொல்லும்
முஹம்மதென்றுசொல்லுவது முடிவில்வருமீமாம்
மீமுஹம்மதுர்றசூலும் விளம்புகின்றதாயாம்
முன்னுறைத்தகூவும் முன்னே னாகும்நம்மதந்தை
நாமாகும்யாவென்பது நமதுபிதா ஆதம்
நாடுந்த வழுப் பொருளி னவிலெழுத்து மூன்றும்

எழுத்தும் மூன்றுந்துகையான இலக்கம் ஐம்பத்தைந்தும்
அந்தலக்கமூலகவருக் கைம்பத்தைந்து பறுலாம்

முப்பொருளும் வடிவமும் கொண்டு நிற்பதுதான் நம் கோலமும் நம் ஆதமின் கோலமும். நம் அல்லாஹ்வின் படைப்பழகும் இதுதான் இந்த முப்பொருள் அடைய விழைந்து கொண்டு ஒரு தாயின் அரவணைப்பைப் போல் அரவணைத்துக் கொண்டிருப்பதும் இந்த மீம் பிசகாது இந்த பிரபஞ்சத்தை இசையும் படி நடத்திக் கொண்டு இருப்பதும் மீம்தான் மீம் என்றால் நபி முஹம்மதாய் (ஸல்) இருக்கும் தாய்மையின் இயல்பாய் நடத்திக் கொண்டிருக்கும் மீமை ஒரு தந்தையின் குணநலத்திலிருந்து கண்காணிப்பது ஹாவின் குணம்தான். இதில் யாவாக நிற்பது நாமும் நம் ஆதாமும் பிரபஞ்ச ஜீவன்களும். இந்த மூன்று எழுத்துக்களின் சூட்சும தொகுப்புகளைப் பார்த்தால் நமக்குச் சொல்லப்பட்ட ஐம்பத்தி ஐந்து என்ற பரிபாஷையான கடமையாகும் அந்தக் கடமையை உணரும் பொருட்டு நமக்குச் சில அந்தரங்கமான உண்மைகள் புலப்படும்.

54 வது பாடல்

ஐம்பத்தைந்து அறுசேணி யைம்பத்தைந்துபடியாம்
அரியோமிகுறாஜிலிறை அறுசில்நபியானார்
அந்தமிகுறாஜீவளம் ஆலத்துள்ளோரறிந்து
அப்படியேசெய்தவமும் அப்படியாமெனவே
எந்தஇடம் உலகுமக்கம் ஏணி அறு செதுவால்
எறியதார் இறையாராங் கெதுவசனமினவே
உந்தியடிஉலகுமக்கம் உயர்ந்தநெஞ்சுகஃபா
எழுந்தேறும் ஏணிமூன்றில் எழுந்துதறுசுசிரசாம்.

நாம் எங்கிருந்து பிரித்தெடுக்கப்பட்டோம் எங்கு பிறந்தோம். காற்றின் உதவியால் இயங்கும் சுவாசமானது நாபி முதல் சிரசு வரை முன்னும் பின்னும் சுழலுகின்றன அந்த சுவாசம் சுமார் ஐம்பத்தி ஐந்து இடங்களில் தொடங்கி தடைபடாமல் செல்கிறது. என்பதை விளங்கி கொள்ள வேண்டும் இந்த பிரபஞ்சத்தில் பூமத்திய ரேகையின் நடு மையப்புள்ளியில் மக்கா அமைந்துள்ளது. அதுபோல் நாபி மனிதனின் நடுமையப்புள்ளியில் அமைந்துள்ளது. என்பதை அறிய வேண்டும். தொழுகை

மூமீன்களின் மெஹறராஜ் என்பது நபி மொழி. தொழுகை என்ற தவத்தின் சித்தாந்தத்தில் மூமீன்கள் மெஹறராஜை அடைய முடியும் என்பதை நபி மொழி விளக்குகின்றன இந்த உலகில் கஃபாதான் பரிசுத்த ஆலயம் என்பதையும் அந்த ஆலயத்தை தரிசித்த மனித மனம் பாவங்கள் அற்றுப் போவதாய் ஆக வேண்டும் ஐம்பத்து ஐந்து படிகள் கொண்ட சூட்சும ஏணியில் புறாக் என்ற வாகன உதவியோடு நபிகள் நாயகம் மெஹறராஜை அடைந்தார்கள் ரப்போடு உரையாடினார்கள் அந்தமகத்தான மெஹறராஜை மனிதனான நாம் எப்படி அடைவது? மக்கா என்ற நாபியில் சுவாச ஓட்ட பயணத்தில் மனம் என்ற பரிசுத்த கஃபாவில் வாசி என்ற புறாக்கின் துணையோடு பக்குவமாய் ஐம்பத்து ஐந்து தட்டுகளின் சுவர்களை தாண்டி பயணம் செய்தால் ஆகாயம் என்ற சிரசின் அர்ஸ்ஸில் ரஃப்புவை சந்திக்க முடியும் அப்படி சந்தித்து சந்திரகலை, சூரியகலை, சுழிமுனை என்ற எட்டுகளால் மட்டுமே சிரஸ்சு என்ற அர்ஸை அடைந்து அல்லாஹ்வோடு உறவாட முடியும்.

55 -வது பாடல்

நல்லமதி செயலான நாட்டம்நம்ம நபியாம்
நடுச்சுடர் நின்றாடுவது நமக்குஇறை யதுவாம்
நாமாந்த நடுச்சுடரை நாடிக்கூடி யறிந்தால்
நபியிறைசெய் வசமிகுறாஜூநமக் கிதுவே

இந்தமிகு ராஜூநா மிப்படிச் செய்வ திதுதான்
இதமாக சொன்னபடி யெடுத்துச் செய்வ தென்று
சிந்தா மதியோர்ககுத் தெரியும்படி யுரைத்தேன்
செப்பாத லாகூத்துச் செய்திச் சொல்லக் கேளீர்.

அப்படி நாம் வாசி புரவியில் பயணிக்கும் பொழுது நம் நினைவு முஹம்மது வாய் இருக்கும் நாம் சுவாசம் செய்யும் பொழுது அலிஃப் என்ற அச்சரம்தான் அல்லாஹ்வாய் இருக்கும் அந்த அலிஃப் என்ற உஜூதை நம்முள் உணர்ந்தால்அது மெஹறராஜ் தத்துவத்தை உணர்த்தும், நபிகள் நாயகம் அல்லாஹ்வோடு கலந்தது

போல் நாமும் அல்லாஹ்வோடு கலக்கும் நிலை ஏற்படும். மெஹறராஜின் உள்ளர்த்தங்களை புரிவோம். முன்வைத்த காலை பின் வைக்காமல் கடும் சித்தாந்த உணர்வை மேற்கொள்ளும் தவ சீலர்களுக்கு நாம் தெளிவாக சொன்னோம். இனி ஹக்கீக்கத்து நிலையைபார்ப்போம்.

56 -வது பாடல்

வித்திலே கலந்திருந்த பொறியின் வாறும்
வீதிவரும் வாசியுடன் குலத்தின் வாறும்
ஒத்துவரும் ஐந்துமுன்னே யிறுத்தும் வாறும்
ஒன்றுவிட்டு நான்குமென்றான வாறும்
பத்தெழுத்தும் ஒரேழுத்தாய்ப் பூண்ட வாறும்
பள்ளிக் கொண்டு மேவிருக்கும் பாவை வாறும்
பத்துநாள் ரேகையாகி லிருக்கும் வாறும்
பருவமுள்ள உருவமதில் தரிக்கும் வாறும்
பற்றிநீயே பண்டாறஞ் சூடு வாரும்
பரத்தினருள் பாடிவரும் பதத்தின் வாறும்
முத்துபச்சை ரத்ணமணி கோத்த வாறும்
முன்னழகும் பின்னழகும் பூண்ட வாறும்
இத்தனையும் கண்டதையும் காணா வாறும்
இறந்தபே ரெல்லோரும் பிறந்த வாறும்
எத்திசைக்கும் பொருள் விளக்கச் சொன்ன பேரை
யெல்லோருங் குருவென்று இயம்பலாமே.

இந்த நாத விந்தில் அல்லாஹ் என்ற அழகிய குணங்கள் கலந்திருக்கும் விதமாகும். பஞ்ச பூதங்களை அடக்கி தன் வயப்படுத்தி வாசியென்ற ஊரில் வாழ்ந்து நபி யென்ற தீன்குலத்தில் நாம் நிற்கும் பட்சம் பூதங்கள் ஐந்தும் நம்முள் ஒன்றின் பின் ஒன்றாய் ஒடுங்கும் ஆதியில் நாம் அருப வெளியில் பத்து அச்சரம் கொண்ட அல்லாஹ் முஹம்மது என்ற அச்சரம் அலிஃப் என்ற உஜூத்து நிலையை அடையும் விதம். பற்றிக் கொள்ளும் பக்தி உறுதி மாணத்தோடு தவமேற்கொண்டால் வாலை என்ற முஹமதை அடையும் விதமாகவும் பத்து தீட்சை என்ற முக்தி நிலையின் மூலமாகவும் ரூபமற்ற ஜோதி வடிவில் நம்முள் தரிப்பான். எந்த விதமாகவும் அல்லாஹ்வை பற்றிய உடன் பற்றற்ற பண்டாரம் போல்

ஆவான், துறவு நிலை கண்டோன் எல்லாம் பெற்றவை போல் ஆவான். அல்லாஹ் என்ற ஹூவில் கூத்தாடும் ஆனந்தம் நீ பெருவாய் எந்த விதமும் முன்னும் பின்னும் குறை சொல்ல முடியாத ஐந்து நிறங்கள் கொண்ட பேரழகும் நிறமும் காண்பாய் . இந்த கண் கொள்ளாக் காட்சியை கண்டமுகம் பற்றற்ற நிலையில் இருக்கும். உலகில் இறந்தவர்கள் போல் வாழ்வார்கள் அப்போது பிறந்தவர்கள் போல் ஆவார்கள். இந்தப்பாடலின் உட்பொருளை உணர்ந்தவர்கள் மட்டுமே சர்க்குருவென்று உணர்ந்து கொள்ளலாம்.

57 - வது பாடல்

இனிக்கேளும் திக்கீர் கபீ முஹிதி தாத்து வெளியில்
ஏழா மக்கமான ஆகூத்து விபரம்
தனியவனே அஹமதுமாய் ஆதமுமாயான
தந்தைவிந்து தாயுடலிற் றானுருவா யமைந்த
கருவுக்குள்ளே தரிக்கப்பட்ட நினைவொளியை யறிந்து
கருநிலையி லெழுந்தபுகை கழறுஞ்சுழர் மூச்சில்
வருகிறதிற் சேர்ந்து ஒன்றாம் மவுலுமைந்து எழுத்தை
வாசலெல்லாம் நன்றாக வருந்திக்கட்டிப் பார்க்க.

மெஞ்ஞானத்தின் ஏழாம் நிலையான இந்த தவம் சற்று உற்றுகவனிக்க வேண்டியவை. நாம் அல்லாஹ்வோடு எப்படி கலந்திருந்தோம் என்பதை நினைவில் கொண்டு வரும். ஒரு உன்னதமான தவநிலை. நாம் அல்லாஹ்வோடு எப்படி கலந்திருந்தோம் என்பதையும், பின் நாம் எப்படியெல்லாம் பிரிந்தோம், பின் நாம் எப்படி அல்லாஹ்வோடு இணைகின்றோம் என்பதையும் நாம் கருத்தில் உணர்வது மெய்த்தவம் ஆகும். நினைவில் தரித்து நடத்தும் தவநிலைதான் அல்லாஹ் தன்னை அறிய வேண்டிய தன்னுள் தான் மோகித்து அவிழ்ந்த வித்துதான் நூரேமுஹமதிய்யா. அதுதான் ஆதமானது, அன்ன முஹம்மதானது தன்னுள் தானாகி அண்ட கோடியில் அனந்தரங்கோடி அணுக்களாய் பின் ஒன்றாய் சுருண்டுபோனது. இதைத்தான் அறியவேண்டிய நிலைமுதலில் அஹமதாய்

ஆதமாய் முஹம்மதாய் தந்தையின் விந்துக்கிடையில் தாய் உடலில் அணுவாய் அமர்ந்து கருவுக்குள் தரிபட்டு பிரகாச நிலையை அறிந்து தவமிருக்கும் கருநிலையில் கலந்து சுவாசங்களில் சுழன்று தன்னுள் நயந்து நிலையை உணரும் வண்ணம் அந்த சுவாசமும் நம்முள் ஒன்பது வாயாக அமைக்கப்பட்ட இந்த சரீரத்தில் சுழல்வதை நினைத்துப் பார்க்க வேண்டியது. அதாவது இரண்டு பெருவிரல் கொண்டு இரண்டு காதுகளையும் அடைத்து இரண்டு ஆட்காட்டி விரல்களை கொண்டு இரு கண்களை அடைத்து இரண்டு நடுவிரல் கொண்டு இரு நாசியை அடைத்து இரு மோதிரவிரல்கள், இரு கட்டை விரல்களும் கொண்டு அலகு போல் உதடுகளை இறுக்கி மூடி சுவாசத்தை உள்ளே தம்பிக்கச் செய்வது இது ஒனபது துவாரங்களையும் அடைத்துச் செய்யும் தவமுறை அல்லது ஒன்பது துவாரங்களின் மூலம் நடவும் பாவங்களை விட்டு விடுவது எனலாம்.

58 -வது பாடல்

தெரியுதுபார் கமலத்துள்ளே சேர்ந்த பத்தெழுத்து
திறமான குதறத்துமே லிருபத்தினா லெழுத்தும்
சறத்துமொன்றாய்ச் சமைந்திருக்குந் தவிசு கொலுமேலே
சகலகலையும் பொருந்தி தாத்து சிபத்தொன்றாய்
நிறத்திலொளி சுடர்நீதி ஆஷிக்கு மஷூக்கு
நிற்குதுபார் கூவும்மீமும் நினைவுங் கருவுமிதுதான்
யாருமறி யாரேகமாலுல் எக்கீன் காட்சி
அறிந்தவர்கள் ஆலந்தன்னை அசதியிலும் பாராா:

அப்படி அடைத்துக் கொண்டு தவநிலை கொண்டோமே யானால் இதயக் கமலத்தில் அல்லாஹூ யென்ற ஐந்து எழுத்துகள் முஹம்மத் என்ற ஐந்து எழுத்தும் திவ்விய பிரகாசமாய் தோன்றும் நாம் அமர்ந்திருந்த தவக் கொலுமண்டபத்தில் லாயிலாஹா இல்லல்லாஹ் என்ற இருபத்திநான்கு அட்சர ஒலிகள் ஒளி வடிவமாய் காட்சி தரும் எல்லா கால்களையும் உள்ளடங்கிய மெய்நிலையும் உயிர்மெய் நிலையும் ஒன்றொடு ஒன்று லயித்து இன்னதென்று சொல்லமுடியாத பிரகாச வடிவாய் கலந்து பிரியமான பிரியமுடியாத நிலையில்

ஜீவ ஆத்மாவும் பரம ஆத்மாவும் மோகித்து தனித்து நிற்கும் ஹூவும், மீமும், கருவும் இதுதான் என்பதை விளங்கி கொள்ள வேண்டும். இதுதான் கமாலுல் எக்கின் இந்த நிலையை அடைந்தவர்கள் உலகை ஒரு போதும் நாடார்.

59 - வது பாடல்

தெறிந்து நன்றாய்ப் பகுந்து சொன்னேன் தீனவர்களறிய
திக்கிர் கபிறிடத்த ஆகூத்து தாமே
இதற்கும் உயிரெழுத்தான எடுத்துரைக்கக்கேளும்
எவர்க்குபெரி தானதவம் இறைநபியு மொன்றாய்
இதைச்சேர்ந்த யாதிரண்டு எடுத்துரைக்ககேளும்
இருப்பதென்ன ஹூவும் மீமும் இனைத்துஹூம் மென்பதுவும்
கதித்த தொருஹூவும் மீமும் கடுகிப் பிடிக்குமாம்
கசகாமற்பிடிக்குமந்தக் கருமஞ் சொல்லக்கேளும்

நாம் சொல்லப் போகும் தியான நிலை லாஹூத் என்ற நிலையாகும். சதா நடந்து கொண்டிருக்கும். ஜீவ ஓட்டத்தின் ஜீவன் தெரியப் போகும் தவமாகும் என்பது தெளிவாகச் சொல்லும் நிலையாகும் . இதற்கு உயிர் எழுத்தான ஹூவும் மீமும் அல்லாஹ் முஹமதாய் நிற்கும் நிலையாகும். இதற்கு உயிர் எழுத்தான ஹாவும் மீமும் அல்லாஹூ முஹமத் யென்ற அந்த பெரு இயக்கங்களை ஒன்றோடு ஒன்று கலந்து நிற்கும் நிலையாகும் ஹாயென்ற ஒலியும் மீம்யென்ற ஒலியும் ஒன்றோடு ஒன்று கலந்து கொள்ளும் தவம் இது. இந்த நிலையை உணரும் போது தான் மனிதன் முக்தி என்ற நிலையில் நிலைக்கின்றான் இப்படி தவத்தை மேற்கொள்பவன் தான் இன்சான் காமிலாகும்.

60 - வது பாடல்

இதுயாதிரண்டி லொன்றை யிருதயத்திற் றெடுத்து
எவ்வளவும் பிசகாமல் இதுமேலே நினைவாய்
அதினுடைய வளமறிந்து அதைக்கருத்தில் தரித்து
ஆடிவருமூச்சையுள்ளே யடக்கியதைப்பிடித்து
ஒடுக்கியுள்ளே உன்னுடலில் ஒன்பது வழியும்
ஒழுங்காகக் குருவுரைத்த உரைப்படியே பிடித்து
மடக்கியுட லொடுக்கிசுஜூதிட்டு மணம் பார்க்க
மற்றுமுள்ள பொருள்நிலையும் மற்றதெல்லாந் தெரியும்.

நாம் மேற்கொள்ளும் தவத்தால் மேற் சொன்ன நிலைகளை கொஞ்சம் பதராமல் இதயத்தால் ஏற்று பிசகாமல் அந்த நிலையை நினைவில் கொண்டு இசையும் மூச்சை அடக்கி நிறுத்தி உன்னால் தன்னை ஒடுக்கி ஒன்பது வாயில்களையும் தாழிட்டு குருவிற்கு சரணமிட்டு கற்றுக் கொடுத்தவையில் பிசகாமல் அதில் நிலைத்து களைப்புறாமல் எந்த நிலையில் தரித்தாலும் நல்ல தவம் முடித்தல் ஆகும் இத்தவத்தால் இதுவரை கண்டிறாத காட்சி எல்லாம் காண்பாய் என்பது மெய்.

61 - வது பாடல்

உற்றசெய்தி யாயுரைத்தேன் ஆகூத்து இதுதான்
உரைக்காததம் கூத்தை உலகவரே கேளும்

ஹாஹூத்தின் கலை நன்கு விளங்க வேண்டுமாய் உண்மையை உணர்ந்தோம் உணருக இனி எட்டாம் நிலையான தம்ஹூத் நிலை விளக்கித் தெரியலாம்.

62 - வது பாடல்

ஆதியே அநாதியா யிருந்த வாரும்
அருபமே உருவமா யெழுந்த வாறும்
தாதுபழமாதளையிற் பழுத்த வாறும்
தான் படர்ந்த கோவை யிடகனியின் வாறும்
வாதமுண்டு தாதுபழம் வளர்ந்த வாறும்
வன்னிமரம்கனி தனிலே முளைத்த வாறும்
சோதிமரம் நாலுபண ரான வாறும்
சுருபமொரு ஐந்து மொன்றான வாறும்
நீதமென்னும் இலை இரண்டு இதழின் வறும்
நிலையாத நான்குவே ரொன்றான வாறும்
ஆதிமறம் மூன்றுநிற மான வாறும்
அந்தமரம் அட்டதிசை படர்ந்த வாறும்
வேதமென்னும் கனிநடுவிற் பழுத்த வாறும்
வெகுபேர்க ளுண்டு குலமான வாறும்
இப்புதுமை உலகத்திற் சொன்ன பேரை
எல்லவருங் குருவென்று பணியலாமே.

முதலில் அல்லாஹ்யென்ற பிரமம் மட்டும் ரூபமில்லா பிரமமும் பல்லாயிரங்கோடி ரூபம்

கொண்டான் என்ற விதம்தான். மஹாபெரிய ஜீவசக்தி மாதுளை முத்துக்களை போன்று கனிந்து காய்ந்த விதமும் படர்ந்து வளர்ந்து மலர்ந்து கனிந்த விதமும், பாதரசமும், தாதுரசமும் பழங்கள் போல் கனிந்ததுயென்ற விதமும் வன்னிமரக்கனிகள் அமுதம் கொட்டுவதற்கு நாமூட்டும் உள்ளோட்டத்தின் அக்கினி தாக்கங்களை எடுத்துச் சொல்லும் பாவனை, அல்லது வன்னிமரம் என்ற சாதிக் கனி தனிதனியாய் முளைத்தன என்ற விதமும், ஜோதி மரம் என்பது வேத வெளிச்சம். இந்த வெளிச்சத்தில் இஸ்லாம் என்றும், ஈமான் என்றும், இஹ்சான் என்றும், தக்வா என்றும் நான்கு கிளைகளாய் தெரிந்தன என்ற விதமும் அந்த நான்கும் தோற்றக்கிளைகளாக வந்த விதமும் இன்னும் அல்லாஹ் யென்ற மகத்தான நான்கு வேதமும் நான்கு இலைகளாகப் பிரிந்த விதமும் என்று எடுத்துக் கொள்ளலாம். அல்லாஹ் யென்ற தோற்றம் ஐந்து பூதங்களாய் பிரிந்து மனிதனில் ஒன்றான விதமும் பின் ஐந்தும் ஒன்றான விதமும் நாதம் என்ற ஒளியில் அல்லாஹ் முஹமது என்று இரு நிலையில் மட்டும்தான் என்ற விதமும், நான்கு பூதங்கள், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஒன்றான நிலையில்லா விதமும் நூரே முஹமதியா ஆதம் முஹமத் என்ற நிலையான விதமும் இந்தப் பொருளின் தத்துவத்தைக் கொண்டு தான் அட்டத்திக்கு படர்ந்து விரிந்து நிலைத்தது என்ற விதமும் அந்த மூன்றைக் கொண்டுதான் வேதமென்னும் கனி தனித்தனி என்ற விதமும் குலம் குலமாக பிரிந்தோம் என்ற விதமும் இப்பாடலில் உள்ளார்ந்து பொருள் அறிந்து சொன்னவரே உற்ற நிறை குரு என்று சொல்லலாம்.

63 - வது பாடல்

அறிந்துகொள்ளச் சொல்லுகிறேன் முஹத்திதாத்து வெளியில்
ஐந்தாம் வணக்கமதிக்கீர் கபீயின் முடிவாகும்
பொருந்து மெட்டாம் புகழும்மக்காம் தம்கூத்துவிபரம்
போதவித்து நாதநிலை யுகல்யாகும் நுகத்தும்
அந்தக்கரு நாதமணி நடுநிலை வொளிவு
அது தானே யுதிரமெல்லாம் அணிந்துடலாய்த் திரண்டு

விந்தையுள்ள கருவுக்குள்ளே விளைந்த சூடு நினைவு
வேகமுட லெங்குமுயிர் வெதுவெதுத்தே நிற்கும்.

தவத்தால் ஐந்து முறையில் கபீ என்ற திக்ரை முன்னோக்கி மேற்கொள்ளும் தவமே முக்தியான நிலையானதாகும். இதை உணரும் போது எல்லாம் ஒன்று என்ற உணர்வு தோன்றும் தியானத்தின் முடிவில் இறைமையின் தொடக்க நிலையை உணரும் மட்டிலடங்கா நிலையே தம்கூத்து என்பதாகும். விந்தும் நாதமும் மரபு அணு என்றளவில் சுருங்கி பூத உடல்களில் தங்கி நின்று பின்பு புள்ளி போன்ற வடிவமாகும். அந்த நாதமணியின் பிரகாசங்களின் அசல் தன்மையாகும். அந்த நாதம் உதிரமாய் உருண்டு உடலாய் திரண்டு விந்தை உள்ள கருவுக்குள்ளே விளைந்த நினைவில் உண்டான கதகதப்பு தன்மை கொண்டதாகும். அந்த கதகதப்பை நாம் தியானத்தின் முலம் உணர்ந்தாக வேண்டும்.

64 - வது பாடல்

அங்கமெல்லாம் நபியாகும் அவனினை வேறாகு
அதுதானே கருநினைவு ஆசையுட னறிவு
கருநாதம் நுதல் நடுவே காபக் கவுசைனி
கண்ணான பார்வையொளி ஹக்கென்றறி வீரே

இன்னங் கருநாதமினிப் பேச்சுமூச்சுப் பார்வை
இரக்கமுடன் கோபங் கேள்வி எதுவுமது வாகும்
தன்னையறிந் தல்லவோ தனது பொருளறிந் தால்
நானே தான் தானே தான் தம்பிரானு மாகும்.

நம் புருவ மிடையே நினைவு காபகௌசை தரிபட்டு மனு என்ற மாயையை இழக்கும் போதுதான் மனிதனின் ஆதி நிலையான தூய்மையான ரப்பானியத்தை அலிபின் பிரகாசத்தைக் கொண்டு ரப்பு என்பதை உணர முடியும் இன்னும் அந்த கருநாதத்தின் குணம் தான் நம் பேச்சு, மூச்சு, பார்வை, கேள்வி, கோபம், காமம், இரத்தம், இந்திரியம் என எல்லாமே இப்படியாக உணரும் போதுதான் தன்னைத் தானறியும் நிலை

உண்டாகும். கூறப்பட்ட ஐம்பூதமெனும் பொருளை அறிந்தால் தான் ரப்போடு நாம் ஐக்கியப்பட்ட உறவை அறியலாம். தன்னையறிந்தால் தான் தன் தலைவனையறியலாம் என்பது போல் எல்லாம் வல்லமையில் உள்ளது என்பது உணர்த்தப்படுவோம். ஆத்மாவின் மேல் போர்த்தப்பட்ட சதை உதிரம், எலும்பு, ஊண் போன்று சமைந்த உடலில் நபி என்றும் தீட்சன்யமிக்க நினைவெல்லாம் உயிரின் உள்ளமை என்று அறியவும்.

65 -வது பாடல்

கருநிலையிற் கருநினைவைக் கருதுவதினா லறிந்தால்
கடிதான பாவமெல்லாங் காற்றிற் பஞ்சாய்ப் பறக்கும்
அறம்வைத்த தங்கம்போலே அங்கமுட லாவி
அணியாய மடுத்தாலும் அழுக்கைக் கழுகப் போமோ
கருநிலையை யறியாரே கழிம்பு பித்தளைச் செம்பு
காய்ச்சி நூறுபுடமிட்டாலும் கழும்புபோகா துண்மை
ஒருபத்து ஒன்பதித்த உயர்ந்தறிவு நிலையை
உலகமெல்லா மறியவென்று உவந்துறைத்த தாமே

இருநிலையாய் நிற்கின்ற காரண காரியங்கள் நன்று உணர்ந்து நினைவின் கருவாகிய நினைவினை கொண்டு நிலையாக நினைத்தோமேயானால் நம்மில் பரிசுத்தமாகவும் அப்பொழுது நம் முன்பாவங்கள் எல்லாம் காற்றில் பஞ்சு போல் பறக்கும் நீடொலி அலிஃபுடைய நிஜமான தோற்றம் நம்முன் வந்தவுடன் புடம் போடப்பட்ட தங்கம் போல் நம் தேகம் மின்னும் கருவை அறியாத போது பித்தளை, செம்பு போன்ற உலோங்களை நூறு புடம் போட்டாலும் அதன் கருமை நிறம் போகாது அதுபோல் பாவமென்ற அழுக்கு போகாது இறை மெஞ்ஞானங்களின் பத்தொன்பது நிலைகளையும் உலகமக்களுக்கு உள்ளதாக சொல்லிவிட்டேன்.

66 - வது பாடல்

உவந்துரைத்த விதத்துக்கெல்லா முற்ற செய்தியாக
உலகமெல்லா மலிபுவென்று உவந்துறங்கும் வசனம்

உரைத்தவிதம் இருபத்தெட்டு யாதுநிலையி னதிகம்
ஒன்றதிக மென்றுரைத்த யாது மிதுவாகும்
ஊமையெழுத்தோ றெழுத்து ஒருமூன்று ஐந்தாம்
ஓரெழுத்தோ ரெழுத்து ஒருமூன்று ஐந்தாம்
ஊமையது ஒன்றுமது ஒருமூன்றே யைந்து
ஒரு மூன்றே யொன்பதாகி யொன்றான பொருளாம்.

தவநிலையை தனித்தனியே பிரித்துச் சொன்ன விதத்தில் இருபத்து எட்டு என்ற நிலையை ஓரெட்டாக எட்டி நிறை குருமார்கள் நிறைவோடு விளங்கிக் கொண்ட ஞானபரிபாசை இருபத்தி எட்டு நிலைகளை தெளிவாக எடுத்துச் சொன்ன விதம். ஊமை எழுத்து இது படைப்புகளுக்கு அப்பாற்பட்டது. எந்த பரிபாசைகளுக்கும் அப்பாற்பட்ட இந்த ஊமை எழுத்தை அல்லாஹ் என்ற அட்சரத்தின் அகரத்தை மொழிகளுக்கு அப்பாற்பட்டு மௌன மொழி பேசும் ஞான வான்கள் அகர மென்ற அஹதியத்தை இருபத்து எட்டு நிலைகளாக பிரித்துணர்ந்து பின்பு அந்த இருபத்து எட்டு நிலைகளைக் கடக்கும் பட்சம் ஒரு நிலைப்பாடு கிடைக்கும். அந்த ஒரு நிலைப்பாட்டை ஊமையான எழுத்தின் உள்ளர்த்தம் அந்த ஊமையான ஓரெழுத்து எட்டு நிலைகளில் தரிபட்ட ஊமையென்ற ஓரெழுத்தே மீதமானது அந்த ஊமையெழுத்து ஒன்பது வாயில்களின் மூலமாக ஒரு பொருள்பட நிற்கிறது.

67 - வது பாடல்

மறையான பலகலையு மற்றுமுள்ள மொழியும்
மாநிலத்திற் பாஷையெல்லா மடக்கி யொருவெழுத்தாய்
எங்குமது தானாக நிறைந்திருக்கும் பொருளாய்
எங்குமது பலபாஷை யெவர்மொழியும் சரியாம்
முறையான தொரு பொருளின் முப்பொருளுங் கூடி
முப்பொருளும் ஒன்பதாகி முடிந்தவூமை யெழுத்தாம்
இதுதானேயாதாகு மிதில்வணக்கம் சொல்வேன்
இதமாக வணக்கமைந்தி லேத்தமுள்ள தொன்று

மறையான வேதங்களால் பிரித்து வரும் கலைகளாய் மாநிலத்தோர் மாற்றிப்பிடிக்கும் பாசை

ஒலிகளாய் கலாச்சார மாற்றத்தின் எதார்த்தத்தில் காலகாலமாய் மாறி மருவி சுழன்று வருவதும் இந்த ஊமை எழுத்துத்தான் பலபாஷைகளில் விரவி தன்தானாய் விளங்கி நிற்கும் ஊமை எழுத்தைக் கொண்டுதான் அல்லாஹ்வை உணரமுடியும். இந்த ஒரு பொருளின் உள்ளார்த்தத்தில் தான் முப்பொருளான நூரே முஹம்மது (ஸல்) ஆதம் அலைஹிஸலாம் இந்த ஊமை எழுத்தின் உள்ளமையிலேயே உருளுகிறது இந்த முப்பொருள்தான் ஒன்பது கிரகங்களாய் இந்த பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டு நிற்கிறது அந்த ஒன்பது-தான் ஊமை எழுத்தாக வணங்கும் நிலைகளில் நாம் அறியப்பட வேண்டிய விஷயம். நாம் ஐங்கால வணக்கங்களில் இந்த ஊமை எழுத்தை பிரபஞ்ச இயக்கங்களோடு முப்பொருளாய் நினைவில் தரித்து நின்று நிலை கொள்ளும் போதுதான் நிறைவான வணக்கமாகும்.

68 - வது பாடல்

விதமதிக வணக்கமது வெளியிலும் வாராது
வேதமெல்லா மடக்கியுள்ளே விட்டுப் பிரியாது
அதியமுள்ள வணக்கம் திக்கீர் கபீயதுவு மேதால்
அணுவும் பிசகாமல் மனதுட்கருத்தில் பொருந்தல்

அதை யறிந்த பெரியோரை யடிபணிந்து தொழுது
அவர்போலே யதையறிந்து அளிவுக்குள்ளே தரிந்து
அதைத்தானே அங்கத்துக்கு ளாட்டியோட்டி யேத்தி
அதைமாற்றி மண்கூசை மஃகூசாய்த் திருப்பி.

இப்படி வணங்கும் வணக்கம் தான் ரப்பை சென்றடையும் ஏற்றமான வணக்கம். அது தன்னுள் அடக்கமாகும் அதைச்சார்ந்த வணக்கம் தான் திக்ரே கபி இந்த வணக்க நிலையில் நினைவை அந்தரமாக்கி அனு பிசகாமல் மனதுக்குள் கருத்தூன்றி நினைவோடு தரிபட்டால் தரிபட்டோரை மனம் உகந்து பதம் பணிந்து அவர் அறிந்த விஷயங்களை எல்லாம் தானறிந்து தரிபட்டு தன் அங்கக் கூட்டுக்குள்ளே அந்த வணக்கத்தை நிறுத்தி அப்படி அசைத்து சுவாசத்துக்குள்ளே ஓடவிட்டு ஏற்றி அப்பால்

மன்சூசாகிய நினைவை மஹ்சூசாகிய சுவாசத்துடன் மாறி மாறி நேசித்து பூரித்து கும்பிப்பது தான் திக்ரே கபீயாகும்.

69 - வது பாடல்

இருப்பதல்லோ கபீயின்திக்கிர் யாது முடிவாகும்
இந்தமுறை யெந்தறிவு வென்றறிவதனால்
தரிப்பதுதான் முகுத்திதாத்துப் பாதைமுடிவாகும்
தவஞ்செய்யும் விதத்தையினித் தானறியச் சொல்வேன்
இதமாக சுகூதுவள மிதையறிந்து தனைமறந்து
இருக்கையிலே எட்டிதமும் இடையிற் பதினாறும்

இருபத்தினாலுமீமும் இதில் நடு மீமொன்றும்
இருபத்துஐந்துமீமும் இலங்கு முள்ளே நிலையில்

இந்த திக்ரை கபீயின் இருபத்து எட்டு நிலைகளையும் நன்கறிந்து உணர்ந்து தவமேற்கொள்வதே உற்றதவம். உருப்படியாக தவம் செய்வோர் இதை உணர்ந்து கொள்வர். இந்த இருபத்து எட்டு வணக்க நிலைகளும் நம் தேகத்துள் எது எதைத் தொட்டு நிலவுகிறது என்பதை உணர்வது தான் முஹ்தித்தாத்தாகும் இந்த முஹ்தித்தாத்தை முழுமையாக உணரும் போது தவநிலையின் படித்தரங்களை பூரணமாக உணருகிறான். தவம் செய்வோருக்கு இதை தவறாமல் சொல்லி விட்டேன் தன்னைத்தான் மறந்து தனித்திருக்கும் போது தன்னில் அரூபமாய் வியாபித்திருக்கும் ரப்புவானது தன் முன் ஷுஹூதாகும் எதார்த்தத்தை உணர்ந்து இருக்கும் நிலையில் (எட்டுத்திக்கும் பதினாறு கோணமும்) ஜோதிப் பிரகாசமான ஆயிரத்தெட்டு இதழ்கள் சூழ்ந்து நடுவே சுந்தர கலைகள் பதினாறு -ம் விரவி ஆலமுன் நூரில் இருபத்து நான்கு அட்சரம் கொண்ட கலிமாவும் முகம்மது என்ற மீமும், இன்னும் இருபத்து ஐந்து மீம்களாக எல்லா நிலைகளையும் கடந்து நிற்கிறது.

70 - வது பாடல்

உருவமில்லா தொருமீமும் உள்நிலையின் பொருளாம்
ஓரெட்டு ரேகையதி லோடி வளர்ந்திருக்கும்
சுருபத்தை வளைந்தவட்டம் சுகக்கோட்டை ஈமான்
சுழிகொண்ட வட்டத்துமே விருப்பத்தினால் மீமும்
அறிவாக அத்தனையும் மழகாத் தெரியும்
ஆயிரத்தெட்டிதழா மலங்கு மலர் மேலே
கருநடுவாத் நினைவுதனிற் கருத்ததனை யிருந்த
கலங்கியதுநடு நுகத்திற் கலந்தேயது பிரிந்து.

அரூபமான அந்த மீமின் உட்பொருள் எட்டு என்ற விகிதப் படி சுவாசம் தரிபட்டு தேகத்தை அடைய வளைந்து ஈமான் என்ற ஒளிவாக பிரகாசிக்கும் அந்த சுழி கொண்ட வட்டம் இருபத்து நான்கு கலிமாவை அடக்கிய மீமாகிய மகா பிரகாசமான ஆயிரெத் தெட்டு இதழ் கொண்ட நினைவு என்ற அர்ஷின் நடுவில் சுருங்கிய மையப்புள்ளி என்ற நுக்கத் வடிவமாகிய பல இழைகளாகப்பிரியும்.

71 - வது பாடல்

தெரிமந்த விண்ணுலகில் தெரியும் மந்தப்படியே
தெரியுமதே திருப்பார்வை திறமாகப் பொறுத்தே
ஓரேழு விண்ணுமுயர் படிதிறந்தே யேற
உடையவன்றன் குறுசறுஷும் தறுகாவும் தெரியும்
அறியதிசை விலங்கும்படி யந்திரக்கூட் டதனில்
ஐந்திதழின் மலரின்நடு அலிபுமப்போ தெரியும்
பெரியவனும் பிருதியையு முற்றதுநா மென்றே
பேதமில்லா மல்லமதி பெற்றிருப்பதென்றே
அறியவர்கள் உலகந்தனில் மிகுறாஜென் றுரைப்பார்
அறியார்கள் ஆலம்வேறே அறுஷுவேறே யென்பார்.

பிரிந்த இழைகளை ஆகாயமாகப் பரவி விரிந்த அந்த உள்ளார்த்தங்களை பார்வையின் தீட்சண்யமாக நினைவைப் பொருத்தி நின்றோமேயானால் ஏழு வானுலகமும் நாம் ஏறிச் செல்லும் படி திறக்கும், அங்கு நாம் ஏறிச் செல்ல ரப்பு அமர்ந்திருக்கும் அர்ஷ் குர்ஷும் அதற்கான தர்காவும் தரீக்காவும் தெரியும் திரை விலகி தடுமாற்றமற்ற தீனவர்கள் கூட்டம் கூட்டமாக ரப்புவுடைய லிகாவில் தனை மறந்து மகிழ்ந்து ரப்புவை

தரிசிக்கும் பொழுது பேதங்களற்றுப் போன ஐந்து - வேளை வணக்கமெனும் மலரின் நடுவே மகா பிரகாசமான அலிபின் ஜோதியாய் அல்லாஹ்வின் தரிசனத்தைக் காண்பார்கள். இதை அறிந்தவர்கள் இதைத்தான் முமீன்களின் மெஃராஜ் என்பார்கள் அறியாதோர் அல்லாஹ் வேறு; நாம் வேறு என்பார்கள்.

72 - வது பாடல்

சரியான மிகுறாஜு வுலகவருக் கிதுதான்
ஸையிது முஹம்மதுர்ற ஸூலுரைத்த தாலே
தெரியவென்று தீனவர்க்குத் திறமான வகையைத்
தேடக்கிடை யாதரத்ன திரவிய மாலையை
பிரியமுடனே சொன்னேன் பீரமுஹம்ம தென்போன்
பெரியோர்ன்றன் பிஸ்மில்க்குறம் பேசினதென் றறிவீர்
இதைத்தானே உலகிலுள்ள குருவெடுத் துரைத்தார்
இதமான பிசுமில்முத லெந்த விதங்கேளும்

இந்த மெஃராஜைத்தான் முஹம்மது (ஸல்)அவர்கள் முமீன்களுக்கு முழு விபரமாக சொன்னார்கள் தொழுகை என்பது முமீன்களின் மெஃராஜ்(நபிமொழி). ரசூல் சொன்னதின் படி தக்கலையார் பீர் முகம்மது அப்பா அவர்கள் பேரின்பமாக பிஸ்மில்குறமதில் பிரியமுடன் சொல்லித் தந்தார்கள் இந்த உலகில் தோன்றிய தோன்றும் நிறைகுருமார்கள் உலகிற்கு எடுத்துரைத்தார்கள், இனியும் எடுத்துரைப்பார்கள் இதனோடு இதமாக பிஸ்மில்குறத்தின் முதலெழுத்தை பிரியமுடன் பேசுகின்றேன் கேளும்.

73 - வது பாடல்

விந்தைபெறும் பிசுமிலதின் எழுத்துமுதற் கடையும்
விளம்பியது ஒருபத்து ஒன்பதுமே சரியாய்
அந்தெழுத்துக் கொரெழுத்துக் கோரறிவுமாக
ஆலமெல்லா மறியவென்று அழகாகச் சொன்னேன்
எந்தவகை யெதற்கதிகம் பிசுமிலுட வழமை
யெல்லவரு மிதயத்தி லறியக்கடனெனவும்
மூந்தமுதல் கடைமுடிவு முறையாக வுரைப்பேன்
மூமீன்களனை வோரு முவந்தறியத் தானே.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற அரபு உச்சரிப்புக்கு பத்தொன்பது எழுத்துக்கள். அந்த பத்தொன்பது எழுத்துக்களும் வித்தியாசமான தவநிலையில் பாதுகாப்புக்களை உண்டாக்கும் என்பதை தெளிவாக பிரித்து விளங்கும்படி சொன்னேன் பிஸ்மி மறைபொருளான ஞான எதார்த்தங்களை உள்ளடக்கியதாகும் என்பதையும் மறைக்காமல் சொல்லிவிட்டபோதும் அந்த பிஸ்மியில் பொதியப்பட்டுள்ள ஞான பொக்கிசங்களில் மறைக்கப்பட்ட திரைகளை திறக்கின்றேன் இறைவாசிகளே ! கொஞ்சம் கவனிக்கவும்.

74 - வது பாடல்

அறிவான அறிவுகளி லதிகமுள்ள அறிவு
ஆதி திருநாமமது தானுமது ஏதால்
சரியான பிசுமில் முதல் நாமமிவை யறிவாம்
சகலகலை மறையும் பிசுமிலதின் பொருளாம்
அருவுருவும் சுரூபமில்லா னமைந்த விதமெல்லாம்
அருவுரும் சுரூபமுமா னமைந்து முடிந்ததுவாம்

பெரியவன் றானமைத்த தெல்லா பேருசொல்லத் தெரியேன்
பெரியவனே தவிரவொரு பிரிவும்வேறே யில்லை.

அல்லாஹ்வை அறிய வேண்டி அவன் (சிபத்தை) நற்குணங்களை மேலான திருநாமங்களை நாம் அறிந்தாக வேண்டும். மனிதன் தத்துவத்தின் மூலம் கற்க வேண்டிய கலைகள் எல்லாம் இந்த பிஸ்மில் குறத்தில் விரவிக்கிடக்கின்றன என்பதை அறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் அதிதமான சொருபம் கொண்ட நாமம் அர்ரஹ்மான் என்ற நாமம் விசாலமாக வினவப்பட வேண்டியவை அந்த நாமத்தைக் கொண்டு அவனை அவனே தொடங்கியுள்ளான் தொடக்கமும் முடிவும் அவனின் தொடக்கமே என்ற பெரும் ஞானத்தை அறிந்து கொள்ளாதவர்கள் ஞானம் அடைய மாட்டார்கள் என்பது திண்ணம்

75 வது பாடல்

அறியவகை யித்தனையென் றறியவகை யில்லை
அத்தனையு மவனுரைத்த அருள்மறையி லடக்கம்
எத்தனையோ கோடிமறை யிறையுரைத்த தெல்லாம்
எடுத்தொடுக்கிக் குர்-ஆனை யிறையிறக்கிக் கொடுத்தான்
முத்தான குர்ஆனுக் குயர்ந்தமறை யில்லை
முன்னுரைத்த வேதமெல்லா முடியவில்லை யெனவே
அத்தனையும் குர்ஆனுக் குள்ளடக்கி வைத்து
அடங்காத குர்ஆனை அணுப்போலே சுருக்கி

மனிதன் இறைவனை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டி ஞான நூல்கள் எத்தனை எத்தனையோ! அழகிய ஆகமங்களையும், அற்புத வேதங்களான மும்மறைகளையும், மாந்தர்களுக்கு விளங்க வைத்தான். இறைவன் தன்னை அறிய வேண்டி அளித்த ஆகமங்களும், வேதங்களும் பயனற்று போயின. இந்த நிலையில் முஹம்மது (ஸல்) அவர்களின் வாயிலாக எளிதே விளங்கும் படியான அழகிய குர்ஆன் ஷரீபில் இறைஞானமாகிய மகா வெளிச்சத்தை இந்த உலகுகக்கு தந்தான். அந்தக் குர்ஆனை உலகத்தார் அளந்து பார்க்க முடியாத அளவு ஒரு அணுவைப்போல் சுருக்கி அவன் மறையில் தொகுத்தான்.

76 - வது பாடல்

கொத்தான ஆயத்தொரு ஐந்துக்குள்ளே யொடுக்கி
குல்ஹுவல்லாவென்று சொல்லிக் குவலயத்தி லிறக்கி
அத்தையுமே சுருக்கியொரு ஐந்தெழுந்தார் பிடித்து
அல்ஹம்தென்ற ஐந்தெழுத்தால் அனைத்துமதில் முடித்தான்
கத்தவன்றன் றிருவாக்கா லுரைத்தது அல்ஹம்து
கடல்மலையும் கடுகுக்குள்ளே காணும் விதம்போலே
மற்றவகை யனைத்து மிறை மனது கொண்டு முடித்து
மதிப்படங்கா யொருநூற்றிப் பதினான்கு எழுத்தாய்

குல்குவல்லாஹு என்ற சொல்லை ஐந்து எழுத்தில் அல் ஹம்தாக அமைத்தான் அல்லாஹ் என்ற ஐந்து எழுத்தைக் கொண்டு சுருக்கி அல் ஹம்து என்றாக்கி அவை கடல் மலைகளுக்குள் மறைந்த விதம் போல் மறைத்தான். ஞான மகான்கள் இந்த மறை ஒலியை

விளங்கிக் கொள்ள வேண்டி அ என்ற அலிபின் வடிவத்தை சுருக்கி நூற்றுபதினான்கு அத்தியாயமாக விரித்தான் அறிவுடையோர்கள் புரிந்த கொள்வது அவசியம்.

77 - வது பாடல்

அத்தையுமே யடக்கியே அல்ஹம்து தன்னையொடுக்கி
அவனாமம் பிசிமிலென்று அதிகமாகச் சொன்னான்
இத்தனைக்கும் பெரியதவ மிறைநாமம் பிசுமில்
இதற்குள்ளே யடங்கும் பொரு ளெடுத்துரைப்ப தரிதே
அந்த பிஸ¬மில் முதலான விதமே தால்
அணுப்போலே கொண்டபுள்ளி அலிபாக நீண்டே
அந்தப் புள்ளி அலிபு மமைந்த தொரு பேயாம்
அந்தரத்தி லானதினா லதுநினைவு சிர்றாம்.

அல் ஹம்து என்பதை பிஸ்மியைக் கொண்டு அல்லாஹ¬ சுருக்கி மறைத்தான் தன்னைத்தான் தெரிய வேண்டிவருவோர் ஞானவான்கள் தவத்தின் பெரிய தவமாய் பிஸ்மி உடையதவம் அதில் பற்பல ரகசியங்களை மறைத்த நிலையில் அல்லாஹ் அறிவித்தான். நுக்தா என்பது எழுத்தின் அச்சரத்தின் சுருக்கம். இதுவே ஞானங்களின் மூல அச்சரத்தின் துவக்கம். நுக்தா என்ற ஜோதி வடிவம் அலிப் என்ற ஜோதி வடிவமாகி மீண்டும் அச்சரங்களாக விளங்கப்படும் என்பது இரகசிய பொருளே அலிஃப் என்ற அரபிச்சொல்லுக்கு அடுத்து வரும் சொல் பே. பே என்ற உச்சரிப்போட இந்த வடிவத்தில் வந்தவை எல்லா நிலைகளிலும் அலிபேதான் அந்த அலிபே முதன்மையாகக் கொண்ட அல்லாஹ் பிஸ்மியை மட்டும் பே-யைக் கொண்டு தொடங்கினான். காரணம் அல்லாஹ் என்ற மகா பெரிய ஜோதியை நுக்தா வடிவமாக சுருக்கி அலிஃப் வடிவில் நின்ற அந்த தோற்றத்தை இந்த பே-யில் அந்தப் புள்ளியில் அலிபையும் சாய்ந்த நிலையில் அமைத்தான். அல்லாஹ¬ பிஸ்மியைக் கொண்டு தொடங்கினான் அது ஆரம்பத்தில் அலிஃபின் தோற்றமும். நுக்தாவையும் இணைத்தான். இப்படித்தான் அதன் தோற்றதால்

அல்லாஹ் சிர்ராஹீ அமைத்தான். நுக்தாவும் அலிபும் கூட்டாக அமைந்த இந்த மாபெரிய விஷயத்தில் பே என்ற ஒளியில் பல இரகசியங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

78 - வது பாடல்

இந்த சிர்றே மீமாகி இதுநாலும் பிஸ்மில்
இதுநாலும் வனாம்மிது விதம்வேறில்லை
அந்தரத்தி லானசிர்றா லமைந்த மீமுக்குள்ளே
அமைந்தவெளி நூறான பேருமஹு ¬ மூதாம்
பேரான திறைநாமம் அல்லாஹு ¬ வென்று
பிசகாம லெட்டும் பிஸ்மில்லாஹி யாகும்
இந்த வகை யெட்டெழுத்தும் எண்கோண மாகி
யெல்லாமுருப்படவே யானவிதமே தால்

கவனிக்க வேண்டிய விவரம் இரகசியப் பொருளான பிஸ்மி மகா இரகசியம் புரிந்த அலிப் என்ற அகரமும் அலிப் சார்ந்த நுக்தா வடிவமான பே யும் பிஸ்மி என்ற ஒலியின் கடைசி மீமும் இரகசியமுள்ளதாக இருக்கிறது மீம் என்பது முஹம்மது (ஸல்) அவர்களை உணர்ந்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. பே என்ற அட்சரம் அல்லாஹ்வை குறிக்கும் அல்லாஹ் முஹம்மது என்ற நாமங்களை உள்ளடக்கி பிஸ்மில் என்று ஆயிற்று இந்த பிஸமில் என்ற நான்கு எழுத்துக்களும் அருபமான அல்லாவின் நான்கு மகத்தான குணங்களை சுட்டிகாட்டுவதாக இருக்கும் தவம் செய்வோர் அல்லாஹ்வை அறிந்து கொள்ளவேண்டி இந்த நான்கு எழுத்துக்களும் என்னென்ன குணங்களைச் சார்ந்துள்ளது என்பதை அறிவது அவசியமாகும். நினைப்பு என்ற ஆகாயத்தில் ஒரு ஒளி உண்டாயின் அதுதான் முஹம்மது அல்லாஹ் என்று கூட்டி கணக்கிட்டால் எட்டு எழுத்துக்கள் கொண்டதாகும் இந்த எட்டு எழுத்துக்களும் எண் கோணமாய் உடல் உறுப்புகளில் விரவி உடல் தத்துவங்களை நடத்துகின்றன என்பது.

79 - வது பாடல்

வந்தவகை நூறுநாலா யதுநான்கு பிரிவும்
வல்லமைகொண்டது தானெ அர்றஹ்மானாகும்
வந்தவிந்தை யானவகை யெந்தவகை யென்றால்
வந்துமுடி வானவள மனைத்தும் நிர்ற ஹீமாம்
இந்த பஸ்மி லுக்குள் ளுயிரெழுத்து மூன்று
எல்லா மறைகளுக்கு யெத்த முள்ளதமாம்
அந்தெழுத்தை யின்னதென்று ஆருமறி யாரே
ஆருஞ்சொல்லார் சொன்னாலும் ஆருமறி யாரே

இந்த தியான பீஜ ஒலிகளின் வழியாகத்தான் ஒலிகள் உண்டாகின்றன. (நூற்) இது நான்கு ஒலிகளாக பிரிந்து பல ஒலிகீற்றுக்களாக பிரிந்தன. அந்த ஒலிகளின் வழிகளாக வந்தவைதான் அர்ரஹ்மான் என்ற ஒலியாகும். பின் அந்த ஒலிகளின் தொடர்ச்சியாக அர்-ரஹீம் என்ற ஒலியும் உண்டாயிற்று. இந்த இரண்டும் அல்லாஹ்வின் சிறப்பு குணங்களைக் கொண்ட ஒலி வடிவங்கள். பிஸ்மியோடு கலந்து பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்றாயிற்று. பிஸ்மில்லாஹிர் ரஹ்மான் என்று தொடங்கும் இந்த மூல மந்திரம் அறிந்து உணர்ந்து மெய்த்தவம் மேற்கொண்டால் மெத்த தவமாகும். இந்த பிஸ்மியின் உயிர் எழுத்துக்கள் மூன்று அந்த மூன்றுக்குள் வேதங்களின் பொருள்கள் எல்லாம் அடங்கியுள்ளது. பிஸ்மியில் மறைந்திருக்கும் மகா இரகசியமான எழுத்தை யாரும் அறியார். அறிந்தோரும் சொல்லார். இதை அறிந்ததாக சொல்பவர் எல்லாம் அற்பரே இஸ்முல் அஃஹ்லம் என்ற மாபெரிய இரகசியம் இதனுள் இருக்கலாம் என்பது கருத்து.

80 - வது பாடல்

அந்தெழுத்து மூன்றிலொன்று அதுதானே தாத்து
அஹதியத்து மதுதானேயதிலுமதைப் போலே
வந்ததுதான் உஹதத்தென்று அமைந்தது சிபாத்து
வதிலுமதைப் போலமைந்த வாஹிதியத் தாமே
வாஹிதியா வானதென்ன வனைத்துமுடிந் ததுவாம்
வரமான தவநிலையின் வாழ்த்துக்குயர் மணியாம்
இந்த வகையறியார்கள் முந்தவகை யறியார்
அந்தவகை யறியார்க்ளந்தரத்தி லாவார்'

அந்த மூன்று எழுத்துக்களுள் ஒன்றுதான் அல்லாஹ் என்ற அஹது அஹதியத்தின் உள்ளமை தான் தாத்தே அஹது, அஹதே தாத். அந்த மூன்று எழுத்துக்குள்தான் அகதியத்தாய் நூரே முஹமதியாவாக வெளியானவை. இது அல்லாஹு¬ என்ற உள்ளமையின் பொருளிலிருந்து அப்படியே பிரிந்தவை இது அல்லாஹ்வின் சிபத்தாகும் அந்த ஒன்றிலிருந்து வந்ததுதான் வாஹிதியத் அண்டங்கள் யாவும் அதைச் சார்ந்த படைப்பினங்களும். மனிதன் ஜின் போன்ற படைப்பினங்களும் மற்றும் நடப்பன, பறப்பன, ஊர்வன போன்ற ஜீவ ராசிகள் போன்றனவும் இந்த வாஹிதியத்தின் தோற்றம் தான் என்பதை உணர்ந்து கொள்க ஆகவே பிஸ்மி என்ற தொடக்கம் எவ்வளவு தத்துவார்த்தம் நிறைந்தவவை. என்பதை உணர்ந்து தவம் மேற்கொள்வது தான் அல்லாஹ்வை அடையும் மெய்த்தவம்.

81- வது பாடல்

இந்தவகை யறிந்தவர்க ளெந்தனக்குங் குருவாம்
இவையறிந்த பேர்களெல்லாம் யாவுமறிந்தவராம்
யாவுமறிந்தவர்களென்று இருதயத்திச் சிறந்து
இதையறிய வேண்டுமென்று எவருமடி தொழுதால்
அந்தவகை யடுத்தவர யடி பணிந்து தொழுதால்
அவர்மனதி லிரக்கம்வந்தா லணுப்போலே யுரைப்பார்
எந்தமட்டோ இறையருள் தானெடுக்கமட்டும் போதும்
இதற்கதிகமானதவ மில்லை இல்லை யில்லை.

இந்த வகையெல்லாம்அறிந்த ஞானவான்கள் பீர்முகம்மதப்பா வாகிய எனக்கும் குருவாம், நற்குருமார்களெல்லாம் குர்ஆன்வெளிச்சத்தில் இதைத்தான் நன்கு விளங்கினார்கள். இவர்களே மெய்க்குருமார்கள். இவர்கள் இட்டதை உண்டு ஏவியதை கண்டு பின்தொடர்ந்தால் மெய்கலந்து அவர்கள் மெய்யானம் போதிக்கும் வரை பொறுமையுடன் காத்திருந்தால் அவர்கள் அருந்தும் அமிர்தத்தின் சொட்டாகினும் கிட்டும். அந்த சொட்டு

நம் மீது பட்டால் பாதாளம், ஆகாயம், பூலோகம் அடங்கிய மகா இரகசியங்கள் எல்லாம் அழகிய முறையில் நமக்குத் தெளிவாகும் அப்போது நீ தெளியமட்டும் தெரிந்து கொள்ளலாம் .இதுவே மேலான தவமாகும்.

82 - வது பாடல்

வந்தவரே மனமறிந்துவருடமொன்று தெரிந்து
வளமுள்ளபேர் யிருந்தால் வரிசைவள மிருத்தி
வளமாக் அறுநான்கு விரிவுசொல்லித் திருத்தி
வரைந்தெழுந்துமூன்றுஞ் சொல்லி வகைபிரித்துக் கொடுத்து

அந்தமூன்றில் கடையெழுத்தை யாதார மாக்கி
அதற்குமுதலதற்கடியுமகறகடியுமது வாம்
இதற்கடியிலிதமாக இருதயத்தை மாற்றி
இதமாக ரண்டுமது ஒற்றான பொருளை

ஞான வளம் கொண்ட இந்த குருமார்கள் சில ஆண்டுகள் தன்னோடு சிஷ்யனாக தரிப்படுத்தி உன் இயல்புகளை எல்லாம் நன்கு ஆய்வு செய்தபின் கலிமாவின் தத்துவமான இருபத்தி நான்கு பிரிவுகளை உள்ளத்தில் திருத்தமாக பதியவைத்து இன்னும் மூன்று எழுத்து தத்துவத்தையும் கற்றுக்கொடுப்பர் அந்த மூன்றெழுத்தில் ஒன்றைஉனக்கு கற்றுக்கொடுப்பதோடு இன்னும் இரண்டு எழுத்துக்களை உன் ஜீவ உடலில் பொருத்தி உன் இருதய ஓட்டத்தில் இசைத்து எல்லாம் ஒன்று என்ற தத்துவ நிலையைக் காட்டுவர்.

83 - வது பாடல்

முந்தச்சொன்ன எட்டெழுத்தில் முடிவெழுத் தென்றியம்பி
முன்னே சொன்ன முடிவெழுத்தை கடையெழுத்தாற் கொழுகி
வந்தமுதல் வகையெழுத்தை வடிவான எழுத்தாய்
வருமூன் றெழுத்தின்வள மென்பதையு மறிந்து

முந்தமுந்த முதலான முதலெழுத்தை யுன்னி
மூன்றெழுத்தும் பிசகாமல் முடிந்து பின்னி யுன்னி
அந்தரத்தில் மந்திரத்தையுருபடுத்தும் விதத்தை
அடிபணிந்தார்க் கிந்தலித மருள்வோனே ஆசான்.

மெய்தேடும் விசுவாசிகளே! நாம் சொல்லப் போகும் இந்த மெய்த்தவமுறையை நன்கு கவனிக்கவும். இது நாதனை நம்பக்கம் கொண்டு வரும் நாத மணி மந்திரம் இது நாடற்று, நகரற்று, காடற்று, காணுபவையற்று உன்னையும் அற்று உன்னுள் ஜீவனால் பேசும் பேரின்ப நிலையாகும். முன்சொன்ன எட்டு பீஷ எழுத்துக்களை தெளித்து எடுத்து அந்த கடைசி எழுத்தோடு கோர்த்துப்பார்க்க தோன்றும். எழுத்தின் வடிவோடு உனக்கு குருநாதர் சொல்லித் தரும் எழுத்தை சேர்த்துப்பார் அப்போது ஓசையுள்ள வாசக வடிவாய் தோன்றும் அந்த வாசகம் தான் உன்னை உயர்த்தப்போகும் நான்கு மறையும் பொதிந்த நல்லெழுத்து ஆகும். அதை உன் சுவாச ஓட்டத்தோடு இணைத்து ஒரு நிலையில் தியானம் செய்யும் போது உன் நினைவு என்ற ஆகாச மண்டபம் திறக்கும். அப்போது சொல்ல வேண்டியதை உன் குரு சொல்லித் தருவார்.

84 - வது பாடல்

இந்தவகை யிறியாத குருமாருங் குபிராம்
இறஸூல் முஹம்மத ருரைத்தினால் சொன்னேன்
அந்தவகை யறியாரைப் பணிந்தவருங்குபிராம்
அஹமதிற ஸூலநபியும் அருளியதால் சொன்னேன்

வந்தடி பணிந்துவகை கேட்குமவர் மனதை
வருடமொன்று பரிசோதித்து வளமுளபே ரானால்
சிந்தாமற் ஜெயப்படுத்தும் பேர்க்குரைப்ப தல்லால்
சிதறிவிடுஞ் சிறியோர்க்குச் ஜெகத்திலுரை செய்தால்

இந்த வகை தெரியாத குருமார்களும். இந்த வகை தெரியாத சிஷ்யர்களும் குப்ரிலே இருப்பார்கள். என்று நபிகள் சொன்னார்கள். வந்த சிஷ்யர்களின் தேவையான தோற்றங்களை ஆய்ந்து மனதை தொட்டுப்பார்த்து பக்குவமாக கற்றுக் கொடுத்தால் அல்லாஹ்வின் அடையாள ரூபங்களைப்பார்க்கலாம் என்று பீரப்பா கூறினார்கள்.

85 - வது பாடல்

வந்திடுமே கொடுபாவம் வன்னரகி லழுவான்
வல்லோன் முஹம்மதரும் வழித்தயதாற் சொன்னேன்
இந்தவித முற்றமொழி யற்றவருக் குரைப்பேன்
இதமாக இசுலாத்திற் காதாரஞ் சொல்வேன்
ஆதாரமான வகை யாருஞ் சொன்னாரறிய
ஆலமெல்லாம் தீனிசுலா மதிகமென்று அறிய
ஆலத்துக்குள் தீன்குலமே யதிகமென்று தெரிய
அறிவான மறைநெறியை யருளுவகை கேளும்
என்னவென்றார் காபிரிசுலாமும் ரண்டு விசளம்
எதுகாபிர் எதுஇசுலா மினியோதக் கேளும்.

இப்படி கற்றுத்தராதவர்களின் சிஷ்யர்கள் எல்லாம் குருவுடனே மொத்தபாவம் சூழ்ந்தவனாக நரகில் வீழ்வார்கள் என்று நபி சொன்னார்கள். நாம் சொல்லும் இந்த ஞான விஷயம். இஸ்லாமிய இனிய நிலைகளைக் கொண்டு மெய்மார்க்கம் கண்டு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய ஞான வான்கள் இந்த ஞானம் பற்றிய சமிக்கினைகள் செய்துள்ளார்கள். இந்த உலகில் இஸ்லாம் ஒளி போல் நீண்டு செல்லும் ஆற்றலைக் கொண்டவை இஸ்லாமிய ஞானம் சாகரம் என்பது தெளிவாய் தெரிந்த விஷயம். இந்த நிலையில் மாமறை வழங்கும் மாரகசியம் அறிந்து கொள்வது அவசியம். இறையின் தூதரை மறைப்பவர் காஃபிர் இறையின் தூதரை ஏற்பவர் இஸ்லாம் யார் காஃபிர் யார் இஸ்லாம் என்பதை இனிவரப்போகும் பாடல்களில் தெரிந்து கொள்க.

86 - வது பாடல்

நாமளிரு பேர்கிடையி லிபலீசு மென்ன
நாயனுக்குப் பகையான கருமமது ரண்டு
நானென்ற ஆண்மை அநாநிய்யத்தினீ யென்று
நான்வேறு நீவேறென்பது நாயனுக்குப் பகையாம்
நின்னயமே ஈமானாம் கிறாத்தசொல்லே இசுலாம்
நினைவுவேறே இறைவே றென்றால் நிச்சயமாய்க்குபிறாம்
ஆனதனாலறிந்து இறைதானினைவாக நினைத்து
அனுதினமு மனுப்பிசகா தநுவணக்க மிதுவாம்

நமக்கும் ஷைத்தானுக்கும். இடையே இருக்கும் பிரச்சனை என்ன? இறைவனுக்கும் ஷைத்தானுக்கும் இடையே இருக்கும் பிரச்சனை என்ன? அல்லாஹ் விரும்பாத செயல்கள் இரண்டு நான் என்ற தாத்தின் குணாதிஷயங்களை மனிதன் தன்னோடு இணைத்து நான் என்ற அகம்பாவத்தோடு அல்லாஹ்வை மறுப்பதுவும் அல்லாஹூம் அப்துவும் தனித்தனியாக உள்ளது என்று வாதிட்டு மனதால் நினைக்க கருமங்கள் செய்வது இந்த கொடிய காரியத்தை வேதம் படித்தவர்களும், வேதம் கேட்டவர்களும் செய்வது கொடிய பாவம் என்று விளங்குக. இந்த இரண்டு விஷயங்களில் இருந்து நம்மை காப்பதுடன் நாம் சொல்லும் திக்ரை நினைவில் நிரப்பி சுவாசத்துடன் ஓடவிடுவதுதான் ஈமான். நம் நினைவு வேறு இறைவன் வேறு என்று நினைப்பது இறைமறுப்பாகும். ஆகையால் நம் நினைவு இறைவன் இருக்கும் இடம்தான் என்பதை நிலைப்படுத்தி நம் சிந்தனையை நம் சுவாசத்தில் இறைவன் நாமமாக நடமாடுவது தான் மெய்த்தவ நிலையாகும்.

87 - வது பாடல்

ஐயமற ஆதியென்று ஆறுமிணை யன்றி
அவரவர்கள் தனையறிந்து தான்வணங்க வென்றே
நாயநிறை நானிலத்தில் நால் மறையும் வகுத்தான்
நல்லசுஹு யொருநூற்றி முப்பதையும் விடுத்தான்
செய்யுமுறை பலஞானஞ் சிதறாமற் கோர்த்து
ஜெகத்திலிறை யிறக்கும் வேதம் சுஹூபுமுழு தெல்லாம்
ஐயமென்று மாற்றி தவுறாதுமுதல் வேதம்
அதைமாற்றி மறுதரமு மழகுசபூர் வேதம்.

இந்த நிலையை மனிதன் அறிந்து விளங்க வேண்டும் என்பதால். அல்லாஹ் நபிமார்களையும், வேதங்களையும், நூற்று முப்பது ஆகமங்களையும் உலகிற்கு விரித்தான். அவன் கொடுத்த கட்டளைகளையெல்லாம், ஒன்றாகச் சேர்த்து மனித வாழ்வுக்கு பொருத்தமாக முதல் வேதமான தவ்ராத்தைச் சொன்னான் இன்னும் அவன் ஞானங்கள் பொருந்திய

விஷயங்களை கோர்த்து சபுர்வேதமாக அல்லாஹ்வே நமக்குத்தந்தான். தெளிவாக நினைவில் இருத்தி செய்யும் தவமே மெய்தவம் ஆகும். ஒன்று மனைவி மக்களோடு வாழ்ந்து தனித்தநிலையில் அல்லாஹ்வை நினைப்பது, மற்றொன்று மனைவி மக்களற்ற நிலையில் அல்லாஹ்வை நினைப்பது இரண்டும் மெய்த்தவமே.

88 - வது பாடல்

வையகத்தி லிறக்கிறதை மாற்றி மறுதரமும்
வரிசைபெறும் இஞ்சில் மறைவந்தது மூன்றாமே
இஞ்சில் சபூர் தவுறாத்து ஏகன்மறை மூன்றும்
இதற்கு முதலொரு நூற்றிமுப்பது சுஹுபும்
மிச்சமுள்ள பலஞானம் மெய்வகையு முண்டும்
மேலான தவநிலைகள் மெத்தவதி லுண்டும்
லட்சாதி லட்சம்வகை ஞானமுள்ள தெவையும்
லக்கமடங்காத குலம் வணக்கம் பலவகையும்

அல்லாஹ் மனிதர்களின் நிலைகளை புரிந்து ஆக்கபூர்வமான சில சட்ட திட்டங்களோடு வேதவிசாலமாக இஞ்சில் என்னும் மூன்றாம் மறையைத்தந்தான். இஞ்சில் சபூர் தவ்ராத்என்ற வேதங்களோடு சுஹுபு என்ற ஆகம ஞானங்களையும் கற்றுக் கொடுத்தான். இன்னும் ஞானம் என்ற முறையில் பார்த்தால் மெய் ஞானம், பொய்ஞானம் என்று மனிதர்களிடம் பலகூறாக பல வகையால் பலர்கையில் வந்ததால் மனிதன் மதி மயக்க நிலை அடைந்தான் பல இலட்சம் அளவில் சாஸ்திரங்கள் மலிந்திருந்தது போக பல இலட்சம் குலங்கள். குலங்களுக்கு ஏற்ற குணங்கள். மனிதாபிமானமற்ற நிறபேதம், குலபேதம், தன்னையும் தன்னைப் படைத்த ரப்பையும் மறைத்த சூழ்நிலையில் ஆனார்கள். எல்லாம் அற்றுப் போன நிலையில் மனிதர்கள் வேதங்களை தன் இஷ்டத்திற்கு மாற்றமுயன்றார்கள். வேதங்களும் இருளாயின வெளிப்படையான அல்லாஹ்வும் இருளில் மறைந்தான் தர்மங்கள் வெறிச்சோடிப்போயின.

89 - வது பாடல்

உச்சிமாக யுடற்கூறு முலகிலுள்ள தவமும்
உள்ளதெல்லாம் மூன்றுமறை சுஹ்பிலுள்ள பொருளாம்
அத்தனை செய்தாலும் மவரறியாதவ ரென்றும்
ஆதியருள னும்பலனு மவர்கட்கிலை யென்றும்
அத்தனைக்கு இறைதீதா றவர்கட்கில்லை யென்று
அந்த மூன்றுவேதம்சுஹ் புள்ளதையு மாற்றி
அத்தனையினுள்ள பொரு ளனைத்து மொன்றாயொடுக்கி
அணுவுக்குள்ளே கடல்மலையு மடைந்த வதிஜயமே

இந்த நிலையில் மூன்று வேதங்களையும் பல நூறு சுகுபுகளையும் கொடுத்த அல்லாஹ், இற்றுப்போன மனித மனங்களை தெளிவாக்க நாடி, வேதவிளக்கங்களை மாற்றி, மறுபக்கப்படுத்தி அல்லாஹ் அவைகளின் புதை இரகசியங்களையும், திறந்த ஞானங்களையும் ஒன்று திரட்டி, திரட்டிய ஞானங்களை எல்லாம் ஒரு கடுகுக்குள் எழு கடல்களையும் உள்ளடக்கியது போல் காட்டியது திண்ணம்.

90 - வது பாடல்

முத்து முஹம்மதுர்ற ஸூல்நபிக்கு வேண்டி
முன்னவன் தன்கிருபையினால் விண்ணுமண்ணும் புகழ
வெற்றியுள்ள புருக்கானால் மேலான் மறையாய்
விசளத்துக் குள்ளடங்காத வெகுகோடி தவமாம்
இத்தலத்தி லிறக்கும் புருகான் மறைமேலாகும்
இம்மறைக்கும் முன்மறைக்கு மதிக மென்னவென்றால்
வெற்றியுள்ள அலூதும் மேலான பிசுமிலும்
வெகுபிழையுந்தீர்த்து வைக்கும் இஸ்திஃபாறோடு

அல்லாஹ் அவனின் தன் மோகத்தால் காதல் பரவசத்தில் மோகித்துமிழ்ந்த நூரே முஹம்மதியாவின் வெளிப்பாடாக மகத்தான குண இயல்புகளை கொண்ட முஹம்மது (ஸல்) அவர்களை இந்த உலகத்திற்கு அனுப்பினான். அன்று தொட்டு பூஉலகம் மெய்த்தவமும் பூரணத்துவமும் பெற வேண்டும் என நாடி, விண்ணும் மண்ணும் புகழ் மணம் பெறும் வகையில் குர்ஆன் என்ற

பெரும் மெய்யான வேதத்தை அமைத்தான் அந்த மறைக்குள் சுருட்டி வைக்கப்பட்ட மகா இரகசியங்கள் கோடான கோடியாகும். எல்லா மறைக்கும் மேலான மறைதான் என்று சொல்ல சாத்தியமானதுதான் குர்ஆன் பாவமன்னிப்பு என்ற பிரார்த்தனை வாசல்கள் நிரம்பியுள்ள வேதமாகும். மன்னிப்பை வேண்டுவோர் மீட்சி அடைவார்கள் என்ற பாதுகாப்பும் உள்ளன நெருப்பில் மாட்டி கைகால்கள் எல்லாம் வெந்த நிலைகள் எப்படியும் அபயம் கிடைத்தால் போதுமென்ற நிலையில் ஒருவன் பரிதவிப்பானோ அந்த மன உணர்வில் அவுது என்ற பதமும் அடங்கிய வேதமாகும். மனிதன் பாவத்தில் சிக்கி அவுதை முனங்கும் போது பயமடைந்த பிள்ளை தாயைப் பற்றிக் கொள்வது போல் இறைவனைப்பற்றிக் கொண்டு உணர்ந்தால் ஜெயம் என்ற மெய்த்துவம் கிட்டும்.

91 - வது பாடல்

அற்ற குபிர்க்குலங்களெல்லாந் தீன் குலத்திலாகும்
அடங்காத பொருளான அவ்வல்க் கலிமாவும்
உத்தபொரு ளானஷஹா த்து கலிமாவும்
ஒழுங்கான தஸ்பீஹ ுத் தவுஹீதுக் கலிமாவாம்
மெத்தப்பெரி தீமானி லேழிசுலா மைந்தும்
மேலான உலூவும்முழுக் கான பலவகையும்
வெற்றியுள்ள பாங்குடைய காமத்திமாம் தொழுகை
வேதத்திற்கு உறுதியுள்ள பறுலுஹலால் ஹறாம்

இந்த மெய்த்தவ ஞானிகள் குஃப்ர் என்ற குணங்களை களைந்து இஸ்லாத்தில் இணைந்த மகான்கள் ஆவார்கள். கலிமாவின் உள்ளர்த்தத்தை உணர்ந்த நிலையோடு கலந்து நாடி தவம் செய்வோர், கலிமா என்ற மூல அச்சரமான ஷகாதத்து தவ்ஹீத் என்ற கலிமாவில் தன்னை மறப்பார். இவையெல்லாம் இறைஞான வழிதேடுவோர்களுக்கு உற்ற வழியாகும். ஷகாதத்து என்ற போர்வைக்குள் அல்லாஹ் மூடிவைத்த விஷயங்கள் கொஞ்சமல்ல அவைகளில் முக்கிய மானவை முழுக்கருக்கும் கடமைகள் அங்கசுத்தியான சுத்தநிலை இது நபி வழியாகும். பாங்கு இகாமத்து

தொழுகை நிலைக்கு வணக்கம் என்று பெயர். இதுதான் இறைவனோடு இன்றியமையாத இனிமையான வணக்கம் . இன்னும் மனித வாழ்வியலில் ஹலால் ஹராம் தடுக்கப்பட்டவை ஆகுமாக்கப்பட்டவையும் என்பவையாம்.

92 - வது பாடல்

இத்தனைக்கும் பெரிதான ஆமீன் ஸலாவத்து
இசுலாத்திற் கடையாள முள்ளது சலாமும்
அற்றிறந்த பேர்க்கோதும் பாத்திஹாவும் பலனும்
அடங்காத தறஜாவு மதற்குமுனா ஜாத்தும்
இத்தனையுமெண்ணான்கு மின்னம்வெகு விதமும்
எப்போது தவிராமஹ¬ப்பாகப் பொருந்தி
ஒத்துவரும் பேரிஸ¬லா முள்ளகுல மாகும்
மற்றவகை யுற்றதவம் சுத்தக்குபீர்ரென்றே

இத்தனைக்கும் பெரிதான விஷயம் ஆமீன் சலவாத்துமாகும். இன்னும் இஸ்லாத்தின் அடையாளமான சலாம் சொல்வதும் நமக்கு முன்னால் இறந்தவர்களை நினைத்து பாத்திகா ஓதுவதும் ரப்போடும் ரப்புவுக்கு உற்ற வலிமார்கள் முன் நின்று (முனாஜாத்) முறையீடு செய்வதும். இது போன்று விஷயங்கள் ஆமின் ஒப்புக் கொள்ளுதல் என்பதும் இஸ்லாத்தில் முக்கிய பொருளாகும். இதற்கு மாற்றமாக தவறு செய்தால் அது இறைவன் ஏற்றுக்கொள்ளாத தவம் ஆகும்.

93 - வது பாடல்

ஏறிட்ட பேரிசுலா முள்ள குலமாகும்
எல்லாத் தவத்துக்கிது தானே இமாமென்றும்
முன்னவன் தானிறக்கும் நாலாமறை யிலிது அதிகம்
முன்னுதித்த மும்மறையில் லில்லையில்லை யில்லை
இன்னவகை கருமத்துள்ளே இத்தவமே நிறைய
இதைத்தவிர்த்தா லிதற்கு முதலெழுந்தமறைக் கிணையாம்
மன்னனிறை திருமொழியை மறையாகச் சமைத்து
மாநிலத்தில் மஹ்மூது நபிக்கிறையோன் சொன்னான்

அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களுக்கெல்லாம்

தலையானவை குர்ஆன் ஆகும். இஸ்லாமாகிய வாழ்வியலில் அல்லது துறவியலில் எல்லாவற்றிற்கும் குர்ஆன் தான் மிகப்பொருத்தமானது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மற்ற வேதங்களில் இது போன்று விபரங்கள் இல்லவே இல்லை. ஆகையால் தவம் செய்ய விரும்புவோர் இதை கட்டாயம் உற்று நோக்க வேண்டும். அல்லாஹ் இப்பேர்ப்பட்ட பொருள் எல்லாவற்றையும் மறையின் வடிவில் நபி(ஸல்) அவர்களுக்கு சொன்னான்.

94 - வது பாடல்

என்றுமழியாத இறை தூதர்நபி யுரைத்தார்
இந்தத்தவ மற்றகுலம் முந்தக்குபீ ரென்னும்
அந்திபக லொருகோடி ஆண்டுதவஞ் செய்தும்
அணுப்பலனு மில்லையென்று அஹ்மதிற ஸூலும்
இந்துலகி லுள்ளவருக் கிருதயமாச் சொன்னார்
எல்லவரு மறியவென்று இன்பமதாய்ச் சொன்னேன்
இருதயத்தி லித்தனையுமறிந்த பெரியோர்கள்
இதமாக இன்னவகை சொல்வார் தெளிவாக

இவை எல்லாவற்றையும் நமக்கு தெளிவாக நபி எடுத்துச் சொன்னார்கள் நபி சொன்ன வணக்கம் எப்போதும் வீண்போகாது. மற்றவர்கள் எப்பேர்ப்பட்ட நிலையில் இருந்தாலும் அது இறை மறுப்பாகும். இரஸூல் சொன்ன ஞானமார்க்கத்தையை அழுத்தமாக சொன்னார்கள் இரஸூலையும் முஹிய்யத்தீனையும் தொடாத எந்த ஞானமார்க்கமும் இறைவனின் (பிரம்மத்தின் மெய்நிலையை) அந்த புரத்தை அடையாது என்பது ஞானவான்களின் கருத்தே. என் கருத்துமாகும்.

95 - வது பாடல்

தெளிவான தீன்குலத்தி லுள்ளவரே கேளும
தெவிட்டாமல் தொழுதுகொண்டு வணக்கஞ்செய்ய வேணும்
தொழுகையில்லா தெவராலு தோசிப்பெரும் பாவி
தொட்டாலு முழுகவேணும் துடக்கதிகக் கொடுமை
தொழுதுவந்தார் வணக்கமவர் தொடுத்துவந்தா ரில்லை
தோகையர்கள் வாழ்ந்துமல டிருப்பதுபோ லுவமை

தொழுகாமற் செய்யுமவர் வணக்கமுழுதெல்லாம்
தோகையர்கள் ஆளனில்லா தீன்றெடுத்த பாலன்

தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள் இன்பமான நிலையில் இறைவனைத் தொழவேண்டும். ஏனோ...! தானோ.... என்று தொழுவது தொழுகை அல்ல. தொழுகை அல்லாதவர் கொடும் பாவியாவார்கள். தொழுகாதவர்களோடு பேசுவதும், பழகுவதும் பெரும் துர்க்குணத்தை உண்டாக்கும். நாமும் தொழுகாத நிலை உண்டாகிவிடும் என்பதை உணர வேண்டும். தொழுதார்கள் ஊருக்காக தொழுதார்கள் ஹராமான உணவை உண்ட நிலையில் தொழுதார்கள். தான் தொழுகையாளி என்ற அடையாளத்திற்காக தொழுதார்கள். இப்பேர்ப்பட்டவர்களின் தொழுகை எல்லாம் கல்யாணமாகி இல்லறம் இல்லாமல் பிள்ளை பெறுவேன் என்பதாகும். மலடி பிள்ளை பெறுவது போலாகும். இத்தீயவர்களின் தொழுகை.

96 - வது பாடல்

தொழுது வந்தார் வணக்கமவர் செய்துவந்தா ரில்லை
தோப்பில்லாக் கனியருந்திற் தீர்ந்த பசியாகும்
தொழுதுவந்தார் வணக்கமவர் தொடுக்காத ரின்னம்
தோப்புக்குள்ளே கனிகளில்லாத் தூருமரம் போலே
அன்பில்லார் வணக்கமெல்லாம் ஆற்றிற் ஜலமில்லா
அழுதுவணங்கார் தவமும் அந்தர நீராட்டம்
உள்ளன் பில்லாதுற்ற கள்ளர்செய்யும் வணக்கம்
வெள்ளெலும்பை நாய்கடித்த விதத்திலையு மதிகம்.

வெறும் தலைகுனிந்து, நின்று, வளைந்து படுத்துப்பார்ப்பதல்ல தொழுகை. தொழுகை என்பது அல்லாஹ்வின் முன் அடிமையாய், பயம் கலந்து, பரிவு கேட்பது. இதுவும் தொழுகைதான். மற்றொன்று காதலன் முன் காதலி சந்திக்கும் வேளை காமுற்று மோகித்து இரண்டறக் கலக்கதுடிப்பதுவும் தொழுகைதான். இந்த இரண்டு நிலையுமே இல்லையென்றால் தோப்பில்லாமல் வந்த கனியைத் தின்று தீர்த்தது போலாகும். அப்படியானால்

கல்லைத்தின்றான் என்று பொருள். இன்னும் வேரே இல்லாத மரத்தின் அடியில் அமர்ந்து அம்மரக்கனியை உண்பது போல் ஆகும். அன்பில்லார் தொழுகை நீர் இல்லாத ஆற்றைப்போல் ஆகும். அழுது வணங்காதார் தொழுகை அந்த ஆற்று நீர் இல்லாதிருந்தது எப்படியோ, அப்படியே அல்லாஹ்வின் மேல் அன்பு இல்லாமல் தொழுபவனின் தொழுகை, இறைச்சியே இல்லாத காய்ந்து போன எலும்பைக் கடித்துத் தின்னும் நாயின் நிலைமையை விட கேவலமானதாயிருக்கும்.

97 - வது பாடல்

வழியான குருவில்லா வணக்கமுழு தெல்லாம்
வையகத்திற் புருடனில்லாள் வாழ்ந்தசுக மொக்கும்
தெரியாத குருமாரின் றிருமொழி கேட்பதுதான்
தெரியவர்கள் குசறாவைச் சேர்ந்திருந்த துவமை
சரியான குருவில்லா வணக்கமுள தெல்லாம்
சாவலில்லாக் கோழிமுட்டை யிட்டதுபோ லுவமை
சொப்பனத்தில் வந்து குருசொன்ன உபதேசம்
சொபணத்திற் சேர்ந்தபெண்ணு மதமையீன்ற துவமை

வணக்கம் தவம் இவை இரண்டிற்கும் ஆசான் அல்லது குரு இருப்பது அவசியமாகும். அப்படி இல்லாதாரின் வணக்கம் மாப்பிள்ளை இல்லாமல் வாழும் பெண்களுக்கு ஒப்பானவர் ஆவர். நல்ல குருமார் என்று தெரியாமல் கண்டவர்களையெல்லாம் குருவாக நினைப்பதையோ ஆண்மை இல்லாத ஆடவன் கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்த நினைப்பது போலாவார். சரியான குருவென்று ஆராய்ந்து பார்க்காமல் குருவென்ற கோலம் கண்டு தீட்சை பெற்றவன் சேவல் இல்லாமல் கோழி முட்டை இடுவது போலாகும் (சொப்பணத்தால் வந்த குரு உபதேசமெல்லாம்) கனவில் குருவைகண்டு கனவில் தீட்சை பெற்று கனவில் பெண்ணோடு போகித்து அவன் பிள்ளை பெற வில்லையே என்று ஏங்குவது போலாகும்.

98 - வது பாடல்

இப்படியே யறிந்தல்லவோ தொழுதுசெய்வார் வணக்கம்
இதமறியக் குருமாரை யெங்குந்தேடிப் பாரும்
தெருவீதி யெங்குமலை வார்கள் குருமார்கள்
திருவருள் நிறைந்தபேரைத் தேடக் கிடைக்காதே

அரியகுரு மாருமற்ற அசடரையு மறிய
அறிவுபுத்தி யுள்ளவர்க்கு அறிவுவரச் சொல்வேன்
பெரியவர்கள் சறகுடைய பிசகாத வணக்கம்
பிரியாவகை நிறுத்திவைப்பார் தீன்குலத்தின் வளமை

குருவாமுஹம் மதர்சங் கோலத் தவிராமல்
குதாவருளே யிருபதிக்கும் கோடி கோடியாகும்
பெரியஉப தேசம் பேசும் குருமார்க ளென்று
பெரிதான காரணங்கள் பேசுவா ரனேகம்.

அல்லாஹ் சொன்ன அண்ணல் பெருமானார் சொன்ன விஷயங்களை நினைவில் நிறுத்தி செய்யும் தவம் தான் ஜெயம் பெறும். இப்படி தீட்சை தரும் குருமாரை நாம் தேடித்தான் பார்க்க வேண்டும். குருவைத் தேடி அலைவது பெரும் பாடு என்று விளங்கவேண்டும். நாம் தேடும் குரு நமக்கு கிடைப்பது நம் பாக்கிமாகும். தெரு வீதிகளில் குருவைப்போல் நினைப்போரை சந்திக்க நேரும். திருவருள் பெற்ற குருவா என்று அல்லாஹ் தான் நமக்கு காட்ட வேண்டும். **அறிவை அறிந்தவர் ஆயிரத்திலொருவர் அருளை அறிந்தவர் லட்சத்தில் ஒருவர் குருவை அறிந்தவர் கோடியிலொருவர் கருவை அறிந்தோரை காண்பது அறிது.** நல்ல குருமார்கள் நபியின் குணங்கள் நிறைந்தவர்களாக, ஷரியத்தைப் பேணி நடப்பவர்களாக, தன்னடக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். இன்னும் சில நேரம்தான் எல்லா வித்தைகளையும் கற்றவனென்றும் எனக்கு ஷரீஅத் இல்லையென்றும் இருமாந்து பேசும் கள்ளக் குருமார்களும் உண்டு.

99 - வது பாடல்

அறிவும் தேசஞ்செய்யும் மருள்குருமார் தன்னில்
அதிலும்ரண்டு விதமுமுண்டு மறியவகை சொல்வேன்
பீரான பீர்டெரிய பீருசாதா வுண்டும்
பீருசாத வேஷம் பூண்ட ஹறாமுஜாதா வுண்டும்.

மொத்தத்தில் குருமார்கள் இரண்டு வகை நாயன் அருள் பெற்ற நல்ல குருமார்களும் உண்டு அல்லாஹ்வுக்கு நன்றி கெட்டவனாக நாய் போல் மோப்பம் கொண்டு ஆட்பிடித்து தன்வயப்படுத்தி நல்லது சொல்வது போல் கெட்ட விஷயங்களில் தள்ளி விடும் குரும்மார்களும் உண்டு, காலைப்பிடி குருவின் காலைப்பிடி என்பது நல்ல குருமார்களின் கால் என்பது அவர்களின் சுவாசம் என்று விளங்குக. அவர்கள் சொல்லும் படியாக உன்சுவாசத்தைப் பிடித்தால் அந்த பர வெளியில் வெளிச்சம் தெளிந்தால். நூரேமுஹமதியாவின் நினைவில் கிடைக்கும் என்பது பொருள் கால் என்றால் மூச்சு என்று பொருள்.

100 - வது பாடல்

ஹறாம்சாதா தன்செயலை கருமத்தினா லறிக்
காசினியி லுள்ளவர்க்குக் கருத்தில் வரச்சொல்வேன்
காரணங்க ளொருகோடிக் கதைகளெல்லா முரைப்பர்
கைப்பிடித்துக் காட்சிசெய்வார் காணுமந்தப்படியே

மெய்யாக ஆதியிறை வேறில்லைநாமென்பார்
எந்தெந்தக் கருமமவர் நல்லதில்லை யென்பார்
செய்யும்வகை நன்மை தின்மை யவன் செயல்தானென்பார்
ஜெயமான தொழுகைசற கேதுநமக்கென்பார்

வையகத்தில் சரீஅத்தின் வளமையெது என்பார்
வரமதிக மஃறிபத்தில் லாகிப்போனோ மென்பார்
ஐயமில்லை யாசைபாச மவன் செயல்தானென்பார்
ஆசைதீறு மிடத்திலாதி யருள் நிலைதானென்பார்

செய்யும்மிரு பேரிணங்கி யாசை தீர்ந்ததென்றால்
எப்போது மிருபேர்க்குமிறை யருள் தானென்பார்
பையப்பையக் கொழுகிஆசை கொடுத்து அச்சந்தீர்ந்து
பத்தினியை யறுதலியைப் பழக்கி ஹறாம் செய்வான்

நாம் பார்க்கும் குருமார்கள் நல்லவர்கள் தானா என்பதை அவர்கள் சொல் செயல் கொண்டு நாம் தீர்மானித்துக் கொள்ளலாம். காரியமான கோடி கதைகள் சொல்வார். அவர் கையை நாம் தொட்டால் சில ஸ்பரிச உணர்வுகள் ஏற்படுத்தி - ஏமாற்றுவார். உண்மையாகவே குருதான் இறைவன். ஆகவே நானிறைவன் என்பார் நாம் செய்யும் எல்லா காரியங்களும் அல்லாஹ்வின் காரியம் தான். ஆகவே பாவமும் அவன் பங்குதான், நமக்கொன்றும் இல்லையென்பார். நாம் தொழுவது என்ன தொழுகை அல்லாஹ்வை அடைய தொழுகை மட்டுமா என்று தொழுகையை தள்ள வைப்பார். தரீக்கத்தில் உள்ளோருக்கு ஷரியத்து தேவை இல்லையென்பார் நாம் மஹ்ரிபத்தில் இருப்பதால் நமக்கு எல்லாம் ஒன்றுதானென்பார் பயப்பட வேண்டாம். ஆசாபாசமெல்லாம் அல்லாஹ்வின் செயல்தானென்பார். நாம் பெண்ணை அனுபவிக்கும் போது அல்லாஹ்வை நினைத்தால்பேரின்ப நிலை கிட்டும். நாம் மோட்சம் பெறலாம் என்பார். நாம் இருவரும் இணைந்து மன பூரண சம்மதத்தோடு புணர்ந்தால் அல்லாஹ் பொறுப்பான். அதுவும் அவன்வேலை தான் என்பார். மெல்ல மெல்ல உன்னிடம் நல்லது பேசி உன் சம்மதம் பெறுவார். கன்னிப் பெண்ணாக இருந்தாலும் சரி கணவனை இழந்த கைம் பெண்ணாக இருந்தாலும் சரி தன் இச்சையைத் தீர்ப்பார்.

101 - வது பாடல்

எத்தனை செய்தாலு முழுக்கேதுநமக்கென்பான்
இனிமேலும் ஆகிறத்திலென்பிணை நீயென்பான்
சுத்த முட்டாள் பாவிக்குபீ ராம்ஹறா முசாதா
சொன்னது பொய்யாகுமிரு பேரும் குபீராகும்
மெய்போலே வெகுவிசளம் பேசுகின்ற தவனே
மேலான விசளமெல்லாங் கேட்கவகை சொல்வேன்.

நாம் இருவரும் எத்தனை முறை சேர்ந்தாலும் நாம் குளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பார். நாம் ஏற்கனவே புனிதப் பட்டு விட்டோம் என்று பிதற்றுவார். இன்ஷா அல்லாஹ் நீ இறந்தால் என்னுடன் சொர்க்கத்திலிருப்பாய் என்பார். இவர்கள் அவர் சொல்லும் வார்த்தை பொய்யாகும். அந்த குருவை தொடர்ந்தோரும் காபீராய் போவார்கள். பேசுவதெல்லாம் முட்டாள் புத்தி கொண்ட பாவிகளின் பேச்சாக இருக்கும். உண்மையைப்போல் மிக அழகாகப் பேசுவார்கள் அப்படி அழகாய்பேசி மயக்கும் குருமார்களைக் கண்டால் அவர்களிடம் இது போன்று கேள்விகள் கேளுங்கள்.

102 - வது பாடல்

ஐயமறவுலகுதனி லிருக்குமனுக்குலத்தில்
ஆர்நரகவாதி சொர்க்க வாதிநீரே சொல்லும்
மெய்யாக மவுத்துடைய ஹாலிலெந்தனாவி
லியம்பும்கலி மாவருமோ வாராதோ சொல்லும்
வையகத்தில் நானிறந்தால் கேள்விமறு மொழிக்கு
வகை சொல்வேனோ சொல்லேனோ எந்தனக்குச் செல்லும்
இவ்வுலகில் பிறக்குமுன்னே இவ்வுயிர்கள் முற்றும்.
எந்தவிதம் ஆணோ பெண்ணோ எடுத்துநன்றாய்ச் சொல்லும்.

பயம் இல்லாமல் வாழும் இந்த உலகில் சொர்க்க வாதி யார்? நரகவாதியார் ? என்று தெளிவாக இனம் காட்ட முடியுமா? இந்த மனிதர்கள் அவர்கள் வாயில் கலிமா வருமா? எந்த மனிதர்கள் இறந்தால் அவர்கள் வாயில் கலிமா வராது என்று இனம் காட்ட முடியுமா ? இந்த மனிதர்கள் இறந்தபின்னால் முன்கர் நக்கீர் கேட்கும் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்வோமா? மாட்டோமா என்பதற்கு அடையாளம் காட்டச் சொல்லுங்கள். இந்த உலகில் நாங்கள் பிறப்பதற்கு முன்னால் எங்கிருந்தோம் எப்படி இருந்தோம் ஆணாகவா? பெண்ணாகவா? கொஞ்சம் விபரமாக விளங்கும்படி அடையாளமிட்டு சொல்ல முடியுமா ?

103 - வது பாடல்

பிந்தவுமே யுருவழிந்தா் லிந்தவுயிர்கள் பலதும்
பெண்ணுருவோ ஆணுருவோ பிரித்து நன்றாய்ச் சொல்லும்
இந்தவகை பீர்மாரு மெடுத்துரைக்க மாட்டார்
இத்தனையு மின்னவெகு கருமமிறை பங்காம்
அத்துடலி லாணும் பெண்ணு முருச்சமையும் வாறும்
ஆலத்திலே பிறந்தபின்பு அவர்கள் செயலாலே
வெற்றி நன்மை தின்மைரண்டும் விதந்தரிக்கும் வாறும்
வெகுசீமானெளியவனாய்விதந்தரிக்கும் வாறும்

நாம் இறந்து போன பின்னால் நாம் செல்லும் இடம் எங்கே? அங்கு நாம் ஆணாக இருப்போமா அல்லது பெண்ணாக இருப்போமா விளக்கமாக அடையாளங்களோடு சொல்லுங்கள். இதுபோல் விஷயங்கள் எல்லாம் அந்த குருமார்கள் தெரிந்திருக்க மாட்டார்கள். இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் அல்லாஹ் அறிந்த விஷயமாயிருக்கும். அவன் விரும்பும் நேஷர்களுக்கு மட்டும் இது போன்ற விபரங்களை கற்றுக்கொடுப்பான். ஆண் பெண்யென்ற உதயத்தோற்றமும் உலகில் பிறந்த பின் அவரவர் செயலால் நல்லவன் தீயவன் என்றும் எவன் ஏழை பணக்காரன் என்றும் விபரமெல்லாம் வல்ல அல்லாஹ்வின் கற்பனையில் உள்ள விபரமாகும்.

104 - வது பாடல்

அந்த சீமா னெளியவனா யவனேழை சீமான்
அரும்பாவி யருளாளனி யவன்பாவி யாதல்
இந்தவகை விபரமிறை யறிந்த ரகசியமாம்

எடுத்துரைக்கா ரிறைநாம மெப்படித்தா னுரைப்பார்
எவ்வளவு மேலான கரும மறியாதர்
உள்ளதெல்லாம் மறிந்திருக்கும் குருமார்கள் போலே
வள்ளலிறஸுலுடைய வளமை பெறுமார்க்கம்
வையகத்தின் தீன்குலத்தின் வளமையென்றே சொல்வார்
எவ்வளவு மொருபலனு மில்லையதிலென்பார்
எப்போது மிருதயத்தி லென்வணக்க மென்பார்
உள்ளுக்குள்ளே வணக்கஞ்செய்வே னென்றுரைப்பார் வெகுபேர்
உள்வணக்க மென்றோதுங் கள்ளர்களே கேளும்

உள்ளுக்குள்ளே நினைவாலே யுன்மனைவி யோடே
யொன்றுபடச் சேர்ந்ததனாலுனக்கு பிள்ளையுண்டோ

அள்ளியள்ளிக் கையாலே யகனமுண்டாப் போலே
அனுதினமு நினைத்துப்பசி யடங்குவது முண்டோ
வெள்ளாமை செய்வதுபோல் நினைத்து முடியாது
வெகுதூர நடவமால் நினைத்து முடியாது

ஒருவன் செல்வந்தனாய் இருந்தபின் ஏழையாவதும் ஒருவன் ஏழையாய் இருந்த பின் செல்வந்தனாவதும் அல்லாஹ்வின் ரகசியமான விஷயம். இதை நாம் சொல்ல ஞானவான்கள் எப்படி இது போன்று விபரங்களை எடுத்துரைக்க முடியும்? இதை எல்லாம் எடுத்துச் சொல்ல முடியாதவர், அல்லாஹ்வின் பரமரகசியமான விஷயங்களை எப்படி எடுத்துச் சொல்ல முடியும்?. இப்படி மட்டமான குருமார்களைப் பார்த்து இஸ்லாமியர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இன்னும் அவர்கள் உள்ளுக்குள் என்ன வணக்கம் நடக்கின்றது என்பார்கள். உன் மனைவியோடு நினைவாலே போகம் செய்வதின் மூலம் குழந்தை பெறமுடிமா? என்பது போன்றும், சாப்பிடுவது போல் நினைத்துக் கொண்டிருந்தால் பசிதான் அடங்குமா? விவசாயம் செய்வது போல் நினைத்துக் கொண்டிருந்தால் நெற்களஞ்சியங்கள் கிடைக்குமா? நடப்பது போன்று நினைத்தால் பயணம் சென்றடைய முடியுமா ? என்பது போன்றாகும்.

105 - வது பாடல்

கொள்வகையுங் கொடுவகையுங் கொடுக்கல் வாங்கலில்லை
உள்ளுக்குள்ளே நினைத்தனவொன்று முடியாது
கள்ளத்தனம் போக்கியருள் பெற்றுமதி யுற்றுக்
கருமமெல்லாஞ் சிறந்துகருத் துள்வணக்கஞ் செய்தால்
சுத்தனிறஸூல் சறகைச் சேர்ந்த வளமாகும்.
காட்சி தவிராஷறஹூ தன்வணக்க மெல்லாம்
சுத்தனிறஸூலுடைய கனமான சறஹூ
கருமமெல்லா மகற்றிக்கருத்து துள்வணக்க
மென்றால்சுத்தகு பீர்க்குலம் இலாஹியுட வணக்க மாகும்
சுஜூது செய்யார் சுன்னத்து ஜமாஅத்துக் குலமல்லை

கொடுக்கல் வாங்கல் என்று நாம் நினைத்தால் மட்டும் அது நடந்திடுமா? அது போன்றும் நாம் தெரியாமல் பக்குவமில்லா குருமார்கள் பின் அலைந்திட்ட போதிலும், பின் மீண்டும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புப் பெற்று மீண்டால் அது அல்லாஹ் ரஸூல்க்கு உகந்த வழியாகும் .அப்படி நபிவழியில் தறிபட்டு நின்று பதற்றம் இல்லாமல் பொல்லாங்கு பேசாமல் நம் மனதை கட்டுப்படுத்துக் கொண்டு ஆகுமானவைகளில் நிலைத்து தவத்தில் நிலைத்தோமேயானால் நல்ல குருவழியை பெற்று அல்லாஹ்வுக்கு உகப்பான வணக்கத்தில் நிலைத்ததாகும். இன்னும் அல்லாஹ்வை பணிந்து வணங்காதவர்கள் பெரியோர்கள் வலிமார்களுக்கு பணிந்து நடக்காதவர்கள் நபி உடையை வழிச் சேர்ந்தவரில்லை.

106 - வது பாடல்

புத்தியில்லார்சறகேது வணக்க மேதென்பார்
பொய்யாகும் மவர்விசளம் பொருந்தாம் லுதறி
அஸ்தஃபி றுல்லாஹில் அலீமெனவே சொல்லி
அனுதினமும் ஆதம் பாத மறிந் தொழவேணும்
எத்தனையோ வெகுகோடி யாவர் செய்யுந்தவமும்
இபுலீசு முன்னாலே செய்ததவ மாகும்
அத்தனையு மிபுலீசுங் கறிந்து செய்தானில்லை
அவன் வணங்கா வணக்கமல்லோ நாம் வணங்க
வேணும்2சுத்தக்குபீர் இபுலீசு சுஜூதுசெய்யா திடந்தான்
சொல்லவென்ற லோரிடமு மில்லை யில்லையில்லை.

அல்லாஹ் உடைய வழியென்ன நபி உடைய வழியென்ன என்று பேசுவோரின் உபதேசத்தில் நில்லாமல் ஒதுங்கி அல்லாஹ்விடம் மீண்டும் பாவ மன்னிப்பு கேட்டு அழுது புலம்பி ஆதம் நபியின் பாதமறிந்து தொழுதல் வேண்டும். எத்தனையோ கோடிப் பேர்கள் செய்யும் தவமும் வணக்கமும் ஷைத்தான்கள் பாதம் நோக்கி தொழுதது போலாகும். எதையும் ஷைத்தானின் செயல் என்று தெரிந்து

செய்யவில்லை அவனின் விதியின் போக்கு. அல்லாஹ்வால் விரட்டப்பட்ட ஷைத்தான் செய்யாத வணக்கம் தான் உண்டோ? அவன் அல்லாஹ்வின் விருப்பமுடையவனாக இருக்கும் போது அவன் பாதம் படாத இடம் வானினும் இல்லை பூமியினும் இல்லை. ஆகவே உங்களின் நெற்றி படும் இடம் ஷைத்தானின் கால் பட்ட இடமாக இருக்க வேண்டாம். பக்குவப்பட்டுக் கொள்ள வழிதேடுங்கள்.

107 - வது பாடல்

வல்ல இறைதனையும் நபிதனையு மவனாடி
வையமெல்லாம் வெருகோடி காலம் சுஜூ இட்டான்
நல்ல நசீபில்லாததால் நாட்டமது தவறி
நமது பிதா ஆதத்துக்கு சுஜூது செய்தானில்லை
அல்லாவுக்கு உவந்ததென்ன அஹமது தம்மார்க்கம்
அஹமதுக்கு உவந்ததென்ன வனைவருந் தினாக
அல்லா முஹம்மதிரு பேர் மனத்துக் கொன்றாய்
அரியதவம் ஆதத்தின் பாதமறிந்து பணிய
அல்லா முஹம்மதிரு பேரைமன துற்று
ஆதத்துடன் பாதந்தனை யறிந்து தொழவேணும்

எல்லா வணக்கமும் செய்த ஷைத்தான் ஆதம் பாவா அவர்களின் பாதத்தில் நெற்றியை வைக்கமறுத்தான் ஆகவே ஆதம் பாவா பாதம் பட்ட இடம் தான் ஷைத்தானின் நெற்றிபடாத இடம். ஆகவே ஆதமின் பாதம் பார்த்து அல்லாஹ் உகந்தவழியும் நபியின் உகந்தவழியும் ஆதம் நபியிடனும் பணிந்து தொழுது அல்லாஹ்விடமும் தூதுவர் நபியிடமும் முஹப்பத்தை பெற்றார்களோ அந்த வழியில் நாமும் சென்று முஹப்பத்தையும் அல்லாஹ்வின் அன்பையும் பெற்றிட வேண்டும். ஞானம் தேடி புறப்பட்டவர்கள் தவம் செய்யும் போது அல்லாஹ் நூரே முஹமத் ஆதம் என்று மனதில் நிலைப்படுத்தி தவம் செய்தால் முக்தி யென்ற நிலையையடையலாம்.

108 - வது பாடல்

வல்லமையாய் ஆதத்துட பதம் வணங்காதவே
வன்னரகுக் கெதியானான் வம்பனிபுலீசு
நல்லபுகழ் ஆதத்துடன் பாதந்தன்னை யறிந்து
நாடி சுஜூதிட்டகுலம் நபிகுலம் தீனாகும்

ஆதமென்ன அவருடைய பாதமென்ன வென்றால்
அறியாத பேர்களெல்லாம் மறியச் சொல்வேன்கேளும்
வேதமென்றும் ஆதமென்றும் விளம்புவது மதுதான்
வெகுபலதாய்ச் சமையுமுன்னே அகதியத்தாயிருந்து

அதுதானே அகதத் தென்னு அனைத்தையுமுள்ளொடுக்கி
அப்புறமும் வாகிதியா வானமல்லோ ஆதம்
வாகிதியா வானதென்ன ஆதமுரு வாச்சு
வகைவகையாய்த் தலைமுறையாய் வந்ததந்த விந்து
அந்தவிந்து ஆதமுத லணியவந்த தனால்
அதுதானே ஆதத்துடை பாதமது நிஜமாம்.

அல்லாஹ்வை ஏற்றுக்கொண்ட ஷைத்தான் ஆதத்தை ஏற்கமறுத்ததால் அதாவது ஆதமின் பாதங்களை பணிந்து வணங்காத காரணத்தால் அல்லாஹ்வின் சாபம் பெற்றான். எல்லோரையும் என்னைப்போல் மாற்றுவேன் என்று அல்லாஹ்விடம் போட்டி போட்டவனாக அவனின் படைப்புகளுடன் வந்தான். அல்லாஹ்வின் அருள் கிடைக்காத வண்ணம் எல்லோரையும் அவன் பக்கம் ஈர்க்கும் வேலையை செய்கின்றான். நாம் அவன் வலையில் விழாதிருக்க வேண்டுமானால் பாவா ஆதம் நபி அவர்கள் பாதத்தில் விழுந்து வணங்கவேண்டியது நல்ல நபி வழியாகும் அல்லாஹ்வின் நூரே முஹம்மதியாவின் ஒளிபட்ட ஆதம்தான் வேதமும் நாதமும் சமையும்முன்னே பூரணமாக இருந்தது ஆதம்தான் ஆதமான பின்புதான் வான் மண்டலங்கள் வந்தன பூமி உண்டானதும் ஆதம் என்ற பூரணமுன்தான். உலகில் தோன்றிய எல்லா ஜீவ கோடிகளும் கடல், மலை, காடுகள் கோடான கோடி ஜீவராசிகள். இப்படியாக விரிந்து மனிதன் என்ற தோற்றமாய் மலர்ந்த பின் வகைவகையாய்

தலைமுறைகளை பலசமுதாயமாய், பலகுலமாய் வர்ணபேதங்களோடு விந்தாய், நாதமாய், ஆண் பெண் என்ற ஆயிரங்கோடி மனுவாய் உதித்த விந்துவாய் இருக்கும் ஆதம் பாவாவின் விந்து தான் ஆதத்தின் பாதம் என்பதை புரிக.

109 - வது பாடல்

விந்தைபெறும் ஆதத்துட விந்துநிறம் வெள்ளை
வெடித்தபுகை யதுகாற்றாய் வெளியில் வருமூச்சாம்
மூச்சாகும் தம்மாகும்முயிரும் ஹயாத்தாகும்
முடியாத தம்மல்லவோ ஆதமென்று பேரு
ஆச்சரியம் மூச்சுக்கொரு ஆதாரம் அலிபு
அந்தலிபும் மூச்சுமல்லோ ஆதத்துட பாதம்
அந்தலிபு நிலையறிந்து அதற்குச் சுஜூதிட்டால்
அதிகதவம் ஆதத்துடன பாதமது நிஜமாம்
அந்தலிபு நிலையறிந்து அரியதவஞ்செய்ய
அதிகமுள்ள பெரியோரை யடிபணியாதார் சொல்வார்
எந்தனுக்குத் தெரியிதென்று எண்ணி மகிழ்ந்திருப்பார்
எள்ளளவுந் தெரியாது எவருஞ் சொன்னாலொழிய
அந்தவகையணுப்போலே தெரியும்படி யுரைப்பேன்
அறிவுள்ள பேரறிவதல்லால் ஆர்க்குந் தெரியாது.

ஆதம் அவர்களின் விந்தையான விந்து நிறத் தூய்மையான வெள்ளையாய் இருக்கும் அந்த வெள்ளை விந்து வெடித்ததால் புகை உண்டாயிற்று இந்த புகைதான் உலகவடிவில் சமைந்தது. அந்தப் புகையின் வெப்பத்தால் காற்று உண்டாயிற்று அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் அதுவே சுவாசமாயிற்று இந்த மூச்சுத்தான் உயிராய் வாழ்க்கை பரிணாமமாய் மாறி மாறி பரிணமிக்கின்றது. என்றும் முடியாத தொடக்கமல்லவோ ஆதம் என்ற பூரணம். அதுதான் மூச்சின் அகரம். தான் ஆதமாக நிற்பது அலிபு என்ற தோற்றம். அந்த தோற்றம் மூச்சாக நடப்பதால் அதுதான் ஆதத்தின் பாதம் அந்த அலிபின் உள்ளர்த்தம் புரிந்து அதைப் பணிந்து தவம் செய்தால் மெய்த்தவமாகும் தவத்தை நிகழ்த்துவதே ஆதத்தின் புனித பாக்கியம்தான். பெரிய குருமார்களிடம் பணிந்து அவர்களுக்கு

கட்டுப்பட்டவனாக பலவருடம் அவருக்கு ஊழியம் செய்தால் அந்த ஷைத்தானின் சிரம் படாத இடம் நம் நெற்றி படும் இடமாக இருக்க வேண்டும். ஆதம் என்பது என்ன? ஆதத்தின் பாதம் என்பது என்ன? பாதம் பணியுதல் என்று ஒன்றை எப்படி பணிந்து தவம் செய்ய வேண்டும். தவத்தால் நாம் பெறப்போகும் லாபங்கள் என்ன என்பதை எல்லாம் விளங்கச் சொல்லித்தருவார். குருமார்கள் கற்றுக்கொடுக்காதவரை யாரும் சொல்லித்தரமுடியாத பெரும் ரகசியமானவை இது. இதைக் கொஞ்சம் சொல்லித் தருகிறேன் புத்தி உள்ளவர்களே புரிந்து கொள்ளுங்கள்.

110 - வது பாடல்

வந்தவழி யந்தரத்தேயுந்தன் விழியுற்று
வாசல்வழி யற்றுப்பாச மற்று நிலையுற்று
முந்திமுனை யீறிதழும் முடித்துஒன்றாய்ப்பிடித்து
உந்திவரும் ரண்டாலே யொருமூன்றே தொடுத்து
உந்தன் மதியந்திரங்கம் அந்த நிலைபிடித்து
உறுதிகொண்டு உவந்து ஸுஜு திட்டகுலந் தீனாம்.

பொதுவாக மனிதன் பிறக்கின்றான், இறக்கின்றான் அவன் பிறந்து வரும் இடம் அவன் புதைபடும் இடம் என்று பொதுவாக நாம் விளங்கி வைத்திருக்கிறோம். நாம் ஒன்றை உற்று உள்நோக்கிப் பார்த்தல் அவசியம். ஆண் பெண் சேர்க்கையில் கருவுற்று உருவாகி வளர்ந்து பிறக்கின்றன என்பது பொது விஷயம் ஆனால் ஒரு ஆடவன் ஓர் பெண்ணை போகிக்கவேண்டுமானால் அவனுக்கு அக்கினி என்ற உஷ்ணம் தேவை. என்பதும் எல்லோரும் விளங்கியவையே அந்த உஷ்ணம் எங்கு உண்டானது நெற்றியின் மையப்புள்ளியான புருவமிடையில் தோன்றி கொஞ்சம் கொஞ்சமாய் அக்கினி வேகமாகி மனிதன் முதுகுத்தண்டின் வழியாக அந்த உஷ்ணம் கொதிப்பை உண்டாக்கி அதில் உள்ள மஜ்ஜைகள் இந்திரியமாக உருகி வழிகின்றது. ஆக மனிதனின் உற்பத்தியின் மூலம் நெற்றியின் மையப்புள்ளியும். நினைப்பு என்ற

அக்கினியும்தான் என்பது உண்மை.

நீ எந்த வழியான புருவ மத்தியில் உன் நினைப்பின் அக்கியினால் பார்வையை பதித்தல் (தியானத்தின்போது) உன் உடலில் உண்டான ஒன்பது துவாரங்களையும் அடைத்து உலகில் உள்ள ஆசா பாசமெல்லாம் அப்புறமாக்கி ஆசை அற்றநிலையில் சுழிமுனை தீபமான அதைப் பற்றிக்கொள்ளும் நெற்றியில் நினைவை பதித்து உந்திக்கமலத்தில் தொடங்கி உன்னை வியாபிக்கும் சந்திரகலை, சூரியகலை, என்று சொல்லும் இருசுவாசங்களை அந்த சுழிமுனை சிந்தையுடன் சேர்த்து முன்னோக்கி நீ தியானத்தில் நிலை பெற்று உறுதிகொண்டு உவந்து ஆதமின் பாதத்தில் பணிந்தால் நல்ல யோகவானாய் நபிவழியில் செழிப்பாய்.

111- வது பாடல்

இந்தவகை யறிந்து இபுலீசு செய்தானில்லை
இருதயத்திலிதையறிந்து எவரும் ஸுஜூதிடுவீர்
அந்தஇபு லீசுவணங்காத இட மிதுதான்
ஆலமெல்லாந் தீன்குலத்தோர றிய நன்றாய்ச் சொன்னேன்
இந்தமட்டும் முறைத்ததல்ல இனி வுரைக்குஞ் செய்தி
இஸ்லாத்திலுள்ள இனி முழுக்கு வகைகேளும்
முந்த இஸ்லாத்தின்குல மானவரே கேளும்
முழுக்கறிந்து முழுகும்வித முறையாகச் சொல்வேன்

ஷைத்தான் இந்த இணக்கமான அறிவு இல்லாமல் அல்லாஹ்விற்கு பாவியாகிவிட்டான் இதை உள்ளப்பூர்வமாக தெரிந்து ஆதத்தின் பாத நிலையில் நெற்றியை வைத்து வணங்குங்கள் தவம் செய்யுங்கள் இதுதான் ஷைத்தானின் சிரசு படாத இடம் ஷைத்தானின் தீங்கிலிருந்து நாம் பாதுகாக்கப்படலாம். இந்த உலக வாழ் மக்கள் நன்று விளங்க நான் தெளிவாய்ச் சொன்னேன். இத்துடன் விஷயம் முடிவடையவில்லை இன்னும் சொல்லும் விஷயம் முக்கியமானவை மனித வாழ்வில் அங்க சுத்தி அகச்சுத்தி என்று இரண்டு வகையான சுத்த நிலைகள் உள்ளன அதை நன்கு கேட்டு

தெரிந்து கொள்ளுங்கள். அங்க சுத்தம் செய்வதையும் அகச் சுத்தம் செய்வதையும் முறையாககேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

112 - வது பாடல்

முழுக்குவிதி யாகும்முன்னே முழுக்கறுக்கவேணும்
முழுக்குவிதி யானால்முழுக் கறுக்க முடியாது
அழுக்கறுக்க முறையறியார் முழுக்கு மவரறுக்கார்
அழுக்கல்லவோ முழுக்காகும் அறிவகையும் சொல்வேன்
உட்கருத்தில் முதலான வூனுதலை யுன்னி
ஒன்பதுமே யொன்றான ஒருபொருளை யாணி
அழுக்ககற்றி யாணிமதி ஆதியென்றே யூணி
அணுப்பிசகா தொருமூன்றை யனுதினுமும் பேணி
ஒளியாம லோசையுள்ள துயர்ந்ததவமாகும்
ஒருமுழுக்கு மணுகாதே யுறையறிவார்க் கெல்லாம்
வழுக்காகப் பிறந்துலகில் வந்தநாள் முதலாய்
வழுவாசி மருங்கோடும் பாவமுழுக் காகும்.

அங்க சுத்தி யென்பது தண்ணீரிட்டுக் கழுகி துடைப்பது இதுவும் சுத்தியென்று சொல்ல முடியாது. சுத்தமான பின்னால் அழுக்காகவே கூடாது என்பதுதான் சுத்தம். நாம் சொல்லுவதும் செய்வதும் வெறுஞ் சடங்குகள் தான் அங்க சுத்தியே இப்படி யென்றால் அகச்சுத்தி எப்படி இருக்கும். அகம் என்பது பாவங்கள் கொண்டு மட்டுமே அழுக்காகும். அந்த பாவமே செய்யாமலிருந்தால் தான் அகம் சுத்தமாய் இருக்கும். மனித வாழ்க்கையில் இது சாத்தியமா? மனிதன் வாழ்க்கையில் இது சாத்தியமோ இல்லையோ சாத்தியமாக வேண்டுமானால் ஓர் உண்மையைச் சொல்கின்றேன் கேள். ஒன்பது துவாரங்கள் வழியாக நிகழும் பாவங்களை விட்டு விலகிக் கொண்டால் காம குரோதகாமியம் என்ற மும்மலத்தை விட்டு சுத்தமாவான் அப்போது அல்லாஹ்வின் பால் பேரன்பு உண்டாகும் அந்தக் காதல் போதையில் உன்னை இழந்து உன்னையே உன் காதலுக்காக இழக்கவேண்டும் உன்நினைவில் நீண்டெழும் அலிபு என்ற நீடொளியை உன் நினைவில் நிறுத்தி உனக்கு சொல்லித்தரப்பட்ட

முச்சுடர்தியானம் என்ற தவத்தில் நிலைத்தால் எம்பெருமான் நபிநாயகத்தின் ஒளித்தோன்றலான கௌது முஹியித்தின் உனக்கு காட்சியளிப்பார் அன்னவரின் பாதார விந்தம் உன் நெற்றியின் மீது பட்டால் அன்று தான் நீ சுத்தம் செய்யப்பட்டவனாக முழுக்கற்றவனாக அகசுத்திபெற்று பரிசுத்தமாய் நீசெய்யும் தவத்தால் பலன் பெற்று நிலைபெறுவாய். பொதுவாக மக்கள் எல்லாம் அறியாமல் குளித்து நீராடி விட்டால் சுத்தமாகி விடுகின்றோம் என்று நினைத்து அங்கசுத்தியையே பிரதானமாய் கொள்கிறார்கள். அகசுத்தி செய்யப்பட்டாலே பாவம் என்ற அழுக்கால் முழுக்கு உள்ளவர்களாகவே மடிகின்றார்கள்.

113 - வது பாடல்

அழுக்காகு முழுக்கை மவுத் தாகுமுன்னே யறுக்கார்
ஆகிறிலு முழுக்காகு முழுக்கதிக நாற்றம்
தெளிவாகக் கமலத்தழுக்கறுக்கும் வகையிது தான்
தீனவர்களறியவின்னர் தெளிவாகக் சொல்வேன்
வழியான தீன் குலத்திலுள்ளவரே கேளும்
வாயில்வரும் பொய்யுரையும் வலுமை ஹறாம்பகிலும்
பழிகோபம் பெருமை மற்ற கொடுமையுமே யகற்றிப்
பட்சமன தோர்மை யுற்றுப்பரம் பொருளை வணங்க
தெளிவாகக் கமலத்தழுக் கறுக்கும்வகை யிதுதான்
தீனவர்கள் கலிமாவென்பா மதின்பொருளைக் கேளும்.

நாம் இறந்து போகும் முன்னேயே இந்த அகச்சுத்தி நடக்கவில்லையானால் இவன் மண்ணறையிலும் சரி மறுமை நாளிலும் சரி நாற்றமுள்ளவனாகவே இருப்பான். இதையும் இதயம் என்ற மஹா பெரிய வீட்டைத் துடைத்து சுத்தம் செய்யும் விதத்தையும் அதுமணம்பெறும் நிலையையும் தெளிவாய் சொல்லி விட்டேன். பாவம் எல்லாவற்றையும் விலக்க வேண்டும். இப்பாவங்களை விலக்கி நாம் அல்லாஹ்வை உகந்து வணங்கி தொடர்ந்து நிலைபெற்று வந்தால் அதுதான் தெளிவான அகச்சுத்தியாகும். இனி கலிமாவென்பது என்ன அதன்பொருள் என்ன என்று பார்ப்போம். நமக்குத்

தெரிந்து நடக்கும் பாவம் ஒன்று. மற்றொன்று நமக்குத் தெரியாமல் நடக்கும் பாவம். நாம் அன்றாட வாழ்வில் தெரிந்து நடக்கும் பாவங்கள் என்ன ? பொய் சொல்வது, கஞ்சத்தனம் செய்வது, கோள்மூட்டுவது, மற்றவர்கள் மது இட்டுக் கட்டுவது. இவை பாவம் என்று தெரிந்தும் நாம் உணராது செய்து வருகிறோம். இதை முற்றிலுமாக அகற்றவில்லையென்றால் அவன் அங்க சுத்தி செய்தவன் என்று சொல்ல முடியாது. இன்னும் எந்தச் செயலிலும் அநாநியத் என்ற நான், நான் என்று மார் தட்டிக் கொள்வது ஷைத்தானின் துர்குணமாகும்.

நான் என்பது இறைவனின் குணத்தில் உள்ளதாகும். இதை மனிதன் தான் சுபாவத்தோடு இணைத்துக் கொள்ளும்போது அல்லாஹ் சபிக்கின்றான், ஷைத்தான் சிரிக்கின்றான். நான், நான் என்பது ஷைத்தானின் மூல ஆயுதம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

114 - வது பாடல்

கலிமா விரைத்த குலமுள்ள பெரியோரே
கலியென்ன மாவுமென்ன கருப்பொருளுமென்ன
கலியென்ற பொருளுடைய கருமஞ் சொல்லக்கேளும்
கலியாகும் ஆசையது கருப்பொருளுமாகும்
அலியாருக்காக நபி தானுரைத்த விசளம்
ஆசையின்பேர் கலியாகும் கலியுரை பங்காம்
சலியாத இறைகலிமா ஈ ராறு எழுத்தும்
சாற்றுவது லாயிலாஹா இல்லல்லாஹூ இதுவாம்
அல்லாஹ்ஹூவென்று சொன்ன அவ்வல் கலிமாவில்
ஆறிரண்டு எழுத்திற்குமே லானதொரு ஹூவாம்
ஹூவாகும் ஆசையது கலியுமிதுவாகும்
குலமான கலிமாவி லின்னமொருபாதி
பாதி முஹம்மதுர் ரசூலுல்லாஹி யாகும்
பாருலகில் நடக்கும்பரி மாவிமிது தானே
மாவும் முஹம்மதென்ற முதல்வரு மீமதனை
மாவுமிது கலியுமது கலிமாவு மிதுதான்

கலிமா சொன்ன நபி வழியை சேர்ந்த இஸ்லாமியர்களே கலிமா பொருள் யாது? <u>கலி</u> என்றால் என்ன? <u>மா</u> என்றால் என்ன? <u>கலி</u> என்ற வார்த்தையின்

பொருள் சற்று உற்றுப்பாரும் கலி என்றால் காதல் -இஷ்க். காதல் இல்லை என்றால் உலகம் இல்லை உலகில் உண்டானவையும் இல்லை நீயும் இல்லை நானும் இல்லை ஆகவே கலியே எல்லாம். இது நபி, வலிமார்கள் தோன்றலில் பூரணம் பெற்று நின்று அலி கர்ரமல்லாஹ்வுக்கு சொல்லிக் கொடுத்த ரகசிய பாடம் கலி. ஆசையின் வெளிப்பாடு கலியென்பது இறைவன் தனித்த நிலையில் மறை பொருளாய் நின்ற போது முதன் முதலில் காதலால் மோகித்து காமுற்று உமிழ்ந்த கனியமுது இதுவே எல்லாமாயிற்று. நாம் கற்பிப்பிப்பது கலிமா என்ற லாயிலாஹா இல்லல்லாஹூ இதுதான் கலிமாவின் முதற்பாடம் அல்லாஹ் என்று சொன்ன முதல் கலிமாவில் ரப்புவின் பண்பியல் பெருமிதமுண்டு இன்னும் பன்னிரெண்டு எழுத்தைக் கொண்ட கலிமாவில் ஹூ யென்ற பதமே பூரணம் பெற்று, இந்த ஹூ கலிமாவைப் போலவே பொருள் கொண்டவை கலி என்றால் காதல் ஹூ என்றால் காதல் கொண்டது. இவை இரண்டையும் பிடித்துக்கொண்ட பதம் தான் ஹூ. கலி மா, இந்த மாதான் நூரே முஹம்மதிய்யா. ஹூ யென்ற காதலன், காதல் கொண்டதால் தன்னைத்தானே லயித்து காதலியான மோகத்தால் ஜோதி வடிவம் கொண்டு பார்த்ததுதான் நூரே முஹம்மது. இந்த நூரே முஹமதுயாவின் வெளிப்பாடு வான், கடல், புவி, வண்ணங்கள் நடப்பன, பறப்பன, ஊர்வன, மிதப்பன இன்னும் நூராயிரம் கோடி ஜீவன்கள் செடியினம், புல்லினம், கொடியினம், மரஇனம் மற்றும் பற்பல இனங்களாகத் தோன்றின. மா இல்லையேல் ஒன்றும் இல்லை. ஆகவே மா தான் கலி. கலிதான் மா கலிமா மகத்தான முஹமத் என்றால் முதலில் வருவது மீமாம்.

115 - வது பாடல்

கலியென்ற கூவுடனே மாமென்ற மீமதனைக்
கசகாம லோரெழுத்தாய் ஹூம் மென்றதைக் கோர்த்து
இழையா தெழுந்துவரும் வாசியுடன் சேர்ந்து
ஏத்திரக்கஞ் செய்பவரே யெப்போது மூமின்
மூமின்கள் செய்யுந்தவ மாங்கலிமா ரண்டு

முந்தனுட வுடலுக்குள்ளே யெங்கேநிற்கு தென்றால்
இந்தவகை கூவுமீமும் இணைந்து ஒரு யெழுத்தா
யிருதயத்தில் நிற்குமந்த இடத்தைச்சொல்லக் கேளும்
இந்த வகை ஆதியந்தம் அடிமுடிவு முடையா
திருத்தம்மந்த ஆச்சரியம் எல்லாவரு மறியார்
அந்ததெழுத்தை யெல்லவரும் அறியப்பொருங்கடனாம்
அறிந்தவரை யடிபணிந்தால் அதிசயத்தைச் சொல்வார்
இந்தக் கலியுடன்மாவு மிருக்கும் நிலையறிந்து
இதைத்தானே கமலத்துக்கு ளுருப்படுத்த வேணும்
உருவாக ரண்டெழுத்து முன்சிரசி விண்டும்
ஒருமிக்கவே ரண்டெழுத்தும் முந்தியின் கீழுண்டும்
உந்தியின் கீழ்கமலசத்துக்கு குயர்ந்த நிலையாகும்
உருத்தரிக்குங் கருநிலைக்கு மொக்கவே கீழாகும்.

கலி என்றால் காதல். ஹூவென்றால் காதலினால் மீம்மென்ற அந்த நூரே முஹம்மதியா நினைத்து கசக்காமல் ஒன்று சேர்த்து அதாவது காதலன் காதலியை நோகாமல் நோக்கி ஹூம்யென்ற ஓசையுடன் நம்மிடம் இடைவிடாது நடவும் சுவாச மென்ற வாசியுடன் கலைகளைப் பாகுபடுத்தி, நன்கு உணர்ந்து ஏற்ற இறக்கம் விளங்கி, தியானம் செய்பவனே முறையான இறைக்காதலை தன்வயப்படுத்திக் கொள்வான். மெய்த்தவம் அறிய வேண்டிநிற்கும். இஸ்லாமியர்களே நீங்கள் அறிந்து கொள்ளும் கலிமா இரண்டு. அன்பானவனே உன் உடலை நன்கு உற்றுப்பார் இந்த கட்டமைப்பை உன் அல்லாஹ் அல்லாது வேறு யாராவது கட்டமுடியுமா? யோசி. உன் அல்லாஹ் உன்னில் அட்சரவடிவாய் அமர்ந்திருக்கும் இடம் மஹாபெரிய ரகசியம் தான் அந்த ஹூவும் மீமும் ஓர் எழுத்து வடிவம் பெற்று இருதயத்தில் நிற்கும் இடத்தைச் சொல்கிறேன். ஆதியாய், அந்தமாய், அடிமுடியாய் ஆச்சரியமான எழுத்து வடிவாய் யாரும் எடுத்துச் சொல்லாததை சொல்கிறேன். அன்பானவனே இந்தப்பேரெழுத்தை தெரிந்து கொள்வது நமது கடமையாகும். திருஞானம் பெற்ற குருவின் சன்னிதானங்களில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் மல்க ஊண் உறக்கமற்று தனித்து அந்த அருள் நாதரின்

பாதத்தில் விழுந்து பணிந்தால் பேரண்டத்தை அமைத்த அதிசயக்கும் அந்த எழுத்தை காட்டுவார்.

அந்த கலியுடன் மா இருக்கும் நிலை அறிந்து இதயக்கமலத்தில் வைத்து உருப் போட வேண்டும். அப்போது அந்த இரண்டு எழுத்துக்களைக் கண்டுகொள்வாய். அப்போது உன் முன்சிரசாகிய புருவமத்தியில் இரண்டு எழுத்துகளும், உந்திக் கமலத்தில் இரண்டு எழுத்துக்களும் பூரண சந்திரனைப் போல் பிரகாசமாய் உதித்து நிற்கும். அந்த நிலையில் உன் உந்திக்கும் மலக்கிடங்குக்கும் நடுவே உண்டாகும் கருக்குளிக்குக் கீழாகவும் அந்த எழுத்து வடிவெடுத்து நிற்கும். இந்தப் பிறவிக் கோட்பாட்டால் நாம் செய்யும் தவம் அடையப்போகும் உயர் நிலையும் உள்ளது என்பதை உணர்ந்து தவம் செய்தால் உன்னுள் இயங்கும் இயக்கங்களைக் கண்டு கொள்வாய்.

116 - வது பாடல்

உருவமில்லாக் கருவையுரு வாகச் செய்யு மந்தச் சுருபமில்லா
சுடரொளிவு சோதியருள் நிற்கும்
நிற்குமந்த ரண்டெழுத்தும் நிலையொன்று
வால்ரண்டாம் நிலையாமல் நின்றாடும் அந்தரமற்ற யிடத்தில்
அந்ததிடத்திற் ஸூலென்ற அட்சரமூன் றேழுத்தும்
அந்தவட்டம் கோட்டையுள்ளே ஆடிரண்டும் நிற்கும்
அந்தரமாய் நின்றாடும் ஆசைகொண்டு ரண்டும்
அந்தகூவும் மீமுமது தானே கலிமாவாம்.

எந்த உருவமும் இல்லாமல் வெறும் இந்திரியம் என்ற நீர் இப்பேர்ப்பட்ட அதிசயமான உடல் உருவத்தை உண்டாக்கி உள்ளது. அந்த உடலுக்கு மஹா ஜோதியான அல்லாஹ்வின் அருள் வட்டம் நிற்கும் அந்த இரண்டு எழுத்தும் இரண்டு வால்களைப் போல் தோற்றம் கொண்டு ஒரே நிலையில் நிற்கின்றன. அந்தரத்தில் நின்றாலும் எவ்வித ஆட்டமும் இல்லாமல் நிற்கும் (எப்போதும் ஆடிக் கொண்டே இருக்கும் மனம், முக்தி நிலை அடைந்து ஆடாமல் நிற்பது போல் நிற்பதும் அந்தரத்தில் தான்) அது எதையும் தொட்டுக்

கொண்டு நிற்காது அந்த அந்தரங்கமான இடத்தால் ஸூல் என்ற நாமத்துடன் ஓர் எழுத்து வடிவம் கொண்ட தோற்றமுண்டு. அத்துடன் மூன்று எழுத்தாகக் கூடி ஓர் பிரமாண்டமான கோட்டை போல் தோற்றம் கொண்டிருக்கும். இந்தத்தோற்றத்தினுள்ளே ஹூவும் மீமும் காதலுடன் கனிந்து நடனமாடும் அதுதான் காதல் என்ற கலிமா.

117 - வது பாடல்

கலியுடனே மாவிரண்டும் கமலத்துக்குள்ளேற்றிக்
கசகாமல் கமலத்துள்ளே கருத்திலுருவானால்
வலீயஸினா கொடும்பிழையும் முழுக்குமப்போ தீரும்
வாய்முகமு முடற்கழுகி உலூச்செய்ய முழுக்கிறக்கும்
பலிதமுள்ள முழுக்கிறக்கப் பரிசுத்தத் தண்ணீரில்
பற்ற ஒலூச் செய்தவுடன் சித்திபெற்றோ ராவீர்
உற்றவர்களொருநேரம் தொழுநூறு வருஷம்
ஓயாத் தொழுகையுள்ள வுயர்ந்த பலனாகும்.

கலியுடனே மாவையும் இதயத்தில் இடைவிடாது பிசகாத நிலையில் நிறுத்தினால் தான் நாம் முன்செய்த பாவங்கள் அகலும். தன்னைவிட்டு நீங்கி பரிசுத்தம் பெற்ற நிலை உண்டாகும். அப்போது (மாவுல்ஹயா) ஜீவநீர் என்று சொல்லும் படியான தண்ணீர் உனக்குக் கிடைக்கும். அந்தத் தண்ணீர் கொண்டு அகச்சுத்தியும் அங்கசுத்தியும் செய்து கொண்டால் பாவம் என்ற தொடக்கு எப்போதும் உண்டாகாது. இந்த கலிமாவின் பரிசுத்த தவத்தை அறிந்தவர்கள் ஓர் நிமிடம் செய்யும் வணக்கம் உலகத்தார நூறு ஆண்டுகள் செய்த வணக்கத்தின் பலனை விட மேலானதாகும்.

118 - வது பாடல்

அத்தலத்தி லொருநேர மவருடைய வணக்கம்
ஆயிரம் வருஷம் திக்கீர் செய்த பலனாகும்
இத்தலத்தில் ரண்டெழுத்தும் மாற்றியே பிடிக்க
இதமறியா ரெப்போது மெரிநரகிற் றாழ்வார்

அத்தலத்திற் கலிமாவை அங்கத்துக்குள்ள றியார்
ஆர்குலமுந் தீனறியார் அழல்நரகில் வீழ்வார்
கத்தனவன் கலிமாரண்டும் கருத்துறவேயறிந்து
காசினியில் வணங்காத கள்ளத்தன மெல்லாம்
எத்தேச காலமவ ரெறிநரகிற் றழிரார்
எத்தவமும் கடலோட கவிழ்ந்த வகையாகும்.

அன்பனே நான் தரிப்படுத்திச் சொன்ன தாத்தில் உன் நினைவை பொருத்தி நீ வணக்கம், தவம் செய்தால் தான் நன்று. மற்றவர்களின் ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்த பலனை விட மேலாகும். மனிதர்கள் யாவரும் நாம் சொன்ன அந்த அதிசயமான இரண்டு எழுத்துக்களைப் பற்றி பிடிக்க மறந்தாலோ அல்லது அறியாமலிருந்தாலோ வீழ்வது நரகில் தான் அல்லாஹ்வை நாம் அங்கு பொருத்திப் பார்த்து உணர்ந்து வணங்காரும் நரகில் தான் வீழ்வார்.

119 - வது பாடல்

உற்றசெய்தியா யுரைத்தே னுலகமெல்லா மறிய
உலமா முஹம்மதவ ருரைத்தபடி யாலே
உத்தபொரு ளீதென் றுயர்த்தியா யுரைத்தேன்
உயர்ந்தமனக் கிருபையினா லுளமதியில் தரித்தேன்
எத்திசைக்குங் குருவான ஏகன்மஹ்மூதர்
எல்லாவர்க்கும் குருவாகும் எழியேனுக்குங் குருவாம்
உற்றமுத லுற்றதன தவத்தனையுஞ் சிகற
ஒட்டிவெளிப்படுத்துமுய ராதி பெரியோனே.

அன்பனே! நான் சொல்லும் அந்த அறிவார்ந்த விஷயமெல்லாம் உலகத்தார்கள் அறிய நாடிவ் சொல்லும் முறை நம் நபிகள் சொல்லித் தந்தவைதான். அந்த அருமையான விஷயத்தை உலகத்துக்குச் சொல்வது மட்டுமல்லாமல் என் உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டேன். இந்த உலகில் வந்த மனுவர்க்கம் ஜின்வர்க்கத்திர்க்கெல்லாம் குருவான அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபி பெருமானார் எனக்கும் குருவென்று எளியனாகிய நான் சாட்சி சொல்கின்றேன். நான் சொன்ன விஷயமெல்லாம்

மேலான விஷயம்தான் என நிலைப்படுத்து அல்லாஹ்வே மிகப்பெரியவன்.

120 - வது பாடல்

எத்தலமு மித்தலந்தானின்றுலக மறிய
அத்தலத்தை யித்தலமென்றாரு நிலையாக
புத்திமதி பொறுமைமிரிட னருமையுமில்லாதான்
புல்லறுவ னானதினா லெல்லோரு மறிய
உற்றசெய்தி யாகயிதை யுலகவருக்கு ரைத்தேன்
உலமா முஹம்மத ருரைத்தபடி யாலே
கத்தபெரி யோனேறப்பில் ஆலமீனே ஹாதி
கடல்மலையி லதிகபிழை பொறுத்தெனக் கிரங்கி

அல்லாஹ் நிரம்பி நிற்கும் அந்த உலகத்தை உலகம் அறியும் வண்ணம் எடுத்து சொன்ன குறைந்த அறிவுள்ளவன் தான் நான். இன்னும் அறிந்த அரிய பெரிய விஷமாக இருக்க. சர்தார் நபியவர்கள் எனக்குச் சொன்னதை நான் உங்களுக்கு சொன்னேன். இந்த உலகத்தை நடத்தியாளும் மாபெரிய வழிகாட்டி ரப்பே, உன் திருக்கருணைக்குத்தான் அளவேது. யாஅல்லாஹ் இந்த அடியேனின் குறைகள் மலைகள் போன்று இருப்பினும், கடல் போன்று இருப்பினும், எப்படி இருப்பினும் பிழை பொறுப்பவனே என் பிழைகளையும் பொறுத்து எனக்கு அருள் செய்வாயாக.

121 - வது பாடல்

உத்தமனே யடியேனுக் கனுப்போலே யிரங்கி
உன்கிருபை யெந்தனக் குதவி யருளாக
ஒன்றுபத்து நூறாக உதவிசெய்ய வேண்டும்
உவந்தமனத் தோர்மையுற வுதவி செய்வா யாதி
மண்டலம் புகழுமஹ் மூதுபொருட்டாலே
மகிழ்ச்சிதர வேண்டுமிரு பதிக்குமிறை யாமீன்
முந்தமுந்த முதலான கலிமாவின் பொருளை
மூமீன்களனைவர்க்கும் முவந்தறியச் சொல்வேன்.

சித்தனே சிரசாகும் எம்பிரானே, அல்லாஹ் யென்ற நாமத்துடன் அருள் மாறி பொழிபவனே, ஞானத்தால் நிறைந்தவனே, அன்பானவனே, உத்தமனே,

அடியேனுக்கு அன்புடன் இணங்கி உன்அருளை எனக்கு வழங்கிடுவாய். பத்துக்கு நூறு என்ற கணக்கில் நித்தமும் உனதருள் நிலைச் செய்வாயாக. சித்தம் யென்ற நினைவுடன் நிலையாய் முக்தி தந்தருள்பவனே, ஓர்மை எந்தனுக்கு நிலைக்க அருள்வாய். மண்டலங்கள் புகழும் மஹ்முது நபி பொருட்டாலே மகிழ்ச்சியுடன் ஈருலகை மாண்புடன் எனக்கு அருள்வாய். கலிமாவின் உட்பொருள் அதன் உள்ளார்ந்தது உண்மைகளை உலகத்தார்க்கு சொல்லுகிறேன்.

122 - வது பாடல்

கலிமாவில் நான்கு குலமாயெழுந்த பேரைக்
காபிரென்னுங் குபிர்க்குலத்தை யிழந்த பேரைக்
கலிமா வினாலுரு வாயமைந்த பேரைக்
கலிமா வுரைத்ததையு மறியாப் பேரை
கலிமாவே கெதியென் றிருக்கும் பேரை
கலிமாவை வகுத்துச் சொல்லு முலகத்தோரைக்
கலிமாவை யறிந்து கருத்தினி லிருந்துக்
காரணத்தைச் சொல்பவரைக் குருவென்று கருதலாமே.

கலிமாவின் கருத்தால் நான்கு கருவாக பிரிந்து கலிமாவில் நிற்போர்கள் காபீராய் பிறந்த பின் கலிமா பெற்று இஸ்லாத்தில் இணைந்த பேர்கள். தாயின் வயிற்றிலிருக்கும் போதே திருவருள் பெற்ற நன் பிறந்தோர்கள். கலிமா சொல்ல உலகில் கலிமா சொன்னவன் கோலத்திலிருந்தும் கலிமாவின் பொருள் விளங்காத பேரையும் நாம் உயிர் மூச்சு உணவு எல்லாம் கலிமாதான் என்ற பேரையும் கலிமாவின் விபரம் யாவும் அறிந்து சொல்லும் மக்கள் கலிமா பொருள் அறிந்து கருத்தினைப் புரிந்து தவம் செய்வோரையும் இன்னும் கலிமா வென்ற எழுத்தின் வல்லமையையும் அதில் தரிபட்டு இருப்போரையும் காட்டித்தருவோரைக் குருவாக ஏற்கலாம்.

123 - வது பாடல்

எத்திசையிலுள்ளம னுவானவெகு பேர்கள்
இறையோனுக் கீமானி றஸூலுக்கி ஸ்லாமாம்

உத்தகுலம் தீனாக இருக்கும் பெரியோரை
உங்களகுல கலிமாவை யுடலிலறிவீரே
மெத்தப்பெரி தானதவம் அவ்வல்க் கலிமாவை
மேதினிக்குள் ளறியாத பேர்கள் மனங்கழிம்பாம்
கழிம்பான கமலத்துள்ள அழுக்கையெல்லாம் நீக்கும்
காசினியல் தீன்குலமாய் கலிமாவை கேளும்.

இந்த உலகில் உள்ள மனித கோடிகள் எல்லாம் அல்லாஹ்வின்பால் ஈமானும் இஸ்லாமுமாக இருக்கின்றார்கள். இந்த உலகில் பிறந்த மனித நேயர்கள்தான் கலிமா சொன்ன இஸ்லாமியர்கள். மனிதகுலம் கலிமாவின் பொருள் புரிந்து உங்கள் உடலில் எந்த தட்டில், எந்த இடத்தில் அது நிலை பெறுகின்றது என்பதை உணர்ந்து தவம் செய்தால் தோற்று போகா வாழ்வும், சோபிக்கும் ஞானமும் பெறுவீர்கள். உங்கள் இருதயத்தின் சூட்சுமமாய் ஜொலிக்கின்ற கலிமாவின் இன்பத்தை நன்கு தெரிந்து கொள்வீர்கள். அந்த உலகில் தவங்களில் எல்லாம் பெரிய தவம் முதல் கலிமாவின் தவம்தான். கலிமாயென்ற மூலப்பொருளை அறியார்கள், இதயமெல்லாம் அழுக்காகும். அகச் சுத்தம் பெற்று ஞானக்கண்ணாடி போல் உங்கள் இதயம் ஆகும் படியான உட்பொருளை கேளுங்கள்.

124 - வது பாடல்

கலிமா அறிந்த குலம் கடந்த குலமென்பார்
கானகத்துப் பட்சிகளும் காபீர்களுஞ் சொல்வார்
அலிமா மனார்க்கிறையோ னருளுங் கலிமாவில்
அறுநான்கு அட்சரமும் அங்கத்துக்குள் ளறியார்
அங்கத்துகுட் கலிமாவை யறியாத குருவை
ஆதரித்த பேர்குபிராம் அழல் நரகில்வீழ்வார்
அழியாத கலிமாவை அன்பாக உரைப்பேன்
ஆர்குலமுந் தீனாக ஆதியருளாலே.

கலிமாவை உணர்ந்த மனிதன், உயர்ந்த மனிதன் ரப்புடைய சந்திப்பைப் பெற்றவன் என்று காட்டில் உள்ள பறவை இனங்களும், கலிமாவே தெரியாதவர்களும் சாட்சி சொல்வார்கள். நபிகள்

நாயகம் அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் வழங்கப்பட்ட கலிமாவின் இருபத்து நான்கு எழுத்துக்கள் தெளிவாக உணர்ந்து பார்க்காத குருமார்களும் இன்னும் அகச்சுத்தியுடன் கலிமாவை உணராதவர்களும் நரகில்தான் வீழ்வார்கள். என்றுமே அழியாத யாவுமே அழிக்க முடியாத கலிமாவை அன்புடன் அல்லாஹ்வின் கிருபையால் அழகாகச் சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள் அதைக்கொண்டு நேர்வழி பெற்றுக் கொள்ளுங்கள்.

125 - வது பாடல்

அருள்கலிமா லாஇலாஹ இல்லல்லாஹு வென்றும்
அதுமேல் முஹம்மதுர் றஸூலுல்லாஹியாகும்
ஆனபுகழ் கலிமாவுக் கறுநான் கெழுத்து
அதின் பொருளை ஆலமெல்லாம் மறியச்சொல்வேன் கேளும்
தீனவரே லாஇலாஹ இல்லல்லாஹு வென்று
திருநாம மிதைச் சேர்ந்த ஈராறு எழுத்தும்
எழுத்திலைந்து பிரிவுமுண்டு எழுத்து நிறங்கேளும்
இதற்குமுதல் லாவென்று இருக்கும் ரண்டெழுத்து
எழுத்திரண்டு மண்ணாகும் இருக்கும் வெள்ளையாக
இலாஹவென்றால் மூன்றுத் தண்ணீர் லங்கும் சிவப்பாக

கலிமா என்பது இருபத்து நான்கு எழுத்துக்களை கொண்டவை லாயிலாஹா இல்லல்லாஹு முஹமதரஸூ லில்லாஹி. இதுதான் கலிமாவின் பூரணம், இந்த கலிமாவின் உட்பொருளை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த கலிமாவில் ஐந்து பிரிவுகள் உள்ளன. இனி அந்த அட்சரத்தின் நிறங்களைப் பார்ப்போம். லா என்று தொடங்கும் கலிமாவின் இரண்டு எழுத்தும் மண் ஆதிக்கம்பெற்ற பூமியின் சுழற்சி. இந்த இரண்டைக் கொண்டுதான் நிலைக்கின்றன. அந்த மண்ணின் நிறம் வெள்ளை. இலாஹ் என்று தொடங்கும் கலிமா எழுத்து நீர் ஆதிக்கம் பெற்றவை. பூமியில் உண்டான தண்ணீர் எல்லாம் இந்த மூன்று எழுத்தின் ஆதிக்கத்தில் தான் நிற்கின்றன தண்ணீரின் நிறம் சிகப்பு.

126 - வது பாடல்

இல்லா வென்றால் மூன்றும் பச்சை இதுதானே காற்று
இதுமேலும் அல்லாவென்ற அட்சரமூன் றெழுத்தும்
அட்சரமே அக்கினியாம் அதுநிறமே கருப்பு
ஆகாயம் றூஹூநிலை ஹூவும் நினைவாகும்
ஹூவாகு மோரெழுத்துக் குலமுயர்ந்த தங்கம்
குலமான கலிமாவில் எழுத்தீராறு தானே.

இல்லா என்பது மூன்று எழுத்துக்கள் இந்த மூன்று எழுத்துக்கள் காற்றின் ஆதிக்கம் பெற்றவை. இதன் நிறம் பச்சை இந்த எழுத்தின் அதிகாரத்தினால் காற்று உண்டாகின்றன. அல்லா என்பது மூன்று எழுத்து இந்த எழுத்து அக்கினியின் ஆதிக்கம் பெற்றவை. இதன் நிறம் கருப்பு அக்கினி ஜூவாலையெல்லாம் இந்த மூன்று எழுத்தின் அதிகாரப்படிதான் உண்டாகின்றது. ஹூ என்பது ஓர் எழுத்து அல்லாஹ் ஒருவன் என்பதை உணர்த்தும் வண்ணம் உள்ளது. இது உயிர் எழுத்து. உயிரின் நிலையை உணர்த்தும்படி நினைவாய் ஆகாயமாய் எங்கும் விரவியநிலையில் நிலைத்திருப்பது. தங்கம் போல் பரிசுத்தமான இதன் நிறம் நீலம் இந்த கலிமாவில் பன்னிரெண்டு எழுத்துக்கள்ஆகும்.

127 - வது பாடல்

ஆனபுகழ் மஹரிபத்தின் அர்த்தஞ் சொல்லக்கேளும்
அறிந்தவுடன் ஆலத்துள்ளோ ரன்றிசுலா மாச்சே
கூவாகும் றூஹூநிலை கூவும் நினைவாகும்
கூவதுவும் மூச்சதுவும் கூவேகுத் தூசி

கூவேகுத் தூசியது கூவுமது அல்லா
கூவுக்குள்ளே குடிகொண்டு நாமிருப்ப தாமே
இருக்கும் பொருள் கூவுடைய இடத்தை யும்சொல்வேன்
இதனடியில் அல்லாவென்ற ட்சரமூன்றெழுத்தும்

அல்லாவென்றா லென்ன அதின் பொருளைக் கேளும்
ஆலமெல்லாம் நிறைந்த அழியாது பழுதில்லை
பழுதணுகாத் தூய்பொருள் பரமனைத்துப் பாய்ந்து
பாங்குபெறும் கூவுடைய பேருமது தானே.

நாம் விரும்பும் தவநிலை பொருந்திய மஹாதவத்தின் விபரம் நன்று கேட்பதுடன் புரிந்து கொள்ளுதலும், உணர்ந்து கொள்ளுதலும், முக்கியம் தெரிந்து கொண்டோர் இஸ்லாமியர் என்பது உண்மை. ஹூ யென்ற ஒலி எழுத்து உயிர்நிலையாகும். நம் உடலின் எல்லா உறுப்புகளின் நினைவாகவும் ஹூதான் நிற்கின்றன. இன்னும், நாம் விடும் சுவாசமும் அந்த ஹூவாகத்தான் சுழலுகின்றன. அல்லாஹ்யென்பது அந்த ஹூதான் நாம் என்பது நமது தோற்றமும் அந்த ஹூதான். கோடியாயிரம் ஜீவன்களும் அந்த ஹூதான் இந்த ஹூ வென்ற ஒலிக்குள்ளே அதன் உள்ளார்ந்த தத்துவத்துள்ளே இந்த உலகம் உருளுகின்றன. ஆகவே ஹூயென்ற உடல் என்ற ஆலயத்தினுள் நிறைந்து நீக்கமற தனியே நிற்கின்றான் பரம்பொருள்.

128 - வது பாடல்

இந்த இறை நாமம்ரண்டு லாமும் ஒரு அலிபு
இருலாமும் நடுமூலத்திருபுறத்தில் நிற்கும்
நிற்குமிரு லாமுமடி மூலத்திரு புறமும்
நிஜமாக ஆதம்ஹவ்வா வாகுமிரு லாமே
ஒக்கச்சொன்ன அலிபுநடு மூச்சிரண்டு எழுத்தும்
ஒன்றுபட்டு வரும்விதத்தையு வந்திங்ஙனம் சொல்வேன்

அல்லாஹ் யென்ற நாமம் கொண்டு நிற்கின்றது அலிபாய் இருக்கும். அல்லாஹ் ஆதமின் தோற்றத்தின் விலாபுரத்தை அரபி அச்சரமான லா என்ற எழுத்தின் வடிவில் அமைத்துள்ளான் என்பதை தெரிந்து கொள்வது முக்கியம். அல்லாஹ் யென்ற அலிப் எழுத்துடன் இந்த இரண்டு லாம் என்ற வடிவிலான இந்த மூன்றும் நடு மூலமாக நின்று இரண்டு விலாப் புறங்களிலும் அமைந்து செயல்படுகின்றவை. மனித செயல்பாட்டில் விலாப்புரம் என்பது முக்கியமான செயல்பாடாகும். ஆதமை அல்லாஹ் படைத்து அவரின் விலா எலும்பைக் கொண்டு ஹவ்வாவை படைத்தான். அதை பரிபாசையாக இரண்டு லாம் என்று பாடப்படுகின்றது அந்த இரண்டு லாம்

என்பது ஆதம் அல்லாவுமாய் இருக்கும் நிலையில் அல்லாஹ்யென்ற அலிபு மூச்சாக ஆதம் அவ்வா என்ற இருவரையும் இயங்கச் செய்யும் விதத்தை சொல்கிறேன்.

129 - வது பாடல்

இன்னுங் கலிமாவிலில்லா மூன்றெழுத்தின் பொருள்தான்
இருதயம் கொண்டெங்கு முள்ளதொரு பொருளென்றறீவீர்
உரைத்ததொரு இல்லாவில் முதல் அலிபும் லாமும்
உயிர்நிலையிற் பதினாலு எழுத்துக்கு மேலெழுத்தாம்

நாம் இதயங்களில் பிடித்துக் கொள்ள வேண்டிய கலிமா என்ற மூன்று எழுத்தின் எதார்த்த உணர்வுகளையும் அதன் உள்ளர்த்தங்களையும் அந்த கலிமா நம் உடலில் தொக்கி நின்று அதிகாரம் செய்யும் ஆதிக்கத்தையும் நன்கு உணர்ந்தோம். கலிமாவின் மொத்தம் உயிர் நிலையான பதினான்கு எழுத்தையும் தாண்டி நம்முள் ஜீவ ஜோதியாய் நிற்பது அல்லாஹ் என்ற கலிமாவின் சுருக்கத்தில் வரும் அலிப் யென்ற ஒன்றும் லா என்ற இரண்டும் (அதாவது இரண்டு லாம் என்று பொருள்) எல்லாவற்றுக்கும் மேலாகநிற்கின்றன என்பதை தெளிவுடன் விளங்க வேண்டும்.

130 - வது பாடல்

எழுத்தா கலாம் வயிற்றிலிருக்கும் அலிபொன்று
எல்லாத்துக் கடிலாமில் இருக்கும் அலிபொன்று
ஒன்றுபோலே ரண்டலிபும் லாம் வயிற்றில் நிற்கும்
ஊணுநடுப்பார்வை நுக்கத் தாகும் ரண்டலிபும்
நன்றாயிலா மூன்றெழுத்தின் பொருளதனை கேளும்
நமது பொரு ளெங்குமிறை யதற்கு மிணையில்லை
இணையில்லா தெங்குமது இருதயத்திற்கு சிறந்து
இலாஹ் வென்ற அலிபு யெழுந்தகுரற் பேச்சு

நம் நாவுக்கு பக்கத்தில் அலிபுயென்ற தோற்றம் ஓர் அலிபு வாக நம்முள் தோற்றம் கொண்டிருக்கும். அந்த அலிபானது உந்திக்கும் மார்பு குழிக்கும் நேராக தோற்றம் கொண்டது. இந்த அலிபின் தோற்றத்தை சுழி முனையில் உற்று நோக்க நுக்தா என்ற அளவில் ஜோதி மயமாகும். அப்போது நம் உடலில் பல கூறுகளாக பிரிந்திருக்கும்

கலிபு என்ற தோற்றம் ஒரே தோற்றம் ஆகும். இந்த அலிபின் தோற்றங்கள் ஏன் இப்படி அமையப் பெற வேண்டும்? மனிதன் தியான நிலையில் நிற்கும் போது இந்த அலிபுயென்ற தோற்றம்தான், ஜீவப் புள்ளியாக மாறும் நாம் பார்வையை புருவமிடையே நோக்கும் போது நுக்தா என்ற அளவில் நம் நெற்றி நடுவே ஜீவ அணுவின் தோற்றத்தில் பிரசன்ன மாகும். அல்லாஹ் என்ற சொல்லின் உள்ளார்ந்த நிலையை நன்றாக கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். நம் இயக்கங்கள் எல்லாம் அல்லாஹ்வாக இருக்கின்றன என்பதை பாடல்களின் மூலம் நல்ல தவயோகி விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது இணை இல்லாமல் நம் ஜீவ உடலில் இயங்கும் அல்லாலாஹ் என்ற கலிமா ஒலி நயத்துடன் இதயத்தில் பரிசுத்தமாக நிற்கின்றன. நம்மை நாம் தெளிந்து நோக்கினால் தன்னை அறிந்தவன் தன் ரப்பை அறிவான் அல் - ஹதிஸ்

131 - வது பாடல்

துணையாக அல்லாஹ்வென்ற அலிபும் ஷேயு ஹேயும்
தொகுத்தல்லவே ஹ¯கூவென்று துலங்கிவரு மூச்சு
ஆகுவென்று மூச்சுவரும் அலிபோடு ஹேயும்
அகார உகாரமிலோ அட்சரத்தி னாட்டம்
அகாரமென்றால் ஐந்துமூன்றும் அதுதானே எட்டு
அட்ட அட்சரமான அநாதிமந்தத்ர மதுதான்.

அலிபு யென்ற ரப்பின் குணமும் ஹ¯யென்ற குணமும் கூடிக் கலந்து ஆகுக என்று உண்டாயிற்று. இந்த கலவையிலிருந்து வந்தது தான் மூச்சு. மனிதன் இயங்கும் போது தன்னை மறந்தவனாக உற்றம் சுற்றம் மறந்த நிலையில் இந்த மூச்சை கவனித்தால் ஆஹ¯ என்ற அட்சரமான ஒலி ஒலிப்பதை கேட்கலாம். அகாரம் உகாரம் என்ற பஞ்சாச்சரம் ஐந்தெழுத்து ஜீவ பீசமும் இதுதான். உலகை படைக்கும் முன் உலகை தன்னுள் அடக்கும் இந்த அகாரம் தான். மூன்றெழுத்து மந்திரமும் அது. முச்சுடராய் தவயோகிகளுக்கு தகுந்தாற்போல் ஜீவ ஜோதியாக பரிணாமிக்கும் இந்த அகாரம் என்பது

எட்டெழுத்து மந்திரமாக ஒலிக்கும். இது தான் அனாதி மந்திரம் என்று அறிக. அதுதான் தன்னுள் ஆதிக்கத்தை நடத்தும் தவயோகிகளுக்கு எண் கோணத்தில் ஜீவ ஜோதியால் வெளியாகும்.

132 - வது பாடல்

உகார மென்றால் ரண்டு மதற்குயிர் நிலையுமாச்சு
உரையறியா ரெட்டிகடன்றால் ரண்டறியா தேழை
அறையுங்கலி மாவில் முதல்லா வென்றொருலாமும்
அட்சரத்தின் பொருளை நன்றாய் அவிழ்த்துரைக்க கேளும்.

அகாரம் யென்ற மந்திரம் ஒலியின் உள்ளமை பெரிதாகினும் அது அகாரத்தின் உயிர் நிலையில் உள்ளன. அகாரமும் உகாரமும் ஒன்றுதான் யென்று சொல்லும் நிலைகளும் உண்டு. கலிமாவின் ஆதி அல்லாஹ் என்ற வடிவ எழுத்தில் காட்சியாய் வரும் லாமின் உள்ளார்ந்த உண்மை நிலமைகளை தெளிவாக எடுத்துச் சொல்கின்றேன் கேட்டுக்கொள்ளவும்.

133 - வது பாடல்

அறியவகை பலதுமவ னாகும்வேறே யில்லை
அடிமுடியு மில்லையது அழியப்பட்ட தல்ல
உருவுக்குள்ளே தரிக்கப்பட்ட ஒளிவுகரு நாதம்
உருவழியும் ஒரு குறையே துண்மையுண்மை உண்மை

தோன்றுவது எல்லாம் அவன் தோற்றம். நாம் அறிந்த தோற்றமும், நாமறியாத தோற்றமும், நாம் காண்பது நம் கண்ணுக்கு கட்டுப்படாதது எல்லாம் அவனின் பிரசன்னம். அல்லாஹ்வின் தோற்றம் அடிநடுமுடி என்பார்கள். வானம், பூமி, பாதளம், வானுலகம், நடுவுலகம், பாதளஉலகம் இவை எல்லாமே அவனின் வெளிப்பாடுதான். அவன் குணங்களாகப் பிரிந்து சேர்பவை சேர்ந்து பிரிபவை. அவன் அழியும் பொருள் இல்லை. அவன் ரூபமானவனும் இல்லை, அவன் வெளியாயிருந்து உள்ளாயிருக்கிறான். அவன் உள்ளாயிருந்து வெளியாயிருக்கிறான் அவன்

சதையாயிருக் கின்றான் ஆனால் சதையில்லை. அவன் எலும்பாயிருக்கிறான் ஆனால் எலும்பாயில்லை. அவன் எல்லாமுமாயிருக்கிறான் ஆனால் அவன் எல்லாமுமாய் இல்லை. அன்பனே நீ பார்ப்பதும் பேசுவதும் அவனோடு. உன் இயக்கமெல்லாம் அவனே அவனின்றி நீ இல்லை. இப்போது நீ, நீ இல்லை. அவன் அவனாக இருக்கிறான். அவன் சூரியனாக இருக்கிறான் சூரியனாக அவனில்லை. சந்திரனாக இருக்கிறான் சந்திரனாக அவனில்லை. அண்ட கோளமாக இருக்கிறான் ஆனால் அண்ட கோளமாக அவனில்லை. அவன் மலை, கடல், நதி, நடப்பன, பறப்பன, ஊர்வன, மிதப்பன, இவை எல்லாமாக இருக்கிறான் இவை எல்லாமுமாக அவன் இல்லை. எல்லாம் அவனாகி விட்டபோது இருப்பவை எல்லாம் இல்லாமையாய் போய்விடும். இல்லாமையால் இருப்பினும் அவன் மட்டுமே தரிபடுகின்றான். அவன் நுக்தாவாய் எங்கே தரிபடுகின்றான் என்பதை கண்டறிவதே யோகம், ஞானம், தவம் எல்லாம் இது உண்மை.

134 - வது பாடல்

உண்மையுள்ள கலிமாவி லுரைத்தேன் முதற்பாதி
யோதுகிறேன் முஹம்மதுர் றஸூலுல்லாஹ் பொருளை
முஹம்மதுர் றஸூலுல்லாவென்றபொருள்கேளுஎனச்சொல்
முஹம்மதென்றால் உண்மைகொண்டு உண்மை கொண்டவனே
உண்மைகொள்வ தேதுவானால் உருவம் முஹம்மதுவாம்
உயிருமவ னேவல் லவனாகும் பொருளென்று
பொருளாகுங் கலிமாமுன் பிரித்துரைத்த தெல்லாம்
பொருளவனாம் தாத்துவகை பிரிந்த விதமாகும்.

அல்லாஹ் அர்ஷின் மேல் இருக்கிறான். அவனது அர்ஷ் தண்ணீர் மேலிருக்கின்றது. அப்படியானால் தண்ணீருக்கும் அர்ஷுக்கும் என்ன சம்பந்தம். அர்ஷ்யென்றால் என்ன? தண்ணீர்என்றால் என்ன? அல்லாஹ் நம்முள் இருக்கிறான் என்றால் எங்கே இருக்கிறான்? அவனின் அர்ஷ் எங்கே இருக்கின்றது? அப்படியானால் முஹம்மது (ஸல்) அவர்கள் யார்?

அவர்களுக்குள் அல்லாஹ் எப்படி இருக்கின்றான்? ஆக்கமும், அணுவும், அவனின்றி வேறு இல்லை என்கிறது கலிமா. நம்முள் அவென் அங்கம் எங்கே? அசைவு எங்கே? நாம் அவனாக இருக்கின்றோம் என்றால் நாம் யார் நம் இயக்கம் என்பது என்ன ? நாம் பார்த்துக் கொண்ட கலிமாவின் உள்ளமை, அல்லாஹ் நம்முள் எங்கே இருக்கிறான் என்பதையெல்லாம் விளங்கும் போது அல்லாஹ் யென்ற விஷயம் கண்ணால் பார்க்கமுடியாத நம்பிக்கையில் நிற்பவை. அப்படி இருப்பினும் நம்முள் அல்லாஹ் எங்கு நிலை கொண்டுள்ளான் ? அந்த மஹா அண்டம் போல் இந்த பிண்டத்தை அல்லாஹ் முன் மாதிரியாக ஆக்கி உள்ளான். ஆகாயம் தொடாமலும், பூமியைத் தொட்டும் நம் வாழ்க்கை சுழல்கின்ற மனிதனின் அண்டம் என்றால் .... பாதங்கள்தான் பூமி போல், அதன் மேல்புறம் வாழ்க்கைக்கு தேவையான உபகரணங்களும், இதயம் நன்றாக இருந்தால் மற்றவை எல்லாம் நன்றாய் இருக்கும். இதில் நினைவு என்று ஒன்று உண்டு. இது எங்கே உண்டாகின்றது. நினைவுக்கு என்ன தோற்றம்? நினைவு யென்றால் என்ன என்பதுதான் விஷயம் மூளை அல்லாஹ்வின் படைப்பில் மகா ஆற்றல் கொண்டது. இது எப்படி அமைந்திருக்கின்றது என்றால் மூளையைச் சுற்றி தண்ணீர் வளங்கள் இந்த தண்ணீரில் மூளை மிதக்கின்றது. உடலின் இயக்கத்தை எல்லாம் உள்வாங்கி தன் வேலையை செய்கின்ற மூளையின் இயக்கத்தின் படிதான் உடல் இயங்கும். அல்லாஹ் இதில் நல்ல வளமான விஷயத்தை வைத்துள்ளான். அதாவது அல்லாஹ் யென்ற இந்த நினைவு அர்ஷ்யென்ற மூளையில் இருப்பது போலும். அந்த அர்ஷ் தண்ணீரில் மிதப்பது போன்றும் அல்லாஹ் அமைத்துள்ளான். ஞானம் தேடுவோர், தவம்செய்வோர் கவனிக்க வேண்டியவை. நாம் வந்த வழியும் செல்லும் வழியுமான புருவமிடையில் நம் நினைவை அழுத்தமாக சொல்லி கலிமா ஒலியுடன் அடக்கமாக பதித்தால் மூளையென்ற அர்ஷிலிருக்கும் அந்த நினைவுதான் அல்லாஹ். அந்த அல்லாஹ் புருவமிடையில் அதிரூபமாக தோன்றுவான். அல்லாஹ்

உஹதாய், நூரே முஹம்மதாய் வெளியாகி வாஹிதியத்தாய் அண்டம் பிண்டமாய் சமைந்தது. இதில் நாம் என்பது உண்டு என்று சற்று அறிக. பலதுவான அல்லாஹ் முஹம்மதாயும் அமைந்தான். நம்முள் ஈமானை நிலைபெறச் செய்ய வேண்டி நம் உடலில் முஹம்மதாயும் அதில் ஓடிக்கொண்டு இருக்கும் உயிரானது அல்லாஹ்வாயும் இயங்கும் என்பது உணரப்பட வேண்டிய விஷயம். நாம் சொல்லும் கலிமாவில் தரித்த தவத்தில் நிலைத்தால் உயிர் யென்ற அல்லாஹ் உடல் என்ற முஹம்மதுவில் தங்கிவிடுகின்றான். இப்படிவாழும் நிலையில் உள்ள உடலை மண் தின்பதில்லை. அதுவே நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. இதுவரை நாம் சொல்லி வந்த விஷயம் அல்லாஹ்வின் (தாத்து) உள்ளமையில் உள்ள விஷயங்களாகும்.

135 - வது பாடல்

அருளான தாத்தில் நின்று ஆகுதே சிபாத்து
அஹமதென்ற அட்சர முஹம்மதுரு வாச்சே
முஹம்மதென்ற அட்சாரந்தான் முழங்கியுட லாகி
முன்னொளி கொண்டொருவட்ட முண்மையுண்மை யுண்மை
உண்மை முஹம்ம தென்றே யுரைக்குநான் கெழுத்தும்
உடல் முழுவது முருவாச்சு வோங்குஞ்சிரந் தவிர
வண்மைபெறும் துற்றென்று வரைந்தரேயின் பொருள்தான்
வடிவான பொருள் துலங்கி வந்தது வென்றறிவீர்
தனிமையில்லா றேயை இருபிளப்பாக பிளந்து
தரித்ததுபார் உடலுக்குள்ளே இருமாங்காயாக
உண்மை முஹம்மதுர் றஸூலு மூன்றெழுத்தும்
ஒருபொருளி லுதித்தவரா லுலகாட்ட மென்றும்
வண்மைபெரு மூன்றெழுத்து அடிமூலக் கோட்டை
வாசலும் நாலுண்டதற்கு வளர்ந்தெரியுந் தீயும்
நம்மிறஸூலுல்லாவென்ற அட்சர மூன்றெழுத்தும்
நாடும் பொருளுட லுயிரும் நபியுமிறை யென்று

இந்த உலகில் மேல் உலகில் கீழ் உலகில் உண்டாகும் எல்லா குணங்களும் அல்லாஹ்வின் (சிபாத்து) குணமாகும். அது குன் என்ற ஒலியில் உண்டான குணமாகும் அந்த அருளான குணம் தான் பல குணங்கள் ஆனது. அதிலிருந்து அஹமதென்ற எழுத்து

உண்டானது அஹமதென்பது தான் முஹமதிய்யா என்ற ஒளித் தோற்றம் உண்டாயிற்று. அதன் எழுத்துக்களின் ஒலிகள் எத்தனையோ கோடியாண்டுகள் ஒலித்து நின்றுதான் உடலெடுத்தது. இந்த உடல் மேல் பிரகாசம் பொருந்தி வட்டமான மஹாஜோதி வடிவில் நின்றது. இந்த விஷயம் உண்மையானது. உண்மையாகவே முஹமதுயென்ற நான்கு எழுத்தும் சிரசுயென்ற கண்டத்தின் கீழ் உள்ளன. எல்லா உடல் உறுப்பும் இந்த நான்கு எழுத்துக்களால் உண்டாகின்ற வல்லமை பெறும் அணு உண்டானது. ரே என்ற ஒலியைத்தரும் எழுத்தின் பொருள் ஒலி என்ன வென்றால் அந்த மணிமந்திர ஒலியின் தத்துவம் கொண்ட ரே என்ற எழுத்துதான் முஹம்மது ரஸூல் யென்ற வடிவம் கொண்டது இந்த ரே யென்ற எழுத்தின் தோற்றம் நம் மார்பின் தோற்றம் போல் உள்ளது. அந்த ரேயே இரண்டாகப் பிளந்து இரு பாகங்களாக வடிவெடுத்தது அதுதான் மார்பகங்களின் உள்தோற்றமான மாங்காய்களாக அமைந்துள்ளது. முஹம்மது ரஸூல் இந்த ரஸூல் என்ற மூன்று எழுத்தின் உள்ளர்த்தம் இந்த மூன்றெழுத்து கொண்டுதான் உலகை நடத்தும் ஓயாத நடன ஓட்டமுமாய் நம் ஓட்டமுமாய் அசைகின்றன. வல்லமை பெற்ற இந்த மூன்று எழுத்துத் தான் நம் உடல் என்ற கோட்டையின் அஸ்திவாரம். இந்த கோட்டைக்கு நான்கு வாசல்கள் உண்டு அந்த வாசல்கள் அக்கினி திரவங்களால் உண்டான வாசல்.

136 - வது பாடல்

பாடுசொன்ன மூன்றெழுத்தால் சிரசுடலுக் காச்சிப்
பாங்காகக் கடைசி தன்னில் வருமேயொரு ஹேயும்
வருமேலாயிலா ஹாவில் அல்லாஹூ ஹேயும்
வடிவ முஹம்மதுர் றஸூ லுல்லாஹி ஹேயும்
இருஹேயும் மீமும்மூலத் திருக்குங் குடியாக
ஈராறு உள்ளெழுத்தில் இல்லென்னும் அலிபு
அலிபுநிலை கமலத்துள்ளே ஆடு முயிராகும்
அது நிலையிற் பதினான்கு அட்சர மீரேழே

நாம் பேசி வந்த மூன்று எழுத்துக்களால் ரஸூலுடன் கூடி உடல் உண்டாகி தோற்றம் பெற்றன.

முஹம்மதென்ற வடிவில்வரும் ஹேஎன்ற எழுத்தும் லா இலாஹ என்ற வடிவில் வரும் ஹேயும் முஹமது என்ற வடிவில் வரும் மீமும் முத்தலமாகவும் முக்காலமாகவும் முக்காலங்களின் நிகழ்வாகவும் முடிவாகவும் நடத்தும் குணம் கொண்டவை. இதயக்கமலத்தை நடத்தும் இந்த பன்னிரெண்டு எழுத்துக்களும் உடலான உலகங்களும் உயிராய் நின்று நடத்துகின்றன. அந்த உயிரின் இயக்கம் பதினான்கு எழுத்தின் ஆதிக்கம் கொண்டவை.

137 - வது பாடல்

செம்பவள மூன்றங்குலம் சிறந்த தடிநிலையிற்
சிறந்தபச்சை நடுநிலையிற் பத்தங்குலமாமே
பொங்கும் வானொளி புகழ்ந்து முத்திநாட்டம்
பொற்பாச னத்திலுயரங்குல மொன்றாமே
பங்கமில்லாக் கலிமாவிற் பதித்த நடுநிலையிற்
பாரமுள்ள ரண்டெழுத்தும் பதித்துத் தலைமாறி
சிங்காரம் அலிபோடு லாமுங்கீழே மீமும்
சிவந்ததொரு காபும்நூனு மிருக்கும் ஐந்துமேலே
அங்கத்தின் கீழ்பேயோடு ஏயும்காபும்வாவும் ஏழு
அதன்கீழே நூனாகி அமைந்ததைந்துந்தும்
எழுத்திற்பத்தில் ஒன்பதுதான் இருக்கும் பச்சை நீலத்தில்
இதற்குமுதல் அலிபு இலங்கும் ஒளிமேலாய்

இலாஹி என்ற கலிமாவின் ஆதிக்கம் தண்ணீர் இதன் நிறம் சிவப்பு. இது உடலின் மூன்று அங்குலம் கீழ்வசமாய் நின்று இயங்குவது. அல்லாஹ் என்ற கலிமாவின் ஆதிக்கம் காற்று இது உடலின் கீழ்வசமிருந்து நடுமையத்தில் நின்று இயங்குவது. இதன் நிறம் கருப்பு. ஹு யென்ற கலிமாவின் ஆதிக்கம் பெற்று ஆகாயவெளி எல்லையற்ற பரவெளி. அது வான் நிலையான சிரசை ஆதிக்கமாய் கொண்டது. வானில் பரவி நிற்கும் நிறம் நீலம் அந்த சிரசுயென்ற ஆகாயம் அங்கும் பரவி நிற்கும். இன்னும் கலிமாவின் நடுநிலையிலே இரண்டு எழுத்துக்கள் தலைமாற்றி அலிபுடன் கூடி லாமின் கீழ் மீமும் அதன் மேல்காபும் நூனும் இருந்த உடலின் கீழே பேயும், ஏயும், காபும், வாவும், அதன் கீழே நூரும் நூனும் மாய் நின்று ஐந்து எழுத்துக்கள் போல் தோற்றம்

கொண்டு ஓர் சக்கர வடிவில் இயக்கம் கொண்டுள்ளது. இந்த ஐந்து எழுத்தும் பத்து எழுத்தின் தோற்றமெடுத்தன அதாவது அல்லாஹ் முஹம்மது என்ற கலிமாவின் தோற்றம் பின் ஒன்பது எழுத்தாய் பிரிந்து அதாவது முஹம்மதிரஸுல் என்ற கலிமாவின் தோற்றம் கொண்டு அதன் நிலையில் அலிபாய் பிரகாசமாய் ஜோதியாய் ஜொலிக்கும்.

138 - வது பாடல்

ஆணிமுத்துப் பச்சையுமாய் அமைந்தெழுத்து முரைத்தேன்
அஹமதென்ற நான்கெழுத்தும் அடியில் சிவந்துருவில்
இதுகலிமா மஹ்ரிபத்தென் றெவரு மறிவீரே
முழுத்தமுள்ள அலிபுமுத லெழுத்தைக்கேளும்
முன்னாளில் நுக்கத்துமுத்தால் முளைத்த அலிபென்று
அந்தலிபு ஆதிபங்காம் அதிற்பிறந்த பவளம்
அஹமதென்ற அலிபு அதிற்பிறந்த பச்சை
பச்சைபச்சைநிறம் ஆதமல்லோ முச்சுடரு மாச்சு
பார்வைஜப றூத்துமக்காம் நடுநிலையில் தோன்றும்

நீலம், பச்சை, சிவப்பு என்ற கலிமாவின் நிறங்களையும் அதன் குணங்களையும் சொல்லியாயிற்று. அஹமதென்ற நான்கெழுத்தான வல்லமையும் சொல்லிவிட்டேன் இதுதான் கலிமா மஃரிபத்துல்லாஹ். அல்லாஹ்வே அறிந்து கொள்ளும் பரம ரகசியமானவை நன்கு தெளிவாய் தெரிந்து கொள்க. இனி அலிபின் தோற்றம் என்ன என்பதைப் பார்ப்போம். ஆதியில் நுக்தா புள்ளியாய் இருந்தது இது ஓர் எழுத்தின் ரூபத்தில் ஜொலித்த அலிபின் தோற்றத்தில்நின்று தோற்றம் பெற்றன. இது அலிபு அல்லாஹ்வின் பங்கு. அதாவது ஆகாயம் நீல நிறம் பெற்றவை. அஹமதென்ற தோற்றம் அலிபுடைய தோற்றத்திலிருந்து வந்த தோற்றம். இது அல்லாஹ் என்ற கலிமாவின் பச்சை நிறம் பெற்றது. பின் இந்த பச்சை நிறம் ஆதம் யென்ற தோற்றம் கொண்டது. இது அல்லா அஹமத் ஆதம் என்ற முச்சுடரின் தோற்றம். இதிலிருந்து தான் ஜபருத் என்ற மகாம் உண்டாயிற்று.

139 - வது பாடல்

தோன்றும் மிதே சுல்தான் நசிறாவின் நிலையாம்
துலங்கும் வட்டம் மக்காமன் மஹ்றமூதா நிலையில்
உருச்சிகப்பு உடல் பச்சை றூஹுவெள்ளை யொளிவாம்
உத்தநிலை அலிபதனை யுறுதிகொண்டே நினைந்து
உயர்த்தியுள்ள நினைவில் வணக்கமென்றே யுவந்து
உண்மையுள்ள நினைவுதன்னை யொதுக்காமல் நிறுத்தி
இந்தநிலை அலிபுநிலை தொழுகை நிலை யெழுத்து
இனிக்கேளும் றூஹுவின் தொழுகைநிலை யெழுத்தை

இத்தனையும் நன்கு தெளிவாக தெரிந்த பின்தான் நாம் தவத்தில் ஓர் நிலைபெற முடியும் இந்த நிலைதான் சுல்தான் நஸீராவின் நிலை. அப்போது ஜோதி வட்டமாய் தோன்றும் மஹ்றமூதாவின் நிலையும் இதுதான். அந்த ஜோதி வட்டம் ஓர் அலிபின் தோற்றத்தில் தோன்றும். அதன் உருவம் சிகப்பாக அதன் உள்தோற்றம் பச்சையாக அதன் சிரசான ஆகாயத்தின் தோற்றம் வெள்ளையாகவும் இருக்கும். அதுதான் ஜீவன்களுக்கெல்லாம் மூலமாக நின்று சுழல்கின்றன. அந்த அலிபை நினைவுடன் உன்னி உன் நினைவோடு கலந்து நின்று வணங்க வேண்டும். இதுதான் கலிமாவை உணர்ந்து செய்யும் தவம். எப்போதும் அலிபை நினைவில் கலந்து நாம் சொன்ன கலிமாவின் தோற்றங்களை உணர்ந்து தொழுவதுதான் நபியின் தொழுகை.

140 - வது பாடல்

அஹதல்லவோ உஹதாகி அஹ்மது ஹாமீதாய்
அது நான்கு ஹேயெழுத்து மறிய விண்ணோர் வணக்கம்
நாமுமந்த வணக்கமென்றே நாட்டங்கொண்டே நிறுத்த
நலமாம் றூஹுடைய நடப்புமிது வாமே
அஹதல்லவோ அஹமது முஹம்மது ஹாமீம்தான்
மஹமூதா மகிழ்ச்சியுள்ள நாலுமீமை நாட
நாட்டமுள்ள கதிர்மதிமீன் வணக்க மிணையாக
நான் வணங்கும் வணக்கமென்று நாடி சஜீதாச்செய்ய
ஆனவரே இருப்புடைய எழுத்தை இனிகேளும்
அன்னைகுதா அஹதுடனே அஹமதுவே ஆதம்.

நாம் சொல்லி வரும் படித்தரங்கள் நன்கு விளங்க வேண்டும் என்றதால் அடுத்து வரும் நிலைகளை நன்கு பதியவைத்துக் கொள்ளுங்கள் உயிரின் வணக்கம் நம் உயிர் அணுவாக நின்றபோது அது அல்லாஹ்வை எப்படி வணங்கியதோ அப்படி இந்த ஜடத்துக்குள் வந்த பின்னும் வணங்குவது தான் அது அஹது உஹது வாஹிதியத். இந்த விபரம் ஏற்கனவே சொல்லி உள்ளோம் அது ஹேயின் தோற்றம் கொண்டது. இது வானவர்களின் வணக்கம் இந்த வானவர்களின் வணக்கத்தை நாம் செய்தால் வானவர்களின் குணங்கள் நம்மில் சேரும். இந்த வணக்கம்தான் நுக்தாவுடைய வணக்கமாகும். இன்னும் மஹ்முதாவின் வணக்கம் நான்கு மீமை கொண்டு நடக்கின்றது இந்த மீமின் வணக்கம் நம் நாட்டத்தின் பேரில் நாம் அமைத்து கொள்ளும் கதிர்யென்ற மஹா ஜோதியின் நிலையாகும். இந்த வணக்கம் சுஜூது என்ற முற்றிலும் தன் சிரசை பூமியில் பதித்து அலிபுடை நினைவை நினைவில் ஓடவிட வேண்டும். அப்போது அகதுடைய சூட்சம நிலை முடிவுறும் இனி அதன் வணக்க நிலைகளின் எழுத்தைப் பார்ப்போம்.

141 - வது பாடல்

ஆதமுடனிதுனாலும் நாலெழுத்தா யிருந்து
அறுசுடைய வணக்கமனை வோருடைய வணக்கம்
இந்த வகை நாலெழுத்தும் எண்ணியே தொழுக
இரவில் தொழும் ரகசியத்தை தொழுகை எழுத்தாகும்
உலகுதனி லொருநாளின் தொழும்விபரம்கேளும்
ஓரறிவு லேழுதரம் தொழுக அருள் பெறுவார்
நிலையாக தொழுகையுடன் நிஜமறியச் சொன்னேன்
நிச்சயமாயுறுபுடைய நேர்மை சொல்லக் கேளும்
உறுபென்று சொல்லுவது உலகி லிஸ்லாமாம்
ஒழுங்கோடே நடப்பதுதான் உறுபென் றறீவீரே
உறுங்காபு நிலையுடைய அருத்தம் சொல்லக் கேளும்
உள்ளபல கலையுடைய உட்பொருளை யறிந்து.

அல்லாஹ், முஹமத், ஆதம் என்ற மாபெரும் தத்துவத்தின் நிலை அல்லாஹ் என்ற மாபெரும் ஆற்றல் அன்னையின் மூலம் பிள்ளையாகி பரிணாமிக்கின்றது.

இதுதான் மார்க்கம், இந்த உண்மை நிலையை உணர்த்துவதுதான் தவம். அப்பனும் அம்மையும் பிள்ளையுமாய் நாம் நின்றுஅப்பனில் கலக்கின்றோம் என்ற தத்துவக் குறியாகக் கொண்டு வணக்கம் செய்ய வேண்டும். ஆதம் முஹம்மது அல்லாஹ் என்ற மூன்று நினைவாகி நின்று வணங்குவதுதான் அணுவுடைய வணக்கமாய் நடக்கின்றது. இதை இராக்காலங்கள் மாத்திரம் ரகசியமாய் ஏழு தடவை செய்ய வேண்டியது. இந்த நிலை உணர்ந்து இரவில் நின்று நாம் தொழுதால் அல்லாஹ்வின் கடாட்சம் கிடைக்கும்.

142 - வது பாடல்

அறிவதுதான் கலைநெறியை யுறுபுநிலை யாகும்
அதிகமுள்ள உறுகாபு அறிந்து கொள்ளச்சொல்வேன்
சொல்லுகிறேன் உருபான நின்குலத்திலிருந்து
சுருகிநிலை மறையான வுறுபுநிலை யறிந்து

எள்ளளவும் பிசகாமல் நேர்மைகொண்டு வருக
இதைத்தானே உறுக்காபு நிலையென்றுரை செய்த
நிலையாக முரீதுடைய நிலைமை சொல்லக் கேளும்
நிலத்திலுள்ள பொருளையெல்லாம் நினைத்து மனமலைந்து

நிலை தவறி நினைவுகெட்டு நிச்சயமே குலைந்து
நின்றலையும் போதுகுருக் கண்டபடி பணிந்து
என்றுமுள்ள பெரியவரே என்னினைவு ஆடி
எங்குமலை யாமல்நிலை நிறுத்திவையுமென்ன
சங்கைபெறும் குருப்பதத்தின் சரணமது செய்தால்
சந்தோஷ மானபின்பு தன் பதத்திலிருந்து
எந்த மட்டோ பொருள் சுமக்க வலுமையில்லானென்று
எழுநான்கு யாதிலொன்று எட்டுமகாமுண்டு
வழியாறு பாதையுண்டும் வணக்கமைந்தி லொன்றும்
வருத்தி வைப்பதுதானே முரீது நிலையாகும்
முரீதுநிலை யிதுவாகு முன்னிலைந்த நினைவை
மோசமென்று மாற்றியொன்றை யுறுதிகொண்டே பிடித்து
கருத்திற்பிசகாமலந்தப் படிவணக்கஞ் செய்யார்
காட்சியொன்றுங் காணாமல் மருமனங் கலங்கி
இருளறையிற் குருடர்சென்றே யிலங்கு ரத்னந்தேடி
எப்படியோ தடுமாறு மப்படியே யுளறி
பொருளான பூரணத்தைக் காணாமலலைந்து
புலம்பினதைப் புலம்பியல்லோ போகுமவர்காலம்.

குருவும் சிஷ்யனும் குடியிருக்கும் இடம்தான் அல்லாஹ்வின் சந்தோஷமான இடம். எல்லாம் அறியப் போகும் அல்லாஹ்வின் நேசர்களே ! விபரமில்லா குருவின் பிடியில் சிக்கி தன்னை இழக்காமல் காலத்தை வீணே போக்காமல் காமிலான குருவிடம் எல்லாவற்றையும் இழந்து அவர்கொடுக்கும் யாசகத்தைப் பெற்றால் அதுதான் மெய்ஞானம் . அல்லாஹ்வின் ஆற்றல்களையும், குருவின் ஆற்றல்களையும் பாகுபடுத்தி அறியும் சீடர்கள்தான் அல்லாஹ்வின் ஞானத்தை பெறுவார்கள். தகுதியற்ற குருமார்களின் சகவாசம், தறிகெட்டு தடுமாற்றத்துடன் காலமெல்லாம் இருட்டில் குருடன் தேடும் புதையல் போல் ஆகும்.

143 - வது பாடல்

மருளாமற் பலநினைவை மாற்றியொரு நினைவாய்
மனதுதன்னை நிலைநிறுத்தி மாளாமல் மாண்டு
இன்னதொரு வணக்க நிலை யிணையுமில்லை யென்று
இருதயங் கொண்டிருக்கும் விதந்தானே முரீதாகும்
நறைகமழும் தாலிபுட நன்மை சொல்லக் கேளும்
நானிலத்திற்கு குரு தேடி நாளுமடி தொழுது
பெரியவரே யென்குருதான் சொன்ன வுபதேசம்
பேரான இறைநாமம் இன்னதென்றெடுத்து
அறியவகை தெரியும்படி பிரிவெடுத்தாரும்
அந்தந்த அட்சரத்தின் நிலையெடுத்துத் தாரும்.
குருபதத்திற் பணிந்துவுப தேசமது கேட்கில்
குருநாதன் றிருமானற் கூறுவதைக் கேளும்
அரியகுரு முன்னுரைத்த அட்சரத்தைக் கேட்டு
அணுவும் பிசகாமலதை அங்கத்திற்குகாட்டி.

குருவுக்கு சிஷியன் கோழிக்கு முட்டை போன்று. முட்டை குஞ்சாகும் வரை தன் காலில் முட்டையை எப்படி வேண்டுமானாலும் நகர்த்தும் கோழி. அதுபோல் குரு தன் காலால் சிஷியனை எப்படி வேண்டுமானாலும் நடத்துவார். நாம் முட்டைப் பருவத்தை தாண்டி குஞ்சான பின் குரு நமக்கு எல்லா வகையையும் ஊட்டுவார். குருவின் பார்வையில் நாம் பெறுவதை வளங்கப்படுவோம். நல்ல ஞானமும் கற்றுத் தந்து நம்மை

முக்தியென்ற நிலையை தருவார் பின் நீ அதைக் கொண்டு தொடர வேண்டியது தான் எல்லாம் சொல்லித் தந்தேன்.

144 - வது பாடல்

பிரிவு சொல்லிய தினுடைய பொருளெடுத்துக் காட்டிப்
போதமுள்ள தெரிசனையின் பிரிவுகளுஞ் சொல்லி
ஒருபடிக்கு ஒருபடிதா னுயர்த்த நிலையேற்றி
ஓர்மையுள்ள வணக்கமதில் நிலைநிறுத்தி வைப்பார்

நிலைநிறுத்தி வணக்கமதினென்றான வெழுத்தும்
நிலையான வெழுத்தனைத்தும் நிற்கின்ற தலமும்
கலகலெனத் தனித்தனியே பிரித்து முதலுரைத்தேன்
கருத்துறவே யறிந்தவர்க்குக் காட்சி நிலையாகும்

திருநிலையை யறியாத திருடர் செய்யுங் கலகம்
திறமாக முன் வணக்கம் யாது நிலைமாற்றி
பின்னையொரு அட்சரத்தைப் பெரிதென்று சொல்லிப்
பேய்த்தனத்தில் வருந்திவைப்பார் பேய் மனிதர் கேளும்

அன்றுரைத்த வுபதேச மல்லவென்று போனால்
அரும்பாடு பட்டதெல்லா மந்தரமாய் போச்சே
இன்றுரைத்த வுபதேசம் இருதயமே கொண்டால்
இதற்கு முதலுபதேச மல்லவென் றருத்தம்

அல்லவென்ற பொருளொன்று அணுவும் நினைவானால்
அத்தனையும் கொடும்பாவஞ் சுத்தக் குபிராகும்
முத்தான யகதுநிலை முன் வணக்கம் போல
முறையாகப் பின் வணக்க மோசமதுவாச்சு
அத்தாட்சி சொல்லவென்னா லாகுகில்லைச் சடக்கை
அறிவுடைய பேர்கட்கிந்த அத்தாழச்சி போதும்

முறையாக முன் வணங்கும் யாதையும் விடாமல்
முறைமுறையாய் படியேறி மூதறிவிற் கூடி
என்னவென்னே இதற்கு முன்னே யெடுத்துறைத்தேன் கவியில்
எவ்வகையுந் தானறிந்து எழுத்து நிலையறிந்து

இலங்கும் பொருளெங்கேயென்று இருதயத்தில் நாடி
எப்போதுந் தேடுவது தாலிபென்று சொன்னேன்
தாலிபென்று தேட்டங் கொண்டு தானலையும் விசளம்
தம்ஹுூத்தென் றுரைக்குமந்த தவப்பொருளைக் கேளும்

தவத்திலவர் தேடியுடலத் தலங்களெல்லா மலைந்து
தனதுபொரு ளிதுவெனவே தானறிந்து மகிழ்ந்து
நிலைத்த சொல்லை மனதிருத்தி நெடுவாசி யேற்றி
நித்தனுட னூற்றிருப்பார் நிலத்திலறி வாளர்

உற்றசெய்தி யாகவிதை ஒளியாம லுரைத்தேன்
உண்மையுள்ள தம்ஹறூத்து உலகவரே யிதுதான்
இத்தலத்தி லிஸ்லாத்தி லுள்ளவரே யெல்லாம
இருபாத மெப்போது மெனசிரத்தி லேற்றி

குற்றமெல்லா விலகிதீனோர் குலங்கள் வெளியாக
குவலயத்தில் பிஸ்மில் குறங் கொஞ்சத் தமிழாக
ஒருபத்து ஒன்பதிந்த உயர்ந்தறிவு நிலையும்
ஒழுங்கான கலிமாவும் ஓரெழுத்து நிலையும்

தொழுகை முரீதுடைய வெழுத்துவகை நிலையுந்
தொடுகுறிபோ லுகமெல்லாம தோற்றும்படி யாக
பாடிப்பாடி யறிவையெல்லாம் பங்குபங்காச் சொன்னேன்
பையல்பீர் முஹம்மதென்போன் பகரும் பிஸ்மிலக்குறமே
மெய்யான அறிவுதனை மேதினியிர் படிப்போர்
மெத்த மணங்கொண்டு புத்தி மேவிதைக் கேட்போர்
வையகத்தில் மவுத்துவரும் போதறிவைக் கேட்டு
வருந்தயிலே மதிமறந்த யிறந்தவருங் கூட

துய்யவன்றன் தூதரிறஸூல் பொருட்டி னாலே
சுன்னத்து ஜமாஅத்துடனே சூடனே சூழ்ந்த குருவாக
மெய்யாக சுவர்க்கத்தின் மேன்மையுள்ள பதவி
மெத்த வெற்றி பெற்றநபியுற்றகொலு சார்பில்
ஐயமறச் சுவர்க்கத்தின் யரசுகொலு வாக
அல்லாஹ் கொடுத்தருள்வானே ஆமீ னாமீன் ஆமீன்

குருவை பெற்றவர்களே எச்சரிக்கை. குரு தண்ணீர் பெருவெள்ளமாக போனால், உன்னை அடித்துக் கொண்டு போய்விடும். குருநெருப்பு தக்கபடி எரிந்தால் வெளிச்சம், தாறுமாறாய் போனால் உன்னை சுட்டெரிக்கும். குரு கனியும்தென்றல். நயமாக நின்றால் நல்லதொரு காற்று. தாறுமாறாய் வந்தால், புயலாய் உன்னை இல்லாமல் செய்துவிடும். குரு நல்லதொரு பாடல் உன்னை ஞானவானாய் மாற்றும். அதுவே

தாறுமாறாய்ப் போனால் பைத்தியமாக்கும். குரு நம்முள் ஞானம் நன்கு காக்கப்படுவாய். தாறுமாறாய் போனால் ஷைத்தான் போல் வீசப்படுவாய் இதுதான் உண்மை. குருவான ஞானவான்கள் மறைப்பார்கள், தக்கலை ஊரின் பீர்முஹம்மதென்போன் ஒழிக்காமல் சொல்லிவிட்டேன். பத்தொன்பது அறிவுடைய நிலையும் கலிமாவின் நிலையும் பிஸ்மியுடைய அறிவும் அதன் ஆக்கமான நிலையும் இன்னும் உலக வளங்கள் வழக்கத்தில் செய்யும் நிறை குறையும் மெய்க்குரு பொய்க்குருவென்ற தகவலையும் அல்லாஹ்வின் கிருபையால் அண்ணல் நபியின் பொருட்டால் ஸஹாபா பெருமக்களின் நினைவு கொண்டு நற்குருவாக நின்று மெய்யுருவான சுவர்க்கத்தின் வாழ்வை, வாழிமேல் வாழியென்று மகத்தான வெற்றிகள் பெற்று நபியின் ஆசியை சந்தேகமின்றி தந்தருள்வான் ஆமின்... ஆமின்...ஆமின்.

துஆ இரப்பு...

மலானியார்

ஆதி பெரியோனே ! ஆலம் நபிதந்தவனே !
ஓதிடும் வேதமதில்ஒளியாய் நிறைந்தவனே !
நீதியாய் பார்மீதில் நிலையான நீதவனே !
நாதியத்த எங்களுக்கு நலவு செவ்வாய் றஹ்மானே !

நூரே முகம்மதுவில் நூறான நூனவனே !
நாரான நரகை விட்டும் காத்திடும் காவலனே
சேரும் சுஜூதாதி ஷெய்கின் உஜூதாதி
கார்மானம் தந்தருளும் காமிலாயானவனே !

தாய் தந்தை நீயாகி நல்ல குருதானாகி
சேயான எங்கள் பிளை பெருத்தாளும் புண்ணியனே !
ஈறாறு கலையான எங்கள் சுவாசம் அதில்
ஈறாறு எழுத்துடனே கலிமாவாய் நடப்பவனே !

தேஞ்சாறும் பாஞ்சாறும் கலிமாவில் தானூரும்.
ஆன்மணுவாய் முதுகந்தண்டில் அடுக்கடுக்காயானவனே !
கஞ்சா நபீனுடனே கள்ளுண்டு சாகாமல்
தஞ்சாவூர் தானறியும் தருணம் தா தத்துவனே !

கல்லும்பிளை பொறுத்தும் கல்லா நிலை பொறுத்தும்
அல்லும் பகலுமென ஆதரிக்கும் ஆண்டவனே !
உன்வேதம் கற்றிடவும் உயர் தரஜா பெற்றிடவும்
கண்ணான கல்புக்குள்ளே குணம்தருவாய் கோனவனே !

தக்கபெரியோனே ! தம்புறானே எம்பிரானே !
சகராத்து வேளையிலே சஹாதத்தைத் தருபவனே !
உறங்கும் அந்த வேளையிலே உயிர் பிரியா திருந்திடவே
இறங்கி வந்தருள் தரணும் எந்தகத்து ஏகவனே !

கன்ஜுல் மக்பியாவில் ஹாமீமாய்யானவனே
என் ஜுவனுள்ளிருந்து எமையளும் ஆண்டவனே !
மன்னர் இரசூல் பொருட்டால் மனக்கடுவாய் மாய்ந்துவிழ
மனமுவந்து எங்கள் பிழை பொறுத்தாளும் ஆண்டவனே !

பாவியடியேன் செய்த பாவங்கள் பொறுத்து எந்தன்
அலியாரின் பொருட்டலே பொறுத்திருவாய் புண்ணியனே !
ஆவிகலையுமுன்னே அடைக்கலம் தா ஆண்டவனே !
அலிபுலாம் மீமுக்குள்ளே அஹமதாய் மறைந்தவனே

மக்க நபிநூரான மாண்புஹஸன் ஹுஸைன் பொருட்டால்
துக்கமாம் நரகை விட்டும் காப்பாற்று கவலனே !
இரணத்தைத் தருபவன் நீ ! இன்னல்கள் தீர்ப்பவன் நீ
மரணத்தின் உயிர்போக இலகுசெய்வாய் புண்ணியனே !

மவுத்தாகும் வேளையிலே மலஜலங்கள் அற்று நின்றன்
தவ்பாவின் திக்ரைத் தந்தருள்வாய் நாயகனே !
ஆரணதின் நற்குருவாய் பூரணிக்கும் முகையத்தீனை
நேர் காணும் உயர் நிலையும் நீ தந்திருவாய் கோனவனே !

கோரமான மஹ்ஷரிலே குவிந்திருக்கம் வேளையிலே
கோமான் நபி நிழலைத் தந்திடுவாய் கோனவனே !
கண்ணோயைக் குணமாக்கி கல்பு தனைத் தெளிவாக்கி
கண் மணியாம் நாயகத்தின் கருணை பெறச்செய்திடுவாய் !

இதயத்தின் பிணிபோக்கி இருமல் நோய் தான் போக்கி
இருதிவரை ஈமானில் இலங்கச்செய் என்னவனே !
ஏழை தான் எங்களுக்கு இரணத்தைச் செழிப்பாக்கி
காலை மாலைத்தெழுகையிலே கவ்பைத்தா காவலனே !

நடக்க பலமும் தந்து நல்ல மனத்திறனும் தந்து
அடக்முடனே வாழ நலவு செய்வாய் நல்லவனே !
உயிர் போகும் வேளையிலே உற்றார் அழும் போதினிலே
உயிரின் மேல் ஷகாதத்தை ஓதச்செய்வாய் வல்லவனே !

ஆலமுன் நூறுதனில் அண்ணல் நபி நிழலிலே
சீலமுடன் எங்களையும் சிறக்கச்செய் சீமானே !
கலிமா பொருள் தெரிந்த காமிலான ஷெய்குடனே
வலிமார் வாழ்வுதனை வாழச் செய்வாய் ரகுமானே !

யாஹூ அல்லாஹ்

மலானியார்

ஹூ வென்ற சாகரத்தில் நானென்ற நினைப்பு நூரே முகம்மதி
யாவை நோக்க நல்லாதொரு உடலாச்சு.

இல்மென்ற சாகரத்தில் நானென்ற நினைப்பு நூரே முகம்மதி
யாவை நோக்க நல்லதொரு கல்பாச்சு

நூர் என்ற சாகரத்தில் நானென்ற நினைப்பு நூரே முகம்மதி
யாவை நோக்க நல்லதொரு றூஹாச்சு

ஷுஹூதென்ற சாகரத்தில் நானென்ற நினைப்பு நூரேமுகம் மதி
யாவை நோக்க நல்ல தொரு நப்ஸாச்சு.

ஹக்கானே யாஹூ அல்லாஹ் கதீமுல் அமா வானவனே!
ஹல்கானில் உனையல்லால் காண்பதல்லால் வேறுமுண்டோ!

பக்குவமாய் பல பதமாய் பார்முழுதும் பூத்திருக்கும்
எக்காலம் எந்தகத்தில் வித்தான வித்தகனே

ஷிருஃபான கிருப்ரியாவில் கன்சுல் மஹ்பியாவில்
சிற்றான மீமுக்குள்ளே சிபாத்தான கமாலானோன்

அலிப் லாம் மீமுக்குள்ளே அகதாகி உஹதாகி
ஆலமெல்லாம் அற்புதமாய் வாஹிதியத்தானவனே!

நுக்கத்தென்னும் பரஞ்ஜோதி நூரனிபா யானதினால்
நுகத்தின் மேலிபாகி பின்மில்லாஹ் ஆனவனே !

ரூப்பூஹுான் குத்தூசன் சுகவாரி உஜூதியாவில்
சித்தான சித்தகனாய் ஜன்கவிமாவானவனே!

லவ்ஹூ கலமுமாகி லாமகாம் மீமுக்குள்ளே
லில்லின் விலா கொடியில் நீடொளியாய் நின்றவனே

ஹாமீம் நாஸூத்தாய் கலந்திருக்கும் மகைத்தில்
காமிலாய் ஜபருத்தாய் லாஹூத்தி லானவனே

தன்ஸீஹாய் தானிருந்து தஷ்பீகாய் கனிந்து வந்து
இன்சானின் தோற்றமதில் எல்லாமுமாய் நின்றவனே!

ஹூவான ஹூவுக்குள்ளே தம்கூத்து நூனுக்குள்ளே!
ஹாவான ராவுக்குள்ளே பாஹூத்தாய் நடந்தவனே!

லாஹூத்து வேளையிலே குன்னென் றொலிக்கையிலே
அர்ஷ் குர்சோடு ஜம்கூத்தி லானவனே!

ஆன்மம் பேசும்

மலானியார்

பிரமத்தின் உள்ளமையில் ! மனிதன் இரவல் !
விலகல் சிற்றின்பம். ஒன்றுதல் பேரின்பம்.
ஒன்றை ச்சுகித்து வேறென்றுடன் கலந்தால் மயக்கம்
ஒன்றைச்சுகித்து ஒன்றுடன் கலந்தால் ஆனந்தம்
ஞானம் என்பது அறிவின் ஆக்கம்
அறிவு இல்லாதவனுக்கு அனுபவம் இல்லை

சிந்தையும் மனமும் சேர்ந்தால் யோகம்
மனமும் வாக்கும் ஒத்தால் ஞானம்
யோகமும் ஞானமும் பக்தியின் படிக்கை
உடலும் உணர்வும் ஒத்தால் யாக்கை

பக்தியின் மூலம் முக்தி, முக்தி என்பது முடிவு
நாடு, வீடு, காடு, இவைகளை அறுத்து
தனித்து நிற்பதுதான் ஒன்றுதல்
சதா கண்ணைமூடி பார்ப்பது உள்வழி பயணித்தல்
உலகெல்லாம் ஒன்றென உய்வது உள்ளமையின் மெய்மை

பக்தியே ஆனந்தம் பரவசமே நிதானந்தம்
பக்தியும் பரவசமும் சச்சிதானந்தம்
பக்தி எல்லையற்ற பணிவு
முக்தி எல்லையற்ற ஞானம்
முக்தியின் வெளியில் மகான்களின் பாதத்தில் சமர்ப்பனம்

ஆனமத்தூய்மையின் மூலம் அறிவு நிறைவு பெறுகிறது
விவேகம் வேலைகளை முடித்துவிட்டு வெளியே வருகிறது
அனுபவம் மூலமே பிரம்ம நிலையை அடைவது
மனம் பிரபஞ்ச மாயை விட்டு தன்னை
இரட்சிக்க இட்சிக்கும் போது
மனிதன் சுதந்திரா மாகிறான்

மகான்களின் உபதேசத்தில் ஆகம, சாஸ்திரங்கள் உயிர் பெறும்.
குருவை ஒன்ருவது பிரமத்தை உணர்வது.
கள்ளப் புலனறுத்து கட்டாயமாய விடுபடுதல் ஆண்மாவின் யாசகம்
உலகை வென்றாலும் மனதிடம் தோற்றாலும் மதிமயங்கும்
மகான்களை அடைய மன்னுலகே சிறந்தது
உள்ளமையை உணர்ந்தவனுக்கும் எல்லாம் எதார்த்தம்
உணறாதவனுக்கு எல்லாம் மர்மம்.

அட்டை பட விளக்கம்

மலானியார்

பிரம்மத்தின் நாட்டம் இப்பிரபஞ்சம் உண்டாயிற்று. இப்பிரபஞ்சம் நிரம்ப பிரம்மத்தின் சக்தி, ரூபமாய் அரூபமாய் மாறி மாறி நிகழ்கின்றன. இந்த தொடக்கம் எந்த தொடக்கத்திலிருந்து தொடங்கின. என்பது தான் அட்டைப்படம்.பேரருளாளன் அல்லாஹ் தன்னைத் தான் அறியப்பட நாடிய போது நூரே முகம்மதியாவைப் படைத்தான்.இந்த நூரே முகம்மதியாவிலிருந்து தான் நுண்மைகளாகப் பல கோடிப் படைப்புக்ள் உண்டாயின. ஒரு மரபனுவைக் கொணடு தான் ஜீவ சக்திகள் எல்லாம் உண்டாயின. நுரே முகமதியா என்ற ஜெகச்ஜோதியிலிருந்து தான் எல்லா படைப்புகளும் உண்டாயின. இந்த படைப்புகள் தன்னைக் கவனிப்பதைக் கொண்டும் தன்னசைச் சுற்றியுள்ளவைகளைக் கவனிப்பதைக் கொண்டும் நூரே முகம்மதியாவை உணரும். அந்த நூரே முகம்மதியாவின் எதார்த்தத்தை உணரும் போது அல்லாஹ்வை உணர முடியும்.

அல்லாஹ்வின் ஜோதியிலிருந்து நான் தோன்றினேன்.என் ஜோதியிலிருந்து உலகத்திலுள்ள அணைத்து படைப்புக்களும் தோன்றின. (நபி மொழி)

நாம் எந்த மரபனுவிலிருந்து பிரிந்து வந்தோமோ அந்த மரபனுவில் தான் போய் சேர்வோம் என்பது விஞ்ஞானதத்துவம். அதே போல் நாம் எந்த நூரே முகம்மதியாவிலிருந்து பிரிந்து வந்தோமா அந்த நூரே முகம்மதியாவில் போய் சேர்ந்து நூரே முகம்மதியா என்ற அந்த பரஞ்ஜோதியோடு அல்லாஹ்வை நன்கு உணர்ந்து அறிவது தான் இப்பிரபஞ்சத்தில் அல்லாஹ்வை அறியும் நிலை.இந்த உண்மையை உணர்த்தும்விதத்தில் தான் அல்லாஹ்வை இப்பிரபஞ்சத்தைப் படைக்க நாடி மிக பிரமாண்டமான ஒரு கோளை படைத்தான். அந்த கோளிலிருந்து பல கோள்கள் பிரிந்தன எண்ணப் படமுடியாத

நட்சத்திர கூட்டங்கள் பிரிந்துவந்தன. மனிதன் ஜீவிக்கும் இந்த பூமிக் கோளும் அதிலிருந்து பிரிந்து வந்ததுதான் மனிதனின் பிறப்பை நாடியே இறைவன் இந்த கோள்களைப் படைத்தான்

ஒரு நாள் இந்த கோள்கள் வந்த இடத்திற்கே போய் சேரும். அப்போது ஒரு புள்ளியின் வடிவில் இந்தப் பிரபஞ்சம் தோற்றம் தரும்.அந்த புள்ளி தான் அட்டைப்படத்தின் உருண்டையான வடிவம். பேரருளாளனின் பார்வையில் எப்போதும் இப்பிரபஞ்சம் ஒரு புள்ளிதான். அதை உணர்தும் வகையில்தான் பிஸ்மில்லா என்று தொடங்கும் படி கட்டளையிட்டான்.

அறபி அட்சரத்தில் அலிபு என்ற முதல் அட்சரத்திற்கு அடுத்து வருவது பே (ப) என்ற அட்சரம். அந்த பே என்ற அட்சரத்தில் வரும் புள்ளிதான் இப்பிரபஞ்சத்தை புள்ளி என்ற வடிவாய் உணர்த்தும் வகையில் அல்லாஹ் அமைக்க நாடி அரபி அட்சரத்தில் அலிப் என்ற முதல் அட்சரத்திற்கு அடுத்து வருவது "பே" என்ற அச்சரம் அந்த பே என்ற அச்சரத்தில் அரும் புள்ளிதான் இப்பிரபஞ்சத்தை புள்ளி என்ற வடிவில் உணர்த்தும் வகையில் அல்லாஹ் அமைத்தான். இன்னும் அலிப் என்பதை அல்லாஹ் என்பதாகுவும் அலிப் அடுத்து வரும் பே என்பது அப்தியத்தை உணர்த்தும் வகையில். அவனே வேதத்தில் பிஸ்மில்லா என்று தொடங்கினான். அவன் படைத்த கோள்கள் அவன் நிர்ணத்தப்படியே நீந்திச்செல்கின்றன. இந்த பூமிக் கோளில் நூரே முகம்மதியாவாக அவனே நிலைத்தான். இதுவே பிரம்ம இரகசியம். காணும் இடத்திலெல்லாம் பிரம்மத்தின் பிரசன்னம். எங்கும் நீக்கமர அவனே நிறைந்தான். தான்மரை பொருளான இரகசியம் தான் என்பதை உணர்த்தும் வகையில் **நப்ஸ், ஷெய்த்தான் என்ற மாய திரைகளுக்குப் பின்னால் அவனே மறைந்தான்.**

நூரே முகம்மதியாவின் வெளிச்சத்தில் யார் இந்த மாயத்திறைகளைக் கடக்கின்றார்களோ அவர்கள் தான் அல்லாஹ்வை தரிசிப்பார்கள். பிரம்மத்தின் படைப்பில் தூல உலகு, சூட்சும உலகு என இருவகை . தூல உலகம் என்றால், காரண உலகம் (ஆலம ஷஹாதா) இந்த காரண உலகத்தைத் தொடர்ந்து காரிய உலகம், இருள் உலகம், ஒளி உலகம் என்பவை பல..

சூட்சும உலகம் என்பது, உயிர் உலகம், ஆன்ம உலகம், கற்பனை உலகம்,காதல் உலகம், கனவு உலகம், என்பவையாக தொடர்கின்றன. இது (ஆலமல் அம்ரு)

அல்லாஹ்வை அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் மனிதப்படைப்பின் உள்ளார்த்தமும், எதார்த்தமும். அது கலிமா என்ற பிரம்மடாண்டத்தில் சுழலும் சக்கரம். ஆகவேதான் பிரபஞ்சக் கோள்கள்சுழண்டுகோண்டே நகர்கின்றன .அட்டைப் படத்தை [illegible] கவனித்தால் இந்த பிரம்மாண்டமான உண்மை தெரியும்.

நாகூர் ஆண்டவர் பள்ளிவாசல்

காதிரிய்யா மெஞ்ஞானசபை அறக்கட்டளை

12/2, பண்பொழி ரோடு, பகுதாத் நகர்,

கடையநல்லூர். – 627 751. செல் : 9842861541